# உதயன்

சுடர் 30 கதிர் 339 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 14, சனிக்கிழமை 31.10.2015

இன்று கொவிசெத லொத்தர் மூலம்
சுப்பர் பரிசு
ரூ. 94,019,548.40
NLB
தேசிய லொத்தர் சபை



## இலங்கைத் தமிழ் பெண் ஆஸியில் நகர முதல்வரானார்

மெல்பேர்ன், ஒக்.31
ஆஸ்திரேலியாவின் மோர்லண்ட் நகர முதல்வராக, இலங்கையில் பிறந்த சமந்தா இரத்தினம் என்ற தமிழ்ப் பெண் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆஸ்திரேலியாவின் மோர்லண்ட் நகர மன்றத்தின் தெற்கு வட்டாரத்தின் உறுப்பினரான சமந்தா இரத்தினம் கிறீன் கட்சியின் பக். 24

# குடாநாட்டில் வயிற்றோட்ட பாதிப்பு தீவிரம்

## மழையை அடுத்து தாக்கம் மேலும் அதிகரிப்பு: சுட்டாறிய தண்ணீரைப் பருகுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ்.குடாநாட்டில் தற்போது பெய்து வரும் மழையை அடுத்து வயிற் றோட்டம் மற்றும் வயிற்றுளைவால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது மழை தொடர்வதால் அந்த நோய்களின் தாக்கம் கடுமையாக அதிகரித்துள்ளது.
எனவே சுட்டாறிய நீரைப் பருகுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்த குமாரன் பொது மக்களைக் கோரியுள்ளார்.
தொற்று மற்றும் கிருமித் தொற்றினால் வயிற்று ளைவு நோய் ஏற்படுகின் றது. கிருமித் தொற்றினா லும் சுகாதாரமற்ற உணவுப் பழக்கவழக்கங்களாலும் வயிற்றோட்டம் ஏற்படுகின் றது. எனவே இவற்றில் மிகக் கவனமாக இருக்குமா றும் பணிப்பாளர் தெரிவித் துள்ளார்.
மழையை அடுத்து குறித்த நோய்களின் அதிகரிப்புத் தொடர்பில் கேட்ட போது அவர் மேலும் தெரி வித்ததாவது:-
வயிற்றோட்டத்தினால் கடந்த ஜனவரியில் 446 பேரும், பெப்ரவரியில் 283 பேரும், மார்ச்சில் 278 பேரும், ஏப்ரலில் 274 பேரும், மே இல் 267 பேரும், ஜூனில் 518 பேரும், ஜூலையில் பக். 24

## மாங்குளம் பொலிஸில் புதுவித முறைப்பாடு

*வைத்தியசாலைக்கு வைத்தியர்களை நியமிக்கவில்லை என்று*

கிளிநொச்சி, ஒக்.31
தமது பகுதி வைத்தியசாலையில் வைத்தியர்களை நியமிக்கவில்லை என்று தெரிவித்து நட்டாங்கண்டல் மக்கள் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.
இது தமது பொலிஸ் நிலையத்துக்குக் கிடைத்துள்ள புதுவிதமான முறைப்பாடு எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.
மாங்குளம் நட்டாங்கண்டல் பகுதியில் உள்ள வைத்தி பக். 2

# போரினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்குத் தீர்வு

## அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஒக்.31
போரினால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்குத் தீர்வு வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.
உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள உருவாகாமை தொடர்பிலான பொறிமுறையில் முஸ்லிம் சமூகமும் ஓர் முக்கியமான பங்குதாரர்கள் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.
யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்கள் 48 மணித்தியாலக் காலக்கெடு வில் வெளியேற்றப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியா கும் நிகழ்வில் பங்கேற்ற போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சுமார் 75ஆயிரம் முஸ்லிம்களைத் தமிழீழ விடுதலைப் பக். 24

## 10 ஆண்டுகளாக யாழில் சீரான மழை இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ்.மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளாக சீரான மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறவில்லை. அத்துடன் 2004 ஆம் ஆண்டே அதிகளவிலான மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.
அதன் பின்னரான - கடந்த 5 ஆண்டு காலப் பகுதியில் ஆயிரத்து 500 மில்லி மீற்றருக்கு குறைவான மழை வீழ்ச்சியே பதிவாகி வருவதாக வளி மண் டலவியல் திணைக்களம் தெரி வித்துள்ளது.
உலகளாவிய ரீதியில் பக். 24

## வடக்கு மதுவரி ஆணையாளர் இலஞ்சக் குற்றச்சாட்டில் கைது

யாழ்ப்பாணம், ஒக் 31
வடக்கு மாகாண மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர் இலஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட் டுள்ளார்.
கொழும்பில் இருந்து வந்த லஞ்ச ஊழல் தடுப்புப் பிரிவினராலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
நேற்று குறித்த ஒரு தொகைப் பணத்தை இலஞ்சமாகப் பெற்றவேளையே அவர் கைது செய்யப்பட்டதாகக் பக். 24

# சவால்களை முறியடிக்க விரைவில் சர்வமதச் சபை

## அமைக்கிறார் ஜனாதிபதி மைத்திரி



கொழும்பு, ஒக். 31
நாட்டின் தற்போதைய சவால்களை வெற்றி கொள்வதற்கு 25 பேரைக் கொண்ட சர்வ மதச் சபையொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இணக்கம் எட்டப்பட்டுள் ளது. இதற்கமைய விரைவில இந்தச் சர்வமதச் சபை அமை யும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள் ளார்.
ஜெனிவா மனித உரிமைகள் அறிக்கையின் மூலம் சமர்ப் பிக்கப்பட்டுள்ள பிரேரணைகள் மற்றும் அதன் சவால்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், சர்வ மதத் தலைவர்களுக்குமிடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக் கிழமை பக். 24

# கண்டி தமிழ்ப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள்

## அடிக்கல் நடப்பட்டதால் பதற்றம்

கொழும்பு, ஒக், 31
கண்டி தெல்வத்தை தமிழ்ப் பிரதேசத்தில் சிங்கள மக்கள் திட்டமிட்டு குடியேற்றப்பட்டுவருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கான அடிக்கல் அங்கு நேற்று நடப்பட்டதால் அப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
குறித்த பகுதியில் சிறுபான்மையினத்தவர்களுக்குச் சொந்தமான காணிகள் சில பெரும்பான்மையினத்தவர்களுக்குப் பிரித்து கொடுக்கப்பட்டுள்ளமையைத் தொடர்ந்தே அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் தேசிய ஐக்கிய பக். 24

# கைதிகள் முதற் கட்டமாக பிணையில் வெளிவரட்டும்

## அமைச்சர் மனோ தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.31
தமிழ் கைதிகளின் விடுதலையை அரசுக்குள் அங்கம் வகிக்கும் ஒரு தரப்பினர் கடுமையாக எதிர்க்கின்றனர். எனவே முதற் கட்டமாக தமிழ் அரசியல் கைதிகள் பிணை அனுமதியைப் பெற்று வெளியே வரட்டும் என தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நீண்ட காலமாகச் சிறையில் இளமைக் காலத்தைக் கழித்து விட்ட காரணத்தால் அவர்களுக்கு ஒரு நட்டஈடு வழங்கப் படவேண்டும். அதுவே எமது நிலைப்பாடு. ஒரு அரசின் பக். 24

# பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் கைதான இளைஞர் நிரபராதி

## வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31
சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு 6 வருடங்களாக விளக்கமறியலில் இருந்த நபர் விசாரணைகளின் பின்னர் நிரபராதியென இனங்காணப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.
வவுனியா மேல் நீதிமன்றில் நீதிபதி அ.பிரேமசங்கர் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் தீர்ப்புக்காக எடுத்துக்கொள் ளப்பட்டது. பக். 24

1 to 1 Free
31.10.2015
ஒரு லார்ஜ் பீற்சாவிற்கு ஒரு சிறிய பீற்சாவும் குளிர்பானமும் இலவசம்.
021 22 16 700
நாகரீகமான சூழலில் குடும்பத்துடன் உண்டு மகிழ
Village Style Restuarant
128, Palaly Rd, Thirunelveli.

# மயிலிட்டித் துறையை மாற்ற ஒருபோதும் சம்மதம் இல்லை

## கருத்துக்களை திரிபுபடுத்துகிறது கடற்படை என மீனவர்கள் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஒக். 30
மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை வேறு இடத்தில் மாற்றியமைப்பதற்கு மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்றும் அதிகாரிகளே இதில் குழப்பங்களை விளைவிக்க முயற்சிக்கிறார்கள் என்றும் கடற்படையினர் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களை மீனவர் சங்கங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன.
வலிகாமம் வடக்குப் பகுதியில் காங்கேசன்துறைக்கு அண்மையில் உள்ளது மீன்பிடித் துறைமுகமான மயிலிட்டி. 1980 களில் நாட்டின் மீன்பிடி உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு இந்தத் துறைமுகத்தின் வழியாகவே மேற்கொள்ளப் பட்டது என்றுகூறப்படுகின்றது. ஆனால் 1990ஆம் ஆண்டு முதல் இந்தத் துறைமுகம் உள்ளிட்ட பகுதியை கடற் படையினரும் இராணுவத்தினரும் தம் வசப்படுத்தி வைத்துள்ளனர்.
மயிலிட்டியைச் சேர்ந்த மீனவக் குடும்பங்களும் ஏனையோரும் கடந்த 25 ஆண்டுகளாகஇடம்பெயர்ந்து பல்வேறு பக். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்த சம்பளம் கோருகிறார் வடக்கு பிரதி அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஒக். 31

ஏனைய மாகாணங்களின் பிரதி அவைத் தலைவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளத் தொகையே தனக்கும் வழங்கப்படவேண்டும் எனக் கோரியுள்ள வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், அவ்வாறு அதிகரித்த அடிப்படைச் சம்பளம் வழங்கப்படும் போது நிலுவைக் கொடுப்பனவையும் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பளிகக்காரவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவரான எனக்கு, நாட்டின் ஏனைய 8 மாகாணங்களின் பிரதி அவைத் தலைவர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைச் சம்பளத்தைவிடக் குறைவான தொகையே வழங்கப்படுகின்றது. கிழக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவருக்கு அடிப்படைச் சம்பளமாக 42 ஆயிரத்து 335 ரூபா வழங்கப்படுகின்றபோதும் எனக்கு 31 ஆயிரத்து 750 ரூபாவே வழங்கப்படுகின்றது.

இலங்கை என்ற ஒரே நாட்டுக்குள் மாகாண சபைகளின் பிரதி அவைத் தலைவர்களுக்கு ஒரே அடிப்படைச் சம்பளம் வழங்கப்படவேண்டும். கிழக்கு மாகாண சபையுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திய பிறகு எனக்குரிய அடிப்படைச் சம்பள மாற்றத்தையும் இன்று வரையான நிலுவைகளையும் பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாக ஆளுநருக்கு எழுதியுள்ள கடிதத்தில் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன் தெரிவித்துள்ளர்.

(த-5-101)

# தாராளமான உடற்பயிற்சி மாணவர்களுக்கு அவசியம்

## போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறிவுரை

யாழ்ப்பாணம், ஒக். 31

பாடசாலை மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள் மட்டுமன்றி அரச உத்தியோகத்தர்களிலும் பலரது உணவுப் பழக்கவழக்கம் மாற வேண்டும். அவர்கள் தாராளமாக உடற்பயிற்சி செய்யவேண்டும். அப்போதுதான் பாரிசவாதம் உள்ளிட்ட நோயிலிருந்து பாதுகாத்துக்கொள்ளலாம் என்று யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.



யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல வருடங்களுக்கு முன்னர் அனைவரும் சைக்கிள்களில் பயணமானார்கள். தற்போது மோட்டார் சைக்கிள்களிலும் வாகனங்களிலும் செல்கின்றனர். பலர் கணினியுடனும் தொலைக்காட்சியுடனும் உள்ளனர். அவர்கள் இவற்றிலிருந்து மாறவேண்டும். இவற்றைத் தடுப்பதன் மூலமாகவும் பாரிசவாதம் ஏற்படுவதிலிருந்து தப்ப முடியும்.

இங்கு கிடைக்கும் இயற்கை யான உணவுகளையே அனைவரும் உண்ணப் பழகவேண்டும். செயற்கையான உரம் பாவித்து உற்பத்தி செய்யும் உணவுகளையும் அதிகளவு கொழுப்பு உள்ள உணவையும் தவிர்க்க வேண்டும்.

வட பகுதியில் உணவுப்பழக்க வழக்கங்களில் மாற்றம்வேண்டும். அதிக கொழுப்புள்ள உணவு மற்றும் சோறு உண்கிறார்கள். அவற்றைத் தவிர்க்க வேண்டும்.

போதனா வைத்தியசாலையில் பாரிசவாதத்துக்கு எனப் புதிய விடுதிகளை அமைக்கச் சுகாதார அமைச்சுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது. ஊனமுற்றவர்களை ஒதுக்கிவைப்பது மாறவேண்டும். அரச திணைக்களங்களில் உள்ளவர்கள், கட்டடப் பணிகளில் ஈடுபடுபவர்கள் இதனைக் கவனிக்கவேண்டும். பாரிசவாதம் வந்தால் கால்கள் இயங்காத நிலை காணப்படும். அத்தகையவர்களைப் பராமரிக்க வீட்டிலுள்ளவர் கள் முன்வர வேண்டும்-என்றார்.

(த-4)

# தீபாவளிக்கு முன்னர் கைதிகளை விடுவிக்குக

## இந்து சமயப் பேரவை கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஒக்.31

இலங்கை அரசு கைதிகள் விவகாரத்தைச் சாட்டுக்கள் கூறி இழுத்தடிப்புச் செய்யாமல் தீபாவளி தினத்துக்கு முன்னர் அவர்களை விடுதலை செய்யவேண்டும் என யாழ். இந்து சமயப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அது வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எதிர்வரும் தீபாவளி தினத்தைத் தமிழ் அரசியல் கைதிகள் தத்தமது வீடுகளில் தமது உறவினர்களுடன் இணைந்து கொண்டாடக்கூடிய வகையில் உடனடியாக விடுதலை செய்யப்பொருத்தமான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

நீண்ட நெடுநாள்களாகத் தீர்க்கப்படாத இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க அரசு உண்மையாகவே செயற்படுகின்றது என்பதையும், அராஜக நடவடிக்கைகள் முடிவு பெற்றுள்ளதையும் வெளிக்காட்ட இது ஒரு சிறந்த சந்தர்ப்பம் என்று கருதுகிறோம்.

மேலும் நரகாசூரனின் - அராஜக ஆட்சி முடிவுக்கு வந்த நாளை உலகிலுள்ள இந்துக்கள் பெருமெடுப்பில் போற்றிவருகின்றனர். இந்த நாளை முன்னிட்டுச் சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டால் உலகிலுள்ள இந்துக்கள் பெரும் மகிழ்ச்சி அடைவார்கள்- எனக் கூறப்பட்டுள்ளது.

(ஜ-ரி6)




யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டுக் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டது. சின்ன முகைதீன் ஜும்மா பள்ளி வாசலின் நடைபெற்ற தொழுகையின் பின்னர் ஆரம்பமான இந்தப் போராட்டம் ஐந்து சந்திப்பகுதியில் நிறைவடைந்தது. இதன்போது போராட்டக்காரர்கள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு தங்களது பிரச்சினையை ஆராய முன்வர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். (த-10)

# போதனா வைத்தியசாலைக்கு வரும் பார்வையாளர்களுக்கு உரிய வசதிகள்

யாழ்ப்பாணம், ஒக். 31

யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ளவர்களைப் பார்வையாளர் நேரத்தில் பார்வையிடச் செல்பவர்கள் வெளியில் நின்று கஷ்டங்களை எதிர்கொள்வதால், அந்த நேரத்தில் அவர்கள் வைத்தியசாலை வளாகத்தினுள் நிற்கக் கூடியதாக ஏற்பாடுகள் செய்யப்படுவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடப்பற்றாக்குறை உள்ளது. வைத்தியசாலையில் தற்போது மதில் கட்டப்பட்டு வருகின்றது. வைத்திய சாலை விடுதிகளில் உள்ளவர்களைப் பார்வையிட அவர்களது உறவுகள், நண்பர்கள் வைத்தியசாலைக்கு வருகிறார்கள். பார்வையாளர் நேரம் வரும்வரை அவர்கள் வைத்தியசாலைக்கு வெளியே காத்திருக்கவேண்டியுள்ளது. மழை, வெயில் காரணமாக அது உகந்த சூழ்நிலையாக இல்லை. எனவே நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள், அந்த நேரத்தில் வெளியே காத்திருக்காது வைத்தியசாலை வளாகத்தினுள்ளே நின்று செல்லக் கூடியதாக ஏற்பாடு செய்யத்திட்டமிடப்பட்டுள்ளது. அவர் களுக்கென கூடாரம் போன்ற ஒன்றை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றார். (த-4)

# வெள்ளத்தில் மிதக்கிறது வவுனியா நவீன சந்தை



வவுனியா, ஒக் 31

வவுனியா நகரத்தில் உள்ள நவீன சந்தைப் பகுதியில் வெள்ள நீர் தேங்கி நிற்பதால் பலரும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

வவுனியா நவீன சந்தைப் பகுதிக்குச் செல்லும் நுழைவாயிலை அண்மித்த பகுதியில் உள்ள வீதியில் குழிகள் பல காணப்படுவதால் அதில் வெள்ளநீர் தேங்கி நின்று சந்தைக்கு வரும் நுகர்வோர் மற்றும் விற்பனையாளர்கள், வாகனச் சாரதிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இப்பகுதியில் சீரான பாதை அமைக்கப்படாமையாலேயே வீதியில் பள்ளம் காணப்பட்டு அதில் நீர் தேங்கி இத்தகைய அசௌகரியங்கள் ஏற்படுவதாகவும், இதனைத் திருத்தச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவில்லை எனவும் மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக வவுனியா நகரச் சபைச் செயலாளர் க.சத்தியசீலனுடன் தொடர்பு கொண்டுகேட்டபோது,

இது ஒரு பெரிய பிரச்சினையில்லை. ஒரு சிலருடைய கருத்தாகும். இப்பகுதியில் மழைகாலத்துக்குப் பின்னர் மண் போட்டு நிரப்பி நீர் தேங்காமல் செய்வோம். வவுனியாவில் இது போன்று பல இடங்கள் உள்ளன. அவற்றோடு ஒப்பிடும்போது இது ஒரு சிறிய பிரச்சினையே - என்றார். (த-402)

# படையினரின் அணைகளை அகற்றும் பணிகள் ஆரம்பம்

வரணி, ஒக் 31

வரணி,எழுதுமட்டுவாள் பகுதிகளில் படையினரால் அமைக்கப்பட்ட மண் அணைகள் கடந்த இருநாள்களாக இரண்டு மில்லியன் ரூபா செலவில் மாவட்ட செயலக ஏற்பாட்டில் அகற்றப்படுகின்றன.

1996ஆம் ஆண்டு முதல் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்கப்பட்ட வரணி,எழுதுமட்டுவாள் ஆகிய மக்கள் வாழ்விடப் பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் படையினர் நிலைகொண்டிருந்ததோடு அங்கு பாதுகாப்புக்காகப் பெரும் மண் தடுப்பணைகளும் அமைக்கப்பட்டிருந்தன .

எனினும் இப்பகுதியில் படையினர் வெளியேறியபோதும் அவர்களால் அமைக்கப்பட்ட தடுப்பணைகள் அகற்றப்படாமலேயே நீண்ட காலமாக இருந்தன .

குறித்த தடுப்பணைகளை அகற்றி உதவுமாறு பிரதேச மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக இரு கிராமங்களிலும் கடந்த இரு நாள்களும் கனரக வாகனங்களின் உதவியுன் இந்தத் தடுப்பு அணைகள் அகற்றப்படுகின்றன.

இந்தப் பணிக்கு மட்டும் இரண்டு மில்லியன் ரூபா செலவு மாவட்டச் செயலகத்திற்கு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்குவதில் சிக்கல் இல்லை

## சுட்டிக்காட்டுகிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம்,ஒக்.31

தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் அரசு வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும். சட்டமா அதிபர் திணைக்களம்தான் கைதிகள் விடுதலை தொடர்பில் முடிவு எடுக்க வேண்டும் என்பதில்லை. ஜனாதிபதியும் அமைச்சரவையும் தீர்மானம் எடுத்தால் போதும். அவர்களை விடுதலை செய்ய முடியும். அதில் எந்தச் சிக்கலும் இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்

நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நீர்வேலி அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள் இராணுவத்தளபதி கோத்தபாய ராஜபக்ச மற்றும் ஏனைய முப்படையினருக்கு எந்தவித தண்டனையும் வழங்கப்படமாட்டாது என்ற விடயம் அண்மையில் சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதுதவிர, கடந்த செப்ரெம்பர் மாதம் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கையின் அனுசரணையோடு கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான நீதிமன்றச் செயற்பாடுகளின்போது வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்கள் பங்கெடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் இந்த விசாரணைகள் கலப்பின நீதிமன்றச் செயற்பாடுகளூடாகத்தான் அமையும். இந்தத் தீர்மானம் உள்ளக விசாரணையாக அமையாது எனத் தமிழரசுக்கட்சி வரவேற்றது. ஆனால் தற்போது அரசுவிசாரணைச்செயற்பாடுகளில் சர்வதேச நீதிபதிகள் பார்வையாளர்களாகவும் ஆலோசனை வழங்குபவர்களாகவும் மாத்திரம் தான் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்க முடியுமென தெரிவித்துள்ளது.



இந்த கருத்துக்கள் ஐ.நா சபையின் தீர்மானம் எவ்வாறு நிறைவேற்றப்படப் போகின்றது என்ற கேள்வியைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.இது தொடர்பிலே அரசின் நிலைப்பாட்டை அறிந்து எதிர்க்கட்சித் தலைவர் தமிழ் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

நீண்டகாலமாகச் சிறைகளிலே அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பொதுமன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும்.போர் நடைபெற்ற ஏனைய உலக நாடுகளிலே போர் முடிவடைந்ததன் பிற்பாடு பொது மன்னிப்பின் அடிப்படையிலே விடுதலை செய்கின்ற நடைமுறை இருந்து வருகின்றது. இந்த நிலையிலே இலங்கை அரசு மட்டும் தமிழர்களை இரண்டாம் பட்சமாக நடத்துவது வேதனைக்குரிய விடயம்.

தமிழ் அரசியல் கைதிகள் ஆரம்பத்திலே தமது விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த போது பல அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னணியிலே அரசு கைதிகளைப்பொது மன்னிப்பின் அடிப்படையில் நவம்பர் மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னதாக விடுதலை செய்வதாகத் தமிழ் அரசியல் தலைமைகளிடமும் சிறைச்சாலை அதிகாரிகளிடமும் எழுத்து மூலம் அறிவித்ததன் பின்னர்-கைதிகள் போராட்டத்தைக் கைவிட்டனர். ஆனால், இன்று பொது மன்னிப்பு வழங்கமுடியாது. பிணையிலே அவர்களை விடுதலை செய்யலாம் என்று கூறியுள்ளனர். இதனை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்காகக் கைதிகளைப் பொது மன்னிப்பில் விடுதலை செய்தால் குற்றஞ் சுமத்தப்பட்ட இராணுவத்தினரையும் மன்னிக்க வேண்டும் என்ற பேரம் பேசல் இடம்பெற்றிருக்கின்றது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இதுதவிர தற்போது தமிழ் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை. சிறைகளிலே அடைக்கப்பட்டுள்ளோர் அனைவரும் ஏதோ ஒரு குற்றத்துடன் சம்பந்தப்பட்டவர்கள்தான் என்ற சாரப்பட அரசு கருத்துக் கூறி வருகின்றது. இதனையும் ஏற்றுக்கொள்ளமுடியாது.அவ்வாறு குற்றம் இழைத்திருந்தால் அவர்கள் தவிர்ந்த ஏனையோரை விரைவாக விடுதலை செய்ய வேண்டும்.

சட்டமா அதிபர் திணைக்களம் தான் கைதிகள் விடுதலை தொடர்பில் முடிவு எடுக்க வேண்டும் என்பதில்லை.கைதிகளின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியும் அமைச்சரவையும் தீர்மானம் எடுத்தால் போதும். அவர்களை விடுதலை செய்ய முடியும் - என்றார்.

அத்துடன் சுரேஸ் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல். எவ் அணி ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து புதிய கூட்டணி அமைக்க இருப்பதாக அண்மையிலே இணையத் தளங்களில் செய்தி வெளியாகி இருந்தன. இது முற்றிலும் தவறான செய்தி, கருத்து.நாங்கள் இது தொடர்பில் ஆனந்த சங்கரியிடம் பேசவில்லை. இது அவருடைய தனிப்பட்ட விடயம்.அதற்கு நாங்கள் பொறுப்பாக முடியாது - என்றார். (த-ரி - 2)



# மாற்றுத் திறனாளிகளின் மலசலகூட வசதிகளுக்காக தலா ஒரு லட்சத்து 20ஆயிரம்

யாழ்ப்பாணம், ஒக். 31

வடக்கில் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அணுகு வசதி கொண்ட மலசலகூட (கொமேட்) தேவையுடையோருக்கு தலா ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா வழங்கப்படுவதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்தகாலப் போர் காரணமாக வடக்கில் பலர் மாற்றுத்திறனாளிகள் ஆக்கப்பட்டுள்ளனர். அவர்களில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட மற்றும் கால்கள் மடித்து அமரமுடியாத மாற்றுத்திறனாளிகள் ஒவ்வொருவரும் வீட்டில் அணுகுமுறை கொண்ட மலசலகூடம் (கொமேட்) அமைப்பதற்கே சுகாதர அமைச்சு இந்த நிதியுதவியை வழங்குவதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.

குறித்த மலசல கூடத்தை அமைப்பதற்கு மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா தேவைப்படுகின்ற போதும், சுகாதார அமைச்சு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா வழங்குவதாகவும், மிகுதிப் பணத்தை அவர்களே செலுத்தி அமைக்க வேண்டும் என்றும் தெரிவித்த அமைச்சின் செயலாளர், இந்த நிதியுதவி கட்டம் கட்டமாகவே வழங்கப்படுவதாகவும் கூறினார்.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 79 மாற்றுத் திறனாளிகளும், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் 69 மாற்றுத் திறனாளிகளும் தெரிவுசெய்யப்பட்டு இதுவரை 178 பேருக்குக் குறித்த உதவித்திட்டத்துக்கான காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தக் காசோலைகளை வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வழங்கினார்.

(த-21)

# முதலமைச்சர் தலைமையில் மடுவில் நடமாடும் சேவை

மன்னார், ஒக். 31

வடக்கு மாகாண சபையும் மன்னார் மாவட்டச் செயலகமும் இணைந்து மன்னார் மடு பிரதேச மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடமாடும் சேவை ஒன்றை வடக்கு முதலமைச்சர் தலைமையில் நேற்று நடத்தின.

வடக்கு மக்களின் குறைகளை அவர்களுடைய பகுதிகளுக்கு நேரில் சென்று கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்யும் செயற்றிட்டம் ஒன்று வடக்கு முதலமைச்சரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செயற்றிட்டத்தின் அடிப்படையில் நேற்று மன்னார் மாவட்டத்தில் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள பொது மக்களுடைய தேவைகள், அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சர், அமைச்சர்கள், மாவட்டச் செயலக அதிகாரிகள் அடங்கிய குழு குறித்த பிரதேசத்துக்குச் சென்று நடமாடும் சேவையை நடத்தியது.

இந்த நடமாடும் சேவை நேற்றுக் காலை மன்னார் தட்சணாமருதமடு பாலம்பிட்டி அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றது.



குறித்த இந்த நடமாடும் சேவையில் முதலமைச்சரின் அமைச்சு செயலகம், மீன்பிடி போக்குவரத்து அமைச்சின் செயலகம், சுகாதார அமைச்சின் செயலகம் மற்றும் மருந்தகம், விவசாய அமைச்சின் செயலகம் மற்றும் கண்காட்சி, கல்வி அமைச்சின் செயலகம், பிரதம செயலாளர் செயலகம், மடு பிரதேச செயலக சேவைகள், தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், சமநல சேவைகள், தொழில் திணைக்கள சேவைகள், கிராம அபிவிருத்தித் திணைக்கள சேவைகள், நீர்வளங்கள் வடிகாலமைப்புச் சபையின் சேவைகள், பிராந்திய நீரியல் இன விரிவாக்கல் நிலையச் சேவைகள் (நன்னீர் மீன் வளர்ப்பு), திருமணப் பதிவுகள், கடவுச்சீட்டு, சமுர்த்தி சேவைகள், பொலிஸ் சேவைகள், அஞ்சல் திணைக்களச் சேவைகள், போக்குவரத்துச் சேவை ஆகிய திணைக்களங்கள், அமைச்சுக்களில் பொதுமக்களுக்கு உள்ள பிரச்சினைகள், தேவைகள் போன்றவை ஆராயப்பட்டு நிவர்த்தி செய்யப்பட்டன.

இதன்போது வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாண மீன்பிடி போக்கு வரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வடக்கு மாகாணசபை உறுப்பினர் சி.சிவமோகன், வடக்கு பிரதம செயலாளர் எஸ்.பத்திநாதன், மடு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி, அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(த-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாறினாலும் பயன் கிட்டவில்லை

## கூறுகிறார் கலையரசன்

அம்பாறை, ஒக். 31

கடந்த ஆட்சியிலே இருந்த அரசின் அராஜகப்போக்கினால் எங்களுடைய சமூகத்தை வழிநடத்த முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. தற்போது நிலைமை மாறி ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் நாங்கள் சில விடயங்களைச் சாதிக்க முடியாமல்உள்ளது எனதமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்துள்ளார்.

அக்கரைப்பற்று விவேகானந்த வித்தியாலயத்துக்குக் கடந்த புதன்கிழமை சென்ற கலையரசன் புலமைப்பரீட்சையில் திருக்கோவில் வலயத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற மாணவி உட்பட சித்தியடைந்த 4 மாணவர்கள் மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற 11 மாணவர்களை பாடசாலை அதிபர் கே.தவ்ராசா தலைமையில் சந்தித்து கேடயம் மற்றும் பணம் வழங்கிப் பாராட்டி உரையாற்றினார். அப்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையிலே,

பல மகாவித்தியாலயங்கள் இருக்கின்றன. ஆனால்அங்கு ஒரு மாணவன் கூட தரம் 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற முடியாத நிலை உள்ளது. ஆனால் இந்தப் பாடசாலையைப் பார்க்கின்றபோது குறைந்த வளங்கள் இருந்தபோதும் நிறைந்த புலமை கொண்ட மாணவர்களை இந்த ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் சமூகத்துக்காகக் கொடுத்திருக்கிறார்கள். தமிழ் மக்கள் கல்வியிலே உயர்வானவர் கள். அவ்வாறான சூழலில் இந்த நாட்டிலே ஏற்பட்ட உள்நாட்டுப் போர்ச் சூழல் எங்களை மிகவும் பாதித்தது. இந்த நிலைமை மாற் றியமைக்க வேண்டும்.

இந்த நாட்டில் போர்ச் சூழல் காரணமாக பல தமிழ் மக்கள் வாழ முடியாது வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளார்கள். அவ்வாறு தஞ்சம் புகுந்தாலும் தமிழையும் தமிழ் பற்றையும் தமிழ் தேசியத்தையும் வளர்க்க வேண்டுமென்பதற்காக 'தேன்மதுரத்தமிழ் ஓசை உலகெங்கும் பரவச் செய்வோம்' என்ற அடிப்படையில் புலம் பெயர் உறவுகள் அந்தப் பணியைச் செய்து கொண்டுள்ளனர். இந்த நாட்டில் தமிழர்கள் நிலையாக வாழவேண்டும்- என்றார். (த-10)

## மாவடி ஆறு அணைக்கட்டு ஆஸி. தூதுவரினால் திறப்பு



மட்டக்களப்பு, ஒக்.31

புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் (ஐ.ஓ.எம்.) ஊடாக ஆஸ்திரேலிய உதவியின் நிதியில் மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித்திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட மண்முனை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாவடி ஆறு அணைக்கட்டு திறந்துவைக்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை ஆஸ்திரேலியத் தூதுவர் றொபின் முடியினால் இந்த அணைக்கட்டுத் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்துக்குப் பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலியத் தூதுவர் திருமதி றொபின் மூடி மாவட்டத்தில் அணைக்கட்டுத் திறப்பு உட்படப் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டார்.

5.2 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட இந்த அணைக்கட்டின் மூலம் வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவின் இலுப்பையடிச் சேனை பிரதேசத்தின் 300க்கும் மேற்பட்ட ஏக்கர் வயல் நிலங்களில் வேளாண்மை செய்யக் கூடியதாக இருப்பதுடன், இந்தப் பிரதேசத்தில் ஏற்படும் வெள்ளப்பாதிப்பும் தவிர்க்கப்படும்எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். கிரிதரன், மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம், ஆஸ்திரேலியாவின் இலங்கை மற் றும் மாலை தீவுக்கான கவுன்சிலர், புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் இலங்கைக்கான பிரதிநிதி குஸ்ப்பி குரோசிற்றி, மண்முனை மேற்கு பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.நிர்மல்ராஜ், மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.சுதர்சன், புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஜெயராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

6 கதவுகளைக் கொண்டதாக 12 மீற்றர் நீளத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவடி ஆறு அணைக் கட்டின் ஊடாக தாந்தாமலை, கரடியனாறு, நல்லதண்ணியோடை, அடைச்சகல் ஆகிய குளங்களின் நீர், வேறு பிரதேசங்களுக்குச் செல்கிறது. (த-10)

## கிழக்கு விவசாய அமைச்சர் கதிரவெளிக்குப் பயணம்

மட்டக்களப்பு, ஒக்.31

கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமாகிய துரைராசசிங்கம் கதிரவெளி பிரதேச வைத்தியசாலைக்கு களப் பயணம் மேற்கொண்டு அதன் குறை நிறைகளை வைத்திய சாலை வைத்தியர் மற்றும் ஊழியர்கள் பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

இதன்போது குறித்த வைத்தியசாலையில் நாளாந்தம் 75க்கும் மேற்பட்ட நோயாளிகள் வருவதாகவும், ஒரு வைத்தியரே கடமையில் இருப்பதாகவும், வைத்திய சாலைக்கு உரிய கட்டடத் தொகுதிகளும் விருத்தி செய்யப்பட வேண்டும் எனவும் வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

அத்துடன் இங்கு தாதியர்கள், மருந்து வழங்குநர்கள் எவரும் இல்லை எனவும்,வைத்தியசாலைக்கு கதிரவெளியைச் சுற்றியுள்ள சுமார் எட்டு கிராமத்து மக்கள் வருகை தந்து மருத்துவம் பெறுகின்றார்கள் எனவும்,எனவே வைத்தியசாலைக்கு உரிய வசதிகள் செய்து தருவதுடன் தரமுயர்த்தப்படவேண்டும் எனவும் மக் கள் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது அமைச்சர், பிராந்தியத்துக்குப் பொறுப்பான வைத்திய அதிகாரியைத் தொடர்பு கொண்டு இது தொடர்பில் வினவியபோது எதிர்வரும் டிசெம்பர் மாதம் அளவில் இந்த வைத்தியசாலைக்கு இன்னுமொரு வைத்தியர் நியமிக்கப்படுவதுடன் மருந்து வழங்குபவர் தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார். (த-10)



சங்கானை கோட்ட முன்பள்ளியின் கண்காட்சியும் கலைநிகழ்வும் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்துகொண்டார். அத்துடன் மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கினார். (த-10)

## முல்லைத்தீவில் கரையொதுங்கிய திமிங்கிலம் மீண்டும் கடலுக்குள்

*8 மணிநேரப் போராட்டத்தின் பின் விடப்பட்டது*



முல்லைத்தீவு, ஒக்.31

முல்லைத்தீவு, கொக்கிளாய் பகுதியில் மீனவர்களின் வலையில் சிக்கி உயிருடன் கரையொதுங்கிய 70 அடிநீளமானதிமிங்கிலம் ஒன்று 8 மணிநேரப் போராட்டத்தின் பின்னர், கடலுக்குள் விடப்பட்டது.

ஆழ்கடலில் மீனவர்களின் வலையில் சிக்கிய 70 அடி நீள திமிங்கிலம், கடந்த 23ஆம் திகதி கடுமையான அலைகளால் கரைக்கு இழுத்து வரப்பட்டது.

இந்தத் தகவலை அறிந்த முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், முல்லைத்தீவுக் கடற்படைகளின் தலைமையகத் தளபதி மற்றும் அதிகாரிகள், உயிருடன் இருந்த திமிங்கிலத்தைக் கடலுக்குள் விடும் முயற்சியில் இறங்கினர்.

பெருமளவு படையினர், பொலிஸார், பொதுமக்கள் இந்தப் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். கனரக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுச் சுமார் 8 மணிநேரம் நடந்த போராட்டத்தின் முடிவில், கரையொதுங்கிய திமிங்கிலம், மீண்டும் கடலுக்குள் விடப்பட்டது. (த-வ)



## பிள்ளைகளைத் தவறவிட்ட தாய் நோயுற்று முதியோர் இல்லத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 31

கடந்த 15 வருடங்களுக்கு முன்பாகக் கணவனை இழந்து-இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து பிள்ளைகளை தவறவிட்ட தாய் ஒருவர் எவரது பராமரிப்பும் இன்றி நோய்வாய்ப்பட்ட நிலையில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டார்.

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் பகுதியைச் சேர்ந்த திருமதி இரத்தினம் விஜயகுமாரி (வயது - 61) நிரம்பிய இந்த வயோதிபத் தாயே இவ்வாறு அநாதரவான நிலையில் முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டார்.

கரைச்சிப் பிரதேச செயலக சமூக சேவைகள் உத்தியோகத்தரின் உதவியுடன் இந்த முதியவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டார்.

இந்த வயோதிபத் தாய்க்கு மூன்று பிள்ளைகள் உள்ளனர். கடந்த இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கைக்குப்பின்னர்பிள்ளைகளுடன் எந்தவித தொடர்பும் அற்ற நிலையில் அவர் வாழ்ந்து வருகின்றார். பிள்ளைகள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாமல் மனமுடைந்த நிலையில் உள்ளார்.

இதன் காரணத்தினால் இவரைப் பற்றித் தெரிந்த உறவினர்கள் இல்லத்துடன் தொடர்பு கொண்டு அவர் பற்றிய தகவல்களைத் தந்து உதவுமாறு இல்ல அத்தியட்சகர் த. கிருபாகரன் கேட்டுள்ளார். (த-17)

## சட்டவிரோதமாகக் கள் விற்ற 9 பேருக்கு ரூபா 45 ,000 அபராதம்

வலி.தென்மேற்கு, ஒக். 31

சட்ட விரோதமாக வீட்டில் வைத்துக் கள் விற்ற ஒன்பதுப் பேருக்கு மல்லாகம் நீதவான் 45 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார்.

சங்கானை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தலைமையில் சென்ற உத்தியோகத்தர்கள் அராலி, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் நடத்திய சோதனை நடவடிக்கையின் போது வீட்டில் வைத்துக் கள் விற்பனையில் ஈடுபட்ட எட்டுப்பேரும், மேலதிக கள் வைத்திருந்த ஒருவரும் அகப்பட்டுக் கொண்டனர்.

இவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அனைவரும் குற்றத்தை ஏற்றுக்கொண்டனர்.

இதையடுத்து நீதவான் ஏழு பேருக்குத் தலா 5 ஆயிரம் ரூபாவும் மேலும் ஒருவருக்கு 7 ஆயிரம் ரூபாவும் மேலதிகமாகக் கள் வைத்திருந்தவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் விதித்துள்ளார். (த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகள் இன்னமும் இல்லை; முகாமிலேயே அவல வாழ்வு

## மீரியபெத்தை மக்கள் குமுறல்





கொழும்பு, ஒக்.31
வீடுகளை இழந்து முகாமில் அவல வாழ்க்கைவாழும்எமக்கு இன்னமும் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை. முகாமிலும் உரிய வசதிகள் இல்லை. சுதந்திரமற்ற நிலையிலேயே வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். எமக்கு எப்போது விடிவு கிடைக்கும் என்று தெரியவில்லை.

இவ்வாறு மாகந்த முகாமில் (தொழிற்சாலையில்) தங்கவைக்கப்பட்டுள்ள மீரியபெத்தை மக்கள் தமது உள்ளக் குமுறல்களை நேற்று முன்தினம் வெளிப்படுத்தினர்.

மீரியபெத்தையில் மண் சரிவு ஏற்பட்டதையடுத்து, அங்கு வாழ்ந்த மக்கள் மாகந்த தொழிற்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நேற்றுமுன்தினம் சம்பவ இடத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள் மேலும் கூறியவை வருமாறு:-

சொந்தங்களை இழந்துவிட்டு, சொத்துக்களையும் தொலைத்துவிட்டு சொந்த மண்ணைவிட்டு வெளியேறினோம். தற்போது முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளோம். அங்கு சிறிய அறைகளே காணப்படுகின்றன. சுதந்திரம் இல்லை. மலசலகூட வசதியில்லை. இப்படிப் பல அவலங்கள் தொடர்கின்றன.

குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில் உதவித்தொகை கூப்பனூடாக வழங்கப்படுகிறது. அதுவும் போதுமானதாக இல்லை. சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்திலும் அதன் பின்னரும் எமக்குப் பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டன. இன்று நாம் அநாதைகளாக்கப்பட்டுள்ளோம். ஆரம்பத்தில் எமக்குப் போதுமான அளவு உதவிகள் கிடைத்தன. இன்று நாம் கைவிடப்பட்டுள்ளோம். ஊடகங்களும் இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான் வருகின்றன. மற்றைய நாள்களில் எமது பிரச்சினைகள் பற்றிக் கதைப்பதில்லை.

அதேவேளை, நாம் இடம்பெயர்ந்து ஒரு வருடமாகின்றது. இன்னமும் வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவில்லை. 75 வீடுகள் கொண்ட திட்டத்தில் 4 வீடுகள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. அவை இன்னமும் முழுமைபெறவில்லை. எமக்கு எப்போது வீடு கிடைக்கும் என்று அதிகாரிகளும் கருத்துக் கூற மறுக்கின்றனர்.

தங்கியிருக்கும் முகாமில் பெண்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர். உடை மாற்றுவதற்குகூட உரிய ஏற்பாடுகள் இல்லை. எனவே, எமக்கு எப்போது விடியல் கிடைக்கும் என்று தெரியவில்லை என்றனர்.

அதேவேளை, தங்களுக்கு இருப்பதற்கு தனிவீடு விரைவில் அமைத்துக்கொடுக்கப்படவேண்டும் என்றும் - மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதை வலியுறுத்தி மீரியபெத்தை பகுதியில் நேற்று சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. 91 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 349 பேர் இவ்வாறு முகாமில் ஆரம்பத்தில் தங்கினர். அவர்களில் சிலர் தற்போது அங்கிருந்து வெளியேறி வேறு இடங்களில் தங்கியுள்ளனர். (த-சி)

---

## எதிர்க்கட்சித் தலைமையை எமக்கே வழங்கவேண்டும்

### அடம் பிடிக்கிறது மகிந்த அணி

கொழும்பு, ஒக்.31
எதிர்க்கட்சித் தலைமைப் பதவி தமக்கே வழங்கப்பட வேண்டும் என மகிந்த ஆதரவு அணி தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தொடர்ந்தும் கோரிவரும் மகிந்த ஆதரவு அணி, இந்த விடயத்தில் சபாநாயகர் உடனடியாகத் தலையிட்டு தீர்வு காண வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

பொரளையிலுள்ள என்.எம். பெரேரா நிலையத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக வியலாளர் சந்திப்பின்போதே, மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன இவ்வாறு வலியுத்தினார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது:-

நாடாளுமன்றத்தில் நாங்கள் 48 பேர் இருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜே.வி.பியும் இணைந்து 22 பேர்தான் இருக்கின்றனர். இதனைச் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம். ஆனால், சபாநாயகரான கரு ஜயசூரிய யதார்த்தத்தைப் புரிந்து செயற்படுகின்றாரில்லை. இது நாடாளுமன்றத்தின் கௌரவத்துக்குப் பாதிப்பைஏற்படுத்தும். நாடாளுமன்ற சம்பிரதாயங்கள் பின்பற்றப்படவேண்டும் -என்றார். (த)

---

## வடிகாலில் செல்கள்

மட்டக்களப்பு, ஒக்.31
வாழைச்சேனைப் பிரதேச சபையினர் பாசிக்குடா பகுதியில் இயந்திரம் மூலம் வடிகாலைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, ஆட்லறி செல்கள் அடங்கிய பெட்டி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியான மழை காரணமாக வீதிகளில் மழைநீர் தேங்கிக் கிடப்பதாலும், வெள்ள அபாயத்தைக் கவனத்தில் கொண்டும் வடிகால்கள் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. அத்துடன் துப்புரவு செய்யும் பணிகளும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில் கடந்த வியாழக்கிழமை நண்பகல் பாசிக்குடாவிலுள்ள லக்தியத்த நிறுவனத்தின் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துக்குப் பின்புறமாகவுள்ள வடிகால் தோண்டப்பட்டபோதே மேற்படி செல்கள் அடங்கியபெட்டிகண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கல்குடா பொலிஸ் மற்றும் இராணுவத்தினருக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து செல்கள் மீட்கப்பட்டுள்ளன. (த-10)



---

# ஒரு வருடம் கடந்தும் நினைவுத்தூபி இல்லை

## மீரியபெத்தையில் மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்தவர்களுக்கு



கொழும்பு, ஒக்.31
மீரியபெத்தையில் மண்ணுக்குள் புதையுண்டு உயிரிழந்தவர்களுக்கு நினைவுத்தூபி அமைக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. எனினும், சம்பவம் நடைபெற்று ஒருவருடம் கடந்துள்ள நிலையிலும் இன்னமும் அது அமைக்கப்படவில்லை என்று மீரிய பெத்தை மக்கள் நேற்றுமுன்தினம் கவலை வெளியிட்டனர்.

நினைவுத்தூபி அமைப்பதற்கு அரசியல்வாதிகள் எந்தவித ஒத்துழைப்பையும் வழங்கவில்லை. பலர் மீரியபெத்தையை மறந்துவிட்டனர். ஆகவே, பிரதேச மக்கள் இணைந்து நினைவுத்தூபி அமைப்பதற்கு முயற்சிக்கின்றோம். இதற்கும் தடங்கல் ஏற்படுத்தப்படுகின்றது என்று மண் சரிவு சம்பவத்தில் தமது ஐந்து உறவினர்களை இழந்து தவிக்கும் இளைஞர் ஒருவர் தமது மனக்குமுறலை வெளிப்படுத்தினார்.

அத்துடன், ஓராண்டுக்குள் நினைவுத்தூபி அமைக்கப்படும் என்று சம்பவ இடத்துக்குவந்த அரசியல்வாதிகள் வீர முழக்கமிட்டனர். ஆனால், அந்த உறுதிமொழி இன்னமும் நிறைவேறவில்லை. முன்னாள் அரசும் இதைச் செய்யவில்லை. ஆட்சி மாற்றத்தின் பின்பும் நினைவுத்தூபி அமைக்கப்படவில்லை என்று குறித்த பிரதேசத்திலுள்ள ஆசிரியர் ஒருவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய மண்சரிவு இடராக மீரியபெத்தை சம்பவம் கருதப்படுகின்றது. ஆகவே, உயிரிழந்த மக்களை நினைவு கூரும் வகையில் மண்சரிவு ஏற்பட்ட இடத்தில் நினைவுத்தூபி அமைக்கப்படவேண்டும் என்று பலதரப்பினராலும் கோரிக்கை விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## மாணவர் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

கொழும்பு, ஒக்.31
மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்குப் பல்வேறு இடங்களில் எதிர்ப்பு வெளியிடப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாணவர்கள் முன்னெடுத்த போராட்டத்தின் போது மாணவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் மோதல் வெடித்திருந்தது.

இதில் மாணவர்களும் பொலிஸாரும் காயமடைந்திருந்தனர். இதனையடுத்து 39 மாணவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல்வேறு தரப்பினர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தெஹிவளை, கண்டி, காலி மற்றும் கேகாலை ஆகிய இடங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இதேவேளை - சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலும் போராட்டமும் இடம்பெற்றுள்ளது. (த-வ)



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நற்சிந்தனையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். மேலதிக வருமானம் கிடைக்கும். நண்பர்களுடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**இடபம்:** தொடர்பில்லாத பணியில் ஈடுபட நேரலாம். தொழில், வியாபாரத்தில், இருக்கும் அனுகூலத்தைப் பாதுகாப்பது நல்லது. கூடுதல் முயற்சியால், எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். கண்களின் பாதுகாப்பில் மிகுந்த கவனம் வேண்டும்.

**மிதுனம்:** நீண்ட நாள் தாமதமான செயலில், புதிய திருப்பத்தை எதிர்கொள்வீர்கள். தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பண வரவை விடச் செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** செயல்களில் நியாயம், தர்மத்தை அதிகம் பின்பற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நல்ல வளர்ச்சி ஏற்படும். பணம் கொடுக்கல்; வாங்கல் சீராகும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**சிங்கம்:** செயலில் திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். எதிரிகள் இடம்மாறிப் போகும் அனுகூலம் உண்டு. தொழில், வியாபாரம் செழிக்கக், கூடுதல் அளவில் பணிபுரிவீர்கள். தாராளமான பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** மனதில் இனம் புரியாத வருத்தம்வரலாம். தொழில், வியாபார நடைமுறை சீராகுவதற்கு அக்கறையுடன் பணி புரிவது அவசியம். பணவரவு ஓரளவு கிடைக்கும். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்

**துலாம்:** உங்களின் பேச்சை சிலர் ஏற்றுக் கொள்வதில் சிரமம் வரலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறத் தேவையான பணிகளைத் தொடங்கலாம். அளவான பணவரவு கிடைக்கும். வாகனத்தை இயக்கும்போது, மிதவேகம் பின்பற்றவும்.


**விருச்சிகம்:** நம்ப இயலாத வகையில் முக்கியஸ்தர் ஒருவரின் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும்.

**தனுசு:** சுயநலம் கருதாமல் செயற்படுவீர்கள். அவமதித்துப் பேசியவர், அன்பு பாராட்டும் நன்னிலை உருவாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு விலகும்.

**மகரம்:** பிறருடன் பேசுவதில் நிதானம் வேண்டும். தொழில், வியாபாரத்தில், நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது நல்லது. தவிர்க்க இயலாத செலவுக்குச் சேமிப்புப் பணம் பயன்படும். உடல் நலத்துக்கு ஒவ்வாத உணவை உண்ண வேண்டாம்.

**கும்பம்:** எதிர்வரும் பணிகளுக்குத் தகுந்த முன்னேற்பாடு அவசியம். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணப் பரிவர்த்தனையில், பாதுகாப்புமுறையைத் தவறாமல் பின்பற்ற வேண்டும்.

**மீனம்:** புதிய சூழ்நிலைகளை ஆர்வத்துடன் பயன்படுத்தித், தகுந்த நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், அபரிமிதமான வளர்ச்சி உண்டு. மேலதிக பணவரவை, உரிய சேமிப்பாக மாற்றுவீர்கள். பணியாளர்கள் வெகுநாள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.




# ஹொலிவூட் படத்துக்கு இசையமைக்கும் யுவன்

தமிழில் இளம் சமுகத்தின் இசை உலகைக் கவர்ந்தவர் மிகப்பிரபலமான இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா. இவர் தமிழில் 100 படங்களையும் தாண்டி தன்னுடைய இசையால் ரசிகர்களைக் கவர்ந்து வருகிறார்.

இந்த நிலையில் முதன் முறையாக வூல் பெல் என்ற படத்தின் மூலம் ஹொலிவூட் படத்துக்கு இசையமைக்க போகிறார் யுவன். இதில் பணிபுரியும் ஏனைய சில கலைஞர்களும் தமிழர்களே. மேலும் தற்போது இந்தப் படத்தின் முன்னோட்டக்காட்சி வெளியாகியுள்ளது. இதைப் பார்க்கையில் இது ஒரு சண்டைக்காட்சிகள் நிறைந்த அதிரடிப் படமாக இருக்கும் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# எட்டடியில் பொம்மை







பொம்மைகளை விரும்பாதவர்கள் என்று உலகத்தில் எவரும் இல்லை. குழந்தைகளின் கற்பனை உலகக் கதாநாயகனாகத் திகழும் பொம்மைகள் பெரியவர்களையும் விட்டு வைத்ததில்லை. இந்த நிலையில் மீண்டும் தனது ஆக்கிரமிப்பை வெளிப்படுத்த வந்துள்ளது எட்டடி உயரமுள்ள கரடிப் பொம்மை. பஞ்சு மெத்தையைப் போல மென்மையான மாபெரும் கரடிப் பொம்மையான இவை, தற்போது விற்பனைக்கு வந்துள்ளன. அதை வைத்து விளையாட விரும்பினால், உங்கள் வீட்டில் அதற்கென ஒரு தனியான அறையைத் தயார் செய்துகொள்ள வேண்டும். கரடியைப்போல உள்ள இந்தப் பொம்மைகள் அமெரிக்காவைச் சேர்ந்த மோரிஸ் மிச்டோம் மற்றும் ஜெர்மனியின் ரிச்சர்ட் ஸ்டீப் எனும் பொம்மை வடிவமைப்பாளர்களால் இருபதாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டன. இந்தக் காலகட்டத்தில் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த தியோடர் ரூஸ்வெல்ட்டின் (செல்லமாக டெடி) பெயருடன் இவை விற்பனைக்கு விடப்பட்டன.

அன்று முதல் உலகமெங்கும் குழந்தைகளுக்கு விருப்பமான விளையாட்டுப் பொருளாக இந்தக் கரடிப் பொம்மை விளங்கி வருகின்றது. கட்டிப்பிடித்துக் கொஞ்சும் அளவுக்கு குழந்தைகளுக்குச் செல்லமான இந்தக் கரடிப் பொம்மைகள் தற்போது மாபெரும் அளவில் தயாரிக்கப்பட்டு அமெரிக்க நிறுவனத்தால் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. சுமார் எட்டடி உயரமுள்ள இந்தக் கரடிப் பொம்மைகளின்மீது குழந்தைகள் ஏறியே விளையாடலாம். சராசரி ஆள்களை விட பெரிய அளவில் உள்ளதாலேயே மக்களின் விருப்பமான விளையாட்டுப் பொருளாக இந்தப் பொம்மைகள் [illegible]. மக்கள் மத்தியில் இந்தப் பொம்மைகளுக்கான வரவேற்புக் [illegible] நிறுவனம் தமது இணையத்தளம் மூலமாக இந்தப் பொம்மைகளை விற்கத் தொடங்கியுள்ளன. இதன் பெறுமதி இலங்கை மதிப்பில் சுமார் அறுபதாயிரம் ரூபா வரையாகுமாம்.

## பேஸ் புக்கில் பிடித்துவை...



1. சட்டைப் பையில் -ரூபா 100
2. வங்கிக் கணக்கில் -ரூபா 125
3. கதர் வேட்டி -4
4. கதர்த் துண்டு -4
5. கதர் சட்டை -4
6. காலணி ஜோடி -4
7. மூக்குக் கண்ணாடி -1
8. பேனா -1
9. சமையலுக்கு தேவையான பாத்திரங்கள் -6

பத்து ஆண்டுகள் தமிழக முதல்வராகவும், பல ஆண்டுகள் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகவும் இருந்து இந்தியாவில் இரண்டு பிரதமர்களை உருவாக்கிய பெருந் தலைவர் காமராசர் மறைந்தபோது அவரிடம் இருந்த மொத்தச் சொத்தின் மதிப்பு.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைமன்னார் - இராமேஸ்வரம் இடையே தரைவழிப் பாதையை அமைப்பதற்கு ஆய்வு

## இந்தியத் தரப்பில் தகவல்

இந்திய அரசு, தலைமன்னார் மற்றும் இராமேஸ்வரம் இடையே தரைவழிப்பாதையொன்றை விரைவில் அமைப்பது தொடர்பில் ஆய்வை மேற்கொள்ளவுள்ளதாக இந்தியத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை வீதிப்போக்குவரத்து,நெடுஞ்சாலைகள் மற்றும் கப்பல் போக்குவரத்து மத்திய அமைச்சர் பொன் இராதாகிருஸ்ணன் உறுதிப்படுத்தியுள்ளார். குறிப்பாக இரு நாடுகளின் ஒப்புதலுடன் பல கட்டப் பேச்சுக்களூடாக இது சாத்தியப் படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். சேது சமுத்திரத் திட்டம் தொடர்பிலும் பல ஆய்வு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் உச்ச நீதிமன்றத்தில் இந்தத் திட்டம் தொடர்பில் வழக்கு நிலுவையில் இருந்தாலும் மக்களின் உணர்வுகளைப் பாதிக்காத வகையிலும் மன்னார் வளைகுடாவின் சூழலியலைப் பாதிக்காத வகையிலும் புதிய வழிமுறைகளைப் பின்பற்றுவது தொடர்பில் தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் மீனவர் பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், மீனவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு இந்திய அரசு அண்மையில் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் பேச்சுக்களை ஆரம்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி2)

## கலைவாணி முன்பள்ளியின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.31

நாவாந்துறை, கலைவாணி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா கடந்த புதன்கிழமை நடைபெற்றது. முன்பள்ளியின் நிர்வாகத் தலைவர் தி.சுதாகரன் தலைமையில் நடைபெற்ற நிக்ழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி, ஆசிரிய ஆலோசகர் கு.சிறீஸ்கந்தராஜா, கிராம சேவையாளர் அ.சர்வேஸ்வரன், சமுர்த்தி உத்தியோகத்தர் ஆர்.நிரோஜன், பொருளாதார உத்தியோகத்தர் எஸ்.சத்தியசீலன், யாழ் கோட்ட முன்பள்ளி இணைப்பாளர் ச.ஜெகதாரணி ஆகியோரும், கௌரவ விருந்தினர்களாக முத்துராஜா, திரு.திருமதி.ரஞ்சித் சுபா, திரு. திருமதி. ஸ்ரிபன் சுகந்தினி ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஐ-10)



## மணல் ஏற்றியவருக்கு அபராதம்

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த வாகனச் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 28 ஆம் திகதி 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதவான் வாகனச் சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய இரு வருக்கு முறையே 10 ஆயிரத்து 500 ரூபாவும், 5 ஆயிரத்து 500 ரூபாவும் அபராதம் விதிக்கப்பட்டது. (ஐ-9)

## உரிமை கோரப்படாத சடலத்தை அடக்கம் செய்ய நீதிமன்றம் உத்தரவு

சாவகச்சேரி,ஒக்.31

மூன்று வாரங்களுக்கு மேலாக உரிமை கோரப்படாத நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை சவச்சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தைச் சாவு விசாரணைகளின் பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யுமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டது. கடந்த ஐந்தாம் திகதி இரவு நாவற்குழிப் பகுதியில், ரயிலில் மோதுண்ட நபர் காயங்களுக்கு இலக்கான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் சாவடைந்தார். அந்த நபரின் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லையென நீதிமன்றில் பொலிஸாரால் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பாக ஊடகங்கள் மூலம் அறிவிக்கப்பட்டும் இதுவரை எவராலும் உரிமை கோரப்படவில்லையெனவும் குறிப்பிடப்பட்டது. இதனையடுத்து திடீர் சாவு விசாரணை அதிகாரி மூலம் விசாரணைகளை மேற் கொண்ட பின்னர் அரச செலவில் அடக்கம் செய்யுமாறு உத்தரவிடப்பட்டது. (ஐ)

## தென்மராட்சிக் கல்வி வலயத்தில் முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு



சாவகச்சேரி,ஒக்.31

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சிக் கல்வி வலய முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் கைதடி ஸ்ரீ விநாயகர் மணி மண்டபத்தில் நடைபெற்றது. வலய முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக வலயக் கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப் பாளர் திருமதி சி.சிவநாதனும், கௌரவ விருந்தினர்களாக செலான் வங்கி சாவகச்சேரி கிளை அலுவலர் சோ.காசிநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர் சேவையில் 45 வருடங்கள் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி தர்மலிங்கம் நாகேஸ் வரி, 36 வருடங்கள் கடமையாற்றிய செல்வி குமாரசாமி இராசலட்சுமி, 26 வருடங்கள் சேவையாற்றிய திருமதி வித்தியானந்தன் இராசலட்சுமி ஆகியோருக்குச் சிறப்பு விருந்தினர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க முதன்மை விருந்தினர் நினைவுப் பரிசில்களை வழங்கி வைத்தார். மேலும் சேவையில் உள்ள 141 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு நினைவுப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. முன்பள்ளி ஆசிரியைகளின் கவிதை பாடல், நாடகம், நடனம், தாளலயம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-9)


**பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்**

**அறிவித்தல்**

**வாக்காளர் இடாப்பு காட்சிப்படுத்தல்**

30.09.2015 உடன் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுடைய வாக்காளர் இடாப்பின் பிரதி 29.10.2015ஆம் திகதியிலிருந்து கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும், காட்சிப்படுத்தப் பட்டுள்ளது. இதில் ஆட்சேபனைகள் திருத்தங்கள் இருப்பின் 10.11.2015ஆம் திகதிக்கு முன்னர் சங்கச் செயலாளருக்கு எழுத்து மூலம் அறியத்தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சி. தாரணி, செயலாளர் — ந.சுந்தரமூர்த்தி, தலைவர் (65637) (13.15)

**துன்பம் நீக்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்மன்**



வெள்ளவத்தையில் பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞான கணேஸ்வரி அம்மன் அவர்கள் நவம்பர் மாதம் 01,02,03,04 ஆம் திகதிகளில் ஞான வைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறுவார் செவ்வாய்க்கிழமை அன்னதானம் நடைபெறும்

பூசை நேரம்:
முற்பகல் 10.30 - 12.30 மணிவரை
மாலை 5.30 - 6.30 மணிவரை
குறிப்பு: கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு: 021 221 9127, 077 801 2226

The 64th Annual Festival of Carols by the Combined Choirs of Schools and Colleges of the North Will be held at the St.John's College Hall on Sunday 1st November - 2015 at 4.00 p.m

Admission by Programme - Rs.20/= (c/19665) (13.15.16)

**அறைகள் நாள் வாடகைக்கு**

600/= முதல் 3950/= வரை AC/ TV இணைந்த குளியலறை உடன் Hotel Villa (ராமகிருஸ்ணா Shard அருகில்) 422/1, Galle Road வெள்ளவத்தை. 072 255 2222, 011 499 9944

**காணி விற்பனைக்கு**

மருதனார்மடப் பகுதியில் "4" பரப்புக் காணி விற்பனைக்குள்ளது.
(65656) (13.15.16) தொ.பே.077 328 8795

**மணமகன் தேவை**

1981, 7 இல் செவ்வாய், 62¼ கிரகபாவம், அரச உத்தியோகம் பார்க்கும் மணமகளுக்கு தொழில் புரியும் மணமகன் தேவை. (65644)(13.15)
தொடர்பு: 077 085 1816, 077 964 7382

**மணமகள் தேவை**

32 வயதுடைய லண்டனில் PRஉள்ள யாழ். கிறிஸ்தவ(NRC ) மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு: 077 303 1344 (65275) (14.15)

**விற்பனைக்கு**

1 மாதம் 2 கிழமை, 1 கிழமை, 1 நாள் ஊர்க் கோழிக்குஞ்சு விற்பனைக்கு உண்டு.
T.P: 077 999 4655 திருநெல்வேலி.

**மணமகன்கள் தேவை**

யாழ்.இந்து 36 வயது டொக்டர், வவுனியா32 வயது ஆசிரியர், புத்தளம் 28 வயதுபடித்த, 32 வயது கனடா பட்டதாரி(B.Sc) , சிற்றிசன், 28 வயது திருகோணமலை பட்டதாரி ஆகிய மணமகள்களுக்கு மண மகன்கள் தேவை. (65660) (14.15.17)
தொடர்பு: 066 205 5077, 077 552 8882

**தென்னந்தோட்டம் விற்பனைக்கு**

பளைக்கும் தர்மக்கேணிக்கும் இடையில் உள்ள 20 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்குண்டு. (65648) (14.15)
தொடர்பு: 072 525 4133

**கணினித் தட்டெழுத்தாளர் தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் சட்டத்தரணி அலுவலகம் ஒன்றிற்கு கணினித் தட்டெழுத்தாளர் ஒருவர் தேவை. தமிழ்- ஆங்கிலம் இரு மொழிகளிலும் நன்கு புலமையுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். தாமாகவே Print எடுக்கத் தெரிய வேண்டும்
தொடர்பு : 078 664 9019

**மணமகள்கள் தேவை**

- 74இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 37¼ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணி புரியும் சைவ போசன மணமகனுக்கு சைவ போசன அல்லது அசைவ போசன மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது.
- 86இல் பிறந்த 4 இல் செவ்வாய் 26½ பாவமுடைய வங்கியில் பணி புரியும் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
- 59 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 7½ பாவமுடைய சொந்தக் கடை வைத்திருக்கும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு விவாகரத்துப் பெற்ற மணமகள் தேவை.
- 72இல் பிறந்த 3 இல் சூரியனும் செவ்வாயும் 15½ பாவமுடைய அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
- 84இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய குவான்டி சேவையர், கட்டாரில் பணி புரியும் மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
- 83இல் பிறந்த 4இல் சூரியனும் செவ்வாயும் 30 பாவமுடைய MSC இஞ்சினியர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.
- 83இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 15½ பாவமுடைய ஆஸ்திரேலியா பிரஜா உரிமைபெற்ற இஞ்சினியர் மணமகனுக்குப் பட்டதாரி மணமகள் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமணசேவை
077 607 0862


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாதம் முதல் வாரத்தில் வவுனியாவில் சிறுவர் பாதுகாப்பு வாரம்

வவுனியா மாவட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதியிலிருந்து 9 ஆம் திகதிவரை சிறுவர் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படவுள்ளது. நாடளாவிய ரீதியில் மாணவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாதல், துன்புறுத்தப்படல், உடல், உளரீதியாக அவர்களுக்கு ஏற்படும் நெருக்கடிகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் ஒரு வாரம் முழுவதும், சிறுவர்களைப் பாதுகாத்தல் தொடர்பான விழிப் புணர்வு வீதி நாடகங்கள், சுவரொட்டிகள், ஊர்வலங்கள் போன்ற செயற்பாடுகள், பாடசாலைகளில் சுகாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டு அதனூடாக முன்னெடுக்கபடவுள்ளன. இந்த வேலைத்திட்டத்துக்கு உதவ மதப் பெரியார்கள், பிரதேச செயலர்கள், சுகாதாரப்பிரிவினர், கிராமசேவகர்கள், ஓட்டோ சாரதிகள், பொலிஸார் உட்பட பலரும் முன்வந்துள்ளனர். (ஐ-402)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**தியாகராஜா வெற்றிவேலு**
(இளைப்பாறிய கணித ஆசிரியர்)
திதி - அபரபட்ச பஞ்சமி

தோற்றம் 04.06.1932 மறைவு 11.11.2014

இவ்வுலக வாழ்க்கை நிலையில்லை
என்றுணர்ந்தோம் அப்பா ! பாசம் காட்டி
எங்களை வளர்த்த அந்த நாள்கள்மீண்டும் ஒருமுறை
எமக்கு கிடைக்காதா அப்பா!
நாம் இவ்வுலகை விட்டுப்பிரியும் வரை
உங்கள் நினைவுகள் எங்களை விட்டகலாது அப்பா!

தற்காலிக முகவரி
வைத்தியசாலை அருகில்,கட்டுப்பலானை,
கோப்பாய் மத்தி. கோப்பாய்.

குடும்பத்தினர்.

(65583) (14,15,17)

## பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பிமுத்து சோமசுந்தரம்**
(திதி:பஞ்சமி)

மலர்வு 01.04.1942
உதிர்வு 29.10.1999

நேர்மையே நினதாகி இன்பமே வாழ்க்கையாகி
மேன்மையாய் வாழ்ந்த காலங்கள் உமதாகி - இன்று
வேதனையை வாழ்க்கையாக்கி விரக்தியை நிஜமாக்கி
வேண்டுமென்றோ காலன் உமை தன் வசமாக்கினான்.
தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.


தங்கள் பிரிவால் துயருறும்
மனைவி.

(65945)(11,15)

## ஓராண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

அமரர்
**கந்தையா பாலச்சந்திரன்**

தோற்றம் 25.07.1941
மறைவு 11.11.2014
திதி: அபரபக்க பஞ்சமி



கடந்த 11.11.2014 சிவபதம் எய்திய எமது குடும்பத்தலைவர் அமரர் க.பாலச்சந்திரன் அவர்களது ஓராண்டு நினைவஞ்சலியும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (31.10.2015) சனிக்கிழமை சுமார் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முதலிய கோவிலடி,
தேவாலய ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்.
தொ.பே.021 205 3167

(65653)(13,15,16)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11 - 02 - 1940
மறைவு 03 - 11 - 2012

அமரர் வைத்தியகலாநிதி
**சி.சிவசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர்)
திதி:அபரபஞ்சமி (31.10.2015)

அன்புடனும் பண்புடனும் கடமை
உணர்ச்சியுடனும் வாழ்ந்து எல்லோருடைய
உள்ளங்களிலும் நீங்காது நிறைந்த உங்கள்
ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல
இறைவனை வேண்டி வணங்குகின்றோம்.

ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி.

96, முதலாம் குறுக்குத்தெரு.
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்,மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(65250) (11,15,16)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி **பொன்னம்மா கணபதிப்பிள்ளை**

தோற்றம் 11 . 07 . 1922
மறைவு 11 . 11 . 2014



ஆண்டொன்று மறைந்தாலும் - அம்மா
உங்கள் நினைவு நெஞ்சத்தில் அகலாது!
பாசமுடன் உங்கள் பதினொரு பிள்ளைகளும்
அவருறவோர் அனைவருமே நேசமுடன்
உங்களை நினைந்தன்பு கூருகிறோம்.

எமது தாயாரின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலிக் கிரியை இன்று (31.10.2015) சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது தாயாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில்.

குடும்பத்தினர்.

(65634)(11,15)

## மரநடுகை விழா

யாழ்ப்பாணம்,ஒக்.31

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் பவளவிழா ஆண்டினை முன்னிட்டு நடத்தப்படும் மரநடுகை விழா, நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு பூனாவோடை இந்து மயானத்தில் நடை பெறவுள்ளது. ச. மோகனதாசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சங்கானை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார், வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் திருமதி.உ. சாரதா, சங்கானை லயன்ஸ் கழகத் தலைவர் லயன் ஜெ.றஜீவன், யாழ். பனை அபிவிருத்தி சபை இணைப்பாளர் ம. கியூபேட் அன்ரனி, சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சி.கேமா, அராலி மேற்கு கிராம உத்தியோகத்தர் வை.அசோகரத்தினம், அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை அதிபர் நி.முருகானந்தன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் வி. கிருஷ்ணராசா, வலிமேற்கு பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் த.நடேனந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதுடன், பனம் விதை நடுகை நிகழ்வும் நடைபெறவுள்ளதாக சனசமூக நிலையத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-ரி6)

## பரிசளிப்பு விழா

மாங்குளம் ஒக்.31

நீர்வேலி அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாடசாலையின் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது. பாடசாலையின் அதிபர் க.மோகனராஜன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா, சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், கௌரவ விருந்தினராக பருத்தித்துறை மாவட்ட காணிப் பதிவு அலுவலகத்தின் முகாமைத்துவ உதவியாளர் ச.அனுசாகரி ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ-422)

***

கரணவாய்,ஒக்.31

வதிரி வடக்கு மெ.மி.த.க பாடசாலை வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் ப.சிவசுப்பிரமணியன் தலைமையில் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு செண். அன்ரனீஸ் குழும இயக்குநர் மா.தயானந்தனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன் மற்றும் கரவெட்டி கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவினப் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்க வேண்டும்

## இலங்கை உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

அம்பாறை,ஒக்.31

தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக எமது நாட்டில் பட்டதாரிகள் ஒவ்வொரு வருடமும் உணவுத் தவிர்ப்புப் போராட்டங்களை நடத்த வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நீடித்து வருகின்றது. உரியமுறைமையை வகுத்து நியமனங்கள் வழங்குவதன் மூலம் அரசு இத்தகைய நிலைமை தொடர்வதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இவ்வாறு இலங்கை உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் தான் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வலியுறுத்தியுள்ளது. இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகள் சங்கம் சார்பில், சங்கப் பொதுச் செயலாளர் எம்.ஹீசைன் முபாறக் இந்த அறிக்கையை விடுத்துள்ளார். இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நான்கு, ஐந்து வருடகாலம் பல்கலைக்கழகங்களிலும், உயர் கல்வி நிறுவனங்களிலும், பல்வேறு சிரமங்களை அனுபவித்து பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்து வெளியேறும் பட்டதாரிகள் தொழில் வாய்ப்புக்களை எளிதில் பெற்றுக் கொள்ள முடியாது கஷ்டமுறும் நிலைமையே எமது நாட்டிலுள்ளது. இதனால் வருடாவருடம் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் போராட்டங்களை, குறிப்பாக உணவு தவிர்ப்புப் போராட்டங்களை பட்டதாரிகள் முன்னெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை நீடித்து வருவது கவலையளிப்பதான விடயமாகும். ஆனாலும் காலத்துக்குக் காலம் வரும் அரசியல் வாதிகளும், ஏன் அரசும் கூட ஆட்சிக் கதிரைகளைப் பிடிப்பதற்காக பட்டதாரிகளைக் கைவிட மாட்டோம் என்ற கோசத்தையும், உறுதிமொழிகளையும் அள்ளி வழங்கத் தயங்குவதில்லை. இந்த நிலையில் தமது இலக்கு நிறைவேறிய பின்னர் இவர்கள் பட்டதாரிகளைப் புறம் தள்ளி பாரா முகமாகக் கைவிட்டு விடுவதும் வழக்கமாகும். இதனால் பட்ட தாரிகள் தொழிலுக்காக அலையும் நிலை ஏற்படுவதுடன் உயிரையே பணயம் வைத்துப் போராட்டங் களை முன்னெடுக்க வேண்டிய பரிதாப நிலைக்கும் தள்ளப்படு கின்றனர். ஏனெனில் பல்கலைக் கழகங்களிலிருந்தும், உயர்கல்வி நிறுவனங்களிலிருந்தும் பட்டதாரி களாகப் பட்டம் பெற்று வெளி யேறுகின்ற பட்டதாரிகளுக்கு வருடா வருடம் அரச நியமனங்களுக்குள் உள்வாங்குவதற்கான எந்த முறைமையுமே அரசால் இதுவரை வகுக்கப்படவில்லை. இந்த நிலைமை இந்த நாட்டில் கல்விச் சமூகத்துக்குக் கிடைக்கப்பெறும் பெரிய பின்னடைவு என்பதை அரசியல்வாதிகளும், அரசும், அதிகாரிகளும் இதுவரை புரிந்து கொள்ளவில்லை என்றே கூற வேண்டும். கல்விச் சமூகங்களுக்கு ஏற்பட்ட இத்தகைய நிலைமையையும், பின்னடைவையும் நிவர்த்திப்பதற்கான முயற்சிகளைச் சகல மட்டங்களிலுமுள்ள உயரதிகாரிகளும், அரசியல் வாதிகளும் செய்வது அவசியமாகும். இதேவேளை பட்டம் பெற்ற பட்டதாரிகள் மட்டுமன்றி, இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பத் துறையில், நான்கு வருடங்கள் தமது பட்டப்படிப்பை மேற்கொண்டு வெளியேறும், இலங்கை உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளுக்கும் இதே நிலைமையே காணப் படுகின்றது. எனவே இலங்கை உயர்தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டதாரிகளையும் உள்வாங்கி, சகல மாவட்டங்களிலுமுள்ள மூவின பட்டதாரிகளுக்கும் இன்றைய நல்லாட்சியில் நியமனம் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-30)

# அனைத்து மொழிகளிலும் தொன்மையானது தமிழ்மொழி

## தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவிப்பு

சாவகச்சேரி,ஒக்.31

தமிழ் மொழி தொன்மையானது. அதனால் முதன்மையானது. இயல் இசை நாடகம் என்ற மூன்றையும் தன்னுள் கொண்டிருப்பதனால் முத்தமிழ் எனவும் அது சிறப்பிக்கப்பட்டது. இன்று உலகில் பிரபல்யம் பெற்றிருக்கும் எல்லா மொழிகளிலும் இயல் இசை நாடகம் என்பன தனித்துச் செயற்படும் நிலையில், இவை மூன்றும் இணைந்து செயற்படும் சிறப்பு எமது தாய் மொழியான தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. இவ்வாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார். தென்மராட்சி கல்வி வலயத்தால் கடந்த 27 ஆம் திகதி சாவகச்சேரியில் நடத்தப்பட்ட ஒக்ரோபர் மாத முழுநிலா கலை விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய அவர் மேலும் தெரிவிக்கும்போது: உலகத்தோரின் உன்னத படைப்புக்களில் இசைக் கலையும் ஒன்றாகும். கருவறையில் ஆரம்பித்து. பிண மாக அவன் கட்டையில் வெந்து நீறாகும் வரை, பல்வேறு கட்டங்களிலும் இரண்டறக் கலந்து சமயச் சடங்குகளுடன் இணைந்து இசைக் கலை காலம் தோறும் செழுமை பெற்று வந்துள்ளது. மானிட வாழ்வின் நாகரிக நிலைப்பாடுகள், பண்பாட்டுக்கூறுகள் பழக்கவழக்கங்கள் வாழ்க்கை முறைகள், உணர்வுகள், உணர்ச் சிகள் ஆகியவற்றின் வெளிப்பாடாகவும், உட்கூறாகவும் அமைந் திருப்பது இந்த இசையாகும். மானிட உடலில் குருதிக்கும் சதைக்குமுள்ள உறவு போன்றதே, தமிழுக்கும் இசைக்குமான உறவு. ஓர் இனத்தின் இருப்பும் சிறப்பும் அந்த இனத்தின் கலைகளால் மதிப்பிடப்படும். கலை வளர மொழி வளரும். மொழி வளர இனம் உயரும். இது ஒரு வகை விதி. எந்தவொரு இனத்துவக் குழுவும் வாழும் கிராமத்திலும் குறைந்தது ஒரு கலை வடிவமாவது இருந்தே தீரும். பண்டைய முன்னோர்கள் பாமர மக்களுக்கு விழிப்புணர்வூட்ட, அறிவூட்ட கிராமியக் கலைகளையே பயன்படுத்தி வந்துள்ளனர். முத்தமிழும் கலந்த கிராமியக் கலைகள் அறிவூட்டலுடன் மட்டும் நின்றுவிடாது அதற்கும் அப்பால் உணர்ச்சிகளுக்கு வடிகாலாகவும் மகிழ்ச்சிக்கான கதவாகவும் அமைந்து கிடந்தன. இந்த மண்ணில் காலத்துக்கு காலம் கலைகளை வளர்க்கும் கடமையை ஏற்று பல கலைஞர்கள் தோன்றி இருக்கின்றனர். அவர்களது பங்களிப்பினால் இன்றும் தமிழர் வரலாற்றில் தமிழ் மொழி தனக்கென ஓர் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டிருக்கிறது எனவும் தெரிவித்தார். (ஐ-9)

# மரபணு பரிசோதனைக்கு செலுத்திய கட்டணத்தை மீள வழங்க உத்தரவு

சாவகச்சேரி,ஒக்.31

மரபணுப் பரிசோதனையில் தொடர்பில்லையென அறிக்கை வழங்கப்பட்டதையடுத்து, பரிசோதனைக்கெனச் செலுத்தப்பட்ட கட்டணத்தை மீள வழங்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 28 ஆம் திகதி உத்தரவிடப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயதுப் பெண்ணொருவர், அதே இடத்தைச் சேர்ந்த 39 வயது ஓட்டோச் சாரதிக்கு எதிராக தனக்கும், தனது குழந்தைக்கும் தாபரிப்புக் கேட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். விசாரணைகளின்போது தனக்கும் குழந்தைக்கும் தொடர்பில்லை என வாதிட்டு, தான் குற்றமற்றவர் என நிரூபிப்பதற்கு மரபணுப் பரிசோதனை நடத்துமாறு எதிர்மனுதாரர் நீதிமன்றில் விண்ணப்பித்திருந்தார். அதற்கான கட்டணத்தைச் செலுத்தவும் முன் வந்தார். இதனையடுத்து இவரிடமும் பிள்ளையிடமும் பெறப்பட்ட குருதி மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அதன் அறிக்கை நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. அறிக்கைப் பிரகாரம் குருதி மாதிரிகள் ஒன்றுக் கொன்று தொடர்பில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மரபணுப் பரிசோதனைக்காகச் செலுத்தப்பட்ட கட் டணத்தை மீள வழங்குமாறு உத்தரவிட்ட நீதிவான் வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### செல்வி இந்திராதேவி ஐயாமுத்து



தோற்றம் 03.06.1944 | மறைவு 30.10.2015

தொண்டைமானாறு பிரதான வீதி மதவடியைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறை, கொழும்பு தெகிவளையை வசிப்பிடங்களாகவும் கொண்ட செல்வி இந்திராதேவி ஐயாமுத்து நேற்று (30.10.2015) வெள்ளிக்கிழமை அதிகாலை கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தொண்டைமானாற்றைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான ஐயாமுத்து -பங்கயற்செல்வம் தம்பதியரின் பாசமிகு மூத்த புதல்வியும், பாலேந்திரா, சீதாதேவி, திருமதிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சந்திரலேகா, காலஞ்சென்ற தவராசா, பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிஷாந்தி, அனுஷா, சுஜேந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜந்தன், வசந்தன், சுஜீவன், சுயந்தினி, வசந்தினி ஆகியோரின் அன்புப் பெரிய தாயும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் அஞ்சலிக்காக நாளை (01.11.2015) ஞாயிற்றுகிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 7 மணி முதல் வைக்கப்பட்டு, நண்பகல் சமயக்கிரியைகள் நடைபெற்றபின் பிற்பகல் 2 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம்(Gas) செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சகோதரர்கள் } சகோதரி - 011 271 5550
சகோதரன் - 077 652 2395

## விண்ணக வாழ்வின் நான்காம் ஆண்டு நினைவலைகள்

### பிறெய்சி கரோலின் ரூட் செல்வக்குமார்



தாயின் மடியில் 12.04.2006

பிதாவின் மடியில் 31.10.2011

சித்திரை மாதத்தின் சித்திரமாய்
மண்ணினிக்க வந்துதித்தாய் புதுமலராய்
கற்பனைகள் பல கண்டோம்உன் காட்சிகள் காண்பதற்காய்
எத்தனை உறவுகள் உன்னைச் சூழ்ந்திருந்தும்
நொடிப்பொழுதில் பிரிந்து சென்றாய் இறை சந்நிதானம்
ஆறாதம்மா எம் துயரம் நான்காண்டுகள் சென்றாலும்....

என்றும் நீங்கா நினைவுகளுடன்
அப்பா, அம்மா,
பெரிய அண்ணா, அக்கா,
குட்டி அண்ணா.

54/2, கொழும்புத்துறை வீதி,
பாண்டியந்தாழ்வு, யாழ்ப்பாணம்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்ச

அமரர்
### செல்லத்தம்பி தியாகராசா
(மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர்)
திதி - 31.10.2015

தோற்றம் 24.08.1924 | மறைவு 11.11.2014



கண்ணிமைத்து விழிக்கவில்லை
ஓராண்டு சென்றுவிட்டதைய்யா !
ஒரு நொடிப்பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம் எமைவிட்டு
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

குடும்பத்தினர்.
299, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

We Serve

நலிவுற்றோர் நல நிதிக்காக
வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்தும்
செயற்றிறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில்

# மாபெரும் நாடக நிகழ்வு - 2015

இடம்: யா/நெல்லியடி மத்திய கல்லூரிக் கலையரங்கம்
காலம்: 2015.11.01 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி

நுழைவுச் சீட்டுக்கள் கிடைக்குமிடங்கள் : (பருத்தித்துறையில்) ஜெயகணேசா, சுசீலா ஆபரண மாளிகை மற்றும் நுழைவாயில்

தலைமை
**லயன். செ.சேதுராஜா**
(தலைவர், வடமராட்சி லயன்ஸ் கழகம்)

பிரதம விருந்தினர்
**லயன். Dr.V.தியாகராஜா MJF JP**
(First Vice District Governor - 306 B1)

சிறப்பு விருந்தினர்கள்
- **சி.நந்தகுமார்** (வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி)
- **சி.சிவஸ்ரீ** (பிரதேச செயலர், கரவெட்டி)
- **இ.த.ஜெயசீலன்** (பிரதேச செயலர், பருத்தித்துறை)
- **க.கனகேஸ்வரன்** (பிரதேச செயலர், மருதங்கேணி)

நுழைவுச் சீட்டுக்கள் கிடைக்குமிடங்கள் : (நெல்லியடியில்) சிதம்பரப்பிள்ளை பொத்தகசாலை, நெல்லைசில்க்ஸ், ஜெயபாரதி ஸ்ரோர்ஸ், வைஷ்ணவி நகைப்பூங்கா மற்றும் நுழைவாயில்

குழந்தை ம.சண்முகலிங்கத்தின்
**பஞ்சவர்ண நரியார்** (சிறுவர் நாடகம்)
தே. தேவானந்தின்
- **சிரிப்பு மூடை** (சிறுவர் நாடகம்)
- **மரணச் சான்றிதழ்** (ஓராள் அரங்கு)
- **ஏகாந்தம்** (வேடமுக நாடகம்)

நுழைவு அன்பளிப்புக் கட்டணம்: ரூ. 100/=, ரூ.500/, =ரூ. 1000/=
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊடக அனுசரணை:
உதயன்
வடமராட்சி லயன்ஸ் கழகம்


# தண்ணீரூற்றில் குடிதண்ணீர் விநியோகத்திட்டம் ஆரம்பிப்பு



முல்லைத்தீவு,ஒக்.31
கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள தண்ணீரூற்று கிழக்கு, கிராம சேவகர் பிரிவில் குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. சமூக அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் நிதியொதுக்கீட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தக் குடிதண்ணீர்த் திட்டம் மக்களின் பாவனைக்காக இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஐசாக் ஏ.ஏ . அமீனால் கடந்த 24 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ஐ-433)

# இயந்திரம் மூலம் கிணறுகள் தோண்ட உரிய நடைமுறை

## செயற்படுத்தப்பட வேண்டும் என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,ஒக்.31
பொருத்தமான அனுமதி நடைமுறையின் கீழ், இயந்திரப் பொறி முறை மூலமான குழாய்க் கிணறு தோண்டுவதற்கு உள்ளூராட்சி சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அனுமதி பெறாது தோண்டப்படும் குழாய்க் கிணறுகள் மீது சபைகள் உரிய சட்ட நடவடிக்கைகளை எதிர்காலத்தில் எடுக்க முன்வரவேண்டும் என அரச அதிபர் நா.வேதநாயகன் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த செலவில் உள்ளூராட்சிச் சபைகளின் அனுமதியின்றி இயந்திரப் பொறி முறை மூலம் குழாய்க் கிணறு அமைக்கப்படும் நடைமுறையைக் கட்டுப்படுத்த சபைகள் முன்வர வேண்டும். மேலும், எதிர்காலத்தில் கிணறுகள், குழாய்க் கிணறுகள் அமைக்கும் போது அதற்கான உட்கட்டுமான விண்ணப்ப நடைமுறையின் கீழ் அனுமதி பெற்றே அமைக்கப்படுவதை உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும். இந்த நடைமுறையை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் செயற்படுத்த அனைத்து உள்ளூராட்சிச் சபைகளும், பிரதேச செயலர்களும் முன்வரவேண்டும் என அரச அதிபர் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-50)


பரதநாட்டிய அரங்கப் பிரவேசம்





சிவஸ்ரீ நா.திவாகரக்குருக்கள் - ஜெயப்பிரபா
தம்பதியரின் செல்வப் புதல்வியும், உரும்பிராய் கலைக்கோயில் நடன அதிபர் ஸ்ரீமதி பத்மினி செல்வேந்திரக்குமார் அவர்களின் மாணவியுமான

**செல்வி தி.அபிராமி**

அவர்களின் நடன அரங்கேற்ற நிகழ்வு
01.11.2015 ஞாயிற்றுக்கிழமை
காலை 9.00 மணிக்கு நீராவியடி இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அனைவரையும் வருகை வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் - சிவஸ்ரீ சாம்பவசிவ ஐயப்பதாஸக் குருக்கள் (சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியத் தலைவர்)

பரதநாட்டிய அணிசேர் கலைஞர்கள்
பாட்டு :- இசைமாமணி தவநாதன் றொபேட்
மிருதங்கம் :- இசைக்கலைமணி சி.துரைராஜா
வயலின் :- இசைஞானச்சுடர் அ.ஜெயராமன்
தொகுப்பு :- S.லலீசன் (விரிவுரையாளர், கோப்பாய்)

இணை அனுசரணை
முத்தொளி வீடியோ (தில்லையம்பதி கோண்டாவில்)
படப்பிடிப்பு : Rex Photo (நாச்சிமார் கோவிலடி)
ஒளி :- மனோ லைற்ஸ் (கோப்பாய்)
ஒலி :- சப்தமி க.முரளி (கொக்குவில்)

சாத்வீகன் பிரிண்டர்ஸ் (பவா அண்ணா இணுவில்)
பிரம்மஸ்ரீ தாணு, வாசுதேவக்குருக்கள் (தாத்தா)
சுசீலாதேவி (பாட்டி)
மாமாமார்களான:- வஸ்தன், விஷ்ணு, ஜெனா.


# தொழில்நுட்பக்கல்லூரி பகுதி நேர போதனாசிரியர்களுக்கு வெற்றிடம்

யாழ்ப்பாணம்,ஒக்.31
வவுனியா தொழில்நுட்பக் கல்லூரிக்கு பகுதி நேர போதனாசிரியர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன. எலெற்றோனிக், எலெற்றிக்கல் வயறிங், ஓட்டோ மொபைல் போன்ற கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரிகள் குறித்த துறையில் பட்டம் பெற்றிருத்தல் அவசியம். எதிர்வரும் நவம்பர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர், விண்ணப்பங்களை, அதிபர், தொழில்நுட்பக்கல்லூரி, மன்னார் வீதி, நெளுங்குளம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு வவுனியா தொழில்நுட்பக்கல்லூரி அதிபர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். இந்தப் பதவி தற்காலிகமானதும் , ஒருவருட சேவைக் காலத்தைக் கொண்டதுடன் சேவை திருப்திகரமற்ற தாயின் முன்னறிவித்தலின்றி இடைநிறுத்தப்பட இயலும் எனவும் அறிவித்துள்ளார். (ஐ-ரி4)

# காட்டுயானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு,ஒக்.31
வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மீயங்குளம் என்ற இடத்தில் காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இடம் பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஓட்டமாவடி மௌலானா வீதியைச் சேர்ந்த 56 வயதான மொகமது ஹனிபா என்பவரே உயிரிழந்துள்ளார். இந்தத் தாக்குதலில் காயமடைந்த குறித்த நபர் வாழைச் சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு அவசர சிகிச்சைகள் அளிக்கப்பட்டபோதும், சிகிச்சை பயனின்றி உயிரிழந்ததாக வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த பகுதியில் குப்பைகள் அதிகமாக கொட்டப்படுவதால் அண்மைக் காலமாக காட்டு யானைகள் பிரதான பாதையை அண்மித்து, நடமாடுவது அதிகரித்துள்ளதாகவும், சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்துத் தொடரும் உயிரிழப்புக்களைத் தவிர்க்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-10)


புங்குடுதீவு 11ஆம் வட்டாரம், போக்கத்தை
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
மஹா கும்பாபிஷேகம்

01.11.2015
எண்ணெய்க்காப்பு :- காலை 8.00 - மாலை 4.00 வரை


02.11.2015
கும்பாபிஷேகம் :- காலை 9.15 - 10.30 வரை நடைபெறும்.

அடியவர்கள் அனைவரும் வருகைதந்து ஆசி பெற்று செல்லவும்.

ஆலய தர்மகர்த்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த இதயங்களை உயிர்ப்பிக்கும் அதிசய கருவி



ஆரோக்கியமாக இருக்கும் ஒருவருக்கு திடீரென்று ஏற்படும் மாரடைப்பு அல்லது பிற இதயக் கோளாறுகள் காரணமாக இதயம் துடிப்பது அல்லது இயங்குவது நின்றுவிட்டால் அடுத்து சில நிமிடங்களில் சாவு தான் என்றிருந்தது அந்தக் காலச் சூழல். ஆனால் விஞ்ஞானம் வேகமாக வளர்ந்துவரும் இந்த நவீன காலத்தில், மாரடைப்பு போன்ற இதயக்கோளாறுகளால் பாதிக்கப்படும் ஒருவரைக் காலதாமதமின்றி மருத்துவமனைக் குக் கொண்டு சென்று விட்டால், நவீன சிகிச்சைகள் மூலம் காப்பாற்றிவிடலாம். குறிப்பாக இதயம் பழுதானால் மாற்று இதயம் பொருத்துவதன் மூலம் ஒருவரது உயிரைக்காப்பாற்ற முடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, மாற்று இதயத்துக்காகக் காத்திருப்போரின் எண்ணிக்கை (ஒரு வருடத்துக்கு) ஆயிரங்களில் என்றால் சிகிச்சைக்கு கிடைக்கும் மாற்று இதயங்களின் எண்ணிக்கையோ நூறைத்தாண்டுவதே சாத்தியமில்லை என்ற நிலைதான் இன்றுவரை உள்ளது. இதயமாற்று அறுவைச் சிகிச்சைக்கு புகழ்பெற்ற இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளிலும்கூட இதேநிலைதான். உதாரணமாக, அமெரிக் காவில் வருடத்துக்கு சுமார் 2400 இதய மாற்று அறுவைச் சிகிச்சைகளுக்கு நோயாளர்கள் தயார் நிலையில் இருந்தாலும் கிடைப்பதென்னவோ வெறும் 180 இதயங்கள் தான். தற்போது, இதயத்தைத் தானம் செய்பவருடைய இதயம் உடலுக்குள் இருக்கும்போதே அதனை மெல்ல மெல்லக் குளிர்வித்து, பின்னர் அதன் துடிப்பை நிறுத்தி, அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றி பின்னர் வேறொருவருக்கு பொருத்தப்படுகிறது. அதேசமயம் அந்த இதயத்தில் உள்ள பிராண வாயு தீர்ந்துபோகும் முன்னர் மாற்று இதயத்துக்காகக் காத்திருப்பவரின் உடலுக்குள் பொருத்திவிட வேண்டும். இதுதான் இதுவரையிலான இதய மாற்று அறுவைச் சிகிச்சைத் தொழில்நுட்பமாக இருந்து வருகிறது. அமெரிக்காவில் அண்மையில் வெளியாகியுள்ள ஒரு செய்தியின் படி, ஒருவரின் உடலுக்குள்ளேயே செயலிழந்துபோன அல்லது இறந்துபோன ஓர் இதயத்தைக்கூட மீண்டும் உயிர்ப்பிக்கும் அட்டகாசமான திற னுள்ள ஒரு அதி நவீன கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது. அமெரிக் காவின் மசாச்சுசெட்ஸ் நகரிலுள்ள 'ட்ரான்ஸ்மெடிக்ஸ்' எனும் நிறுவனம் உருவாக்கியுள்ள இந்த அதிசயக் கருவி, மாற்று இதயங்களை வெதுவெதுப்பான சூட்டில் வைத்து தொடர்ந்து இயங்கும் நிலையில் பாதுகாக்கிறது. இது தற்போதைய குளிர்விக்கும் முறைக்கு நேர்மாறாக இருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் புதிய தொழில்நுட்பத்தில், மாற்று இதயம் ஒரு கிருமிகளற்ற பெட்டிக்குள் வைக்கப்பட்டு, அதனுள் இதயத்துக்கு பிராண வாயு, குருதி மற் றும் ஊட்டச்சத்துகள் அனைத்தும் குழாய்கள்மூலம் தொடர்ந்து செலுத்தப்படுகிறது. இதன்மூலம் உடலுக்கு வெளியே ஒரு மாற்று இதயமானது, நீண்ட நேரம் செயல்படும் நிலையில் இருக்க முடியும் என்கிறார்கள் இதனை உருவாக்கிய ஆய்வாளர்கள்.

# மர நடுகை மாதம்

## இயற்கையும் செயற்கையும்

*"மரங்களை நாட்டுவதற்கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்.*
*-சீனப் பழமொழி.*

**கார்** மேகங்கள் கை கொடுக்கக் கார்த்திகை மாதத்தை மரம் நடுகை மாதமாகக் கொள்வது சாலவும் பொருத்தமானதே. இதற்காகப் பல்வேறு தரப்பினரும் முழு வீச்சுடனும், முழு மூச்சுடனும் உழைக்கக் கங்கணம்கட்டியிருப்பதனை பத்திரிகைச் செய்திகள் பறைசாற்றுகின்றன. சூழல் நேயம் கொண்டவர்களுக்கு இது கரும்பான செய்தி தான்.

கோவில்களில் நிகழும் கருமங்கள்பற்றி ஏதாவது, விமர்சனம் செய்தால், தெய்வ நிந்தனை ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சிப்போலும், சிலர் இங்கு நிகழும் செயற்பாடுகளை விமர்சிப்பதில்லை. ஆனாலும் தெய்வ நிந்தனை ஏற்பட்டாலும் பரவாயில்லை, 'சூழல் நிந்தனை' ஏற்படுவதை உண்மையான சூழல் நேசிப்பாளர், எதிர் காலச் சந்ததியினர் மீது பற்றுக்கொண்டவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை விலக்கப்படவேண்டும் எனக் குரல்கள் ஓங்கி ஒலித்து வரும் இந்தத் தருணத்தில், கோவில் ஒன்றில், பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட 'றெடிமேட்' மாவிலைத் தோரணங்கள் தொங்க விடப்பட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மா, தென்னை, பனைக்கு ஊறு விளைவிக்காமலிருக்கவே இவ்வாறு 'றெடிமேட்' அலங்காரப் பொருள்கள் கொள்வனவு செய்து தொங்கவிடப்பட்டதாகச் சம்பந்தப்பட்ட தரப்புச் சமாதானம் கூறலாம்.

எவ்வாறாயினும், தோரணங்கள் பின்னுகின்ற திறன் மற்றும் அதனூடாகப் பெற்றுக் கொள்கின்ற மன நிறைவு போன்றவை இனி வரும் சந்ததிக்கு எட்டாக் கனியாகவே இருக்கும்.

போகிற போக்கில், கோவில்களில் மருத்துவக் குணம்கொண்ட வேப்பிலையின் இடத்தையும் பிளாஸ்ரிக் வேப்பிலை பிடித்துவிடுமோ?

தோரணம் பின்னும்போது, கைச் சிறுதசைநார்கள் தொழிற்படுகின்றன. அதனை மூளை இயக்குகின்றது. அதன் போது உடலும் உள்ளமும் சேர்ந்து இயங்குகின்ற உள உடலியக்கத்திறன் -psychomotor- பிள்ளைகளிடையே- ஏன்பெரியவர்களிடையேயும் வளர்த்தெடுக்கப்படுகின்றது. ஆதனால் தான் பாடசாலை ஆரம்பக் கல்வி கலைத்திட்டத்திலும் இத்தகைய செயற்பாடுகள் புகுத்தப்பட்டுள்ளன. அதனை மேலும் மெருகேற்றும், பயன்படுத்துமிடமாக சமூக சமய பண்பாட்டு நிறுவனங்களும், விழாக்களும் திகழ வேண்டும். அதனை விடுத்து சூழலுக்கு மிகப் பாரதூரமான விளைவை ஏற்படுத்தும் 'பிளாஸ்ரிக்' தோரணங்களால் பயனில்லை.

செ.செல்வராஜா, அரியாலை

# மட்டக்களப்பில் நடைபெற்ற பாரம்பரிய கலை விழா















மட்டக்களப்பு மாவட்ட மண்முனை மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையும், பிரதேச செயலகமும் இணைந்து நடத்திய கலாசாரவிழாவும் இலக்கிய விழாவும் பிரதேச செயலக மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கிராமிய பாரம்பரிய கலை, பண்பாட்டு விழுமியங்களை வெளிக்கொணரும் வகையில் பல நிகழ்வுகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மட்டக்களப்பு மேற்கு வலய கல்விப் பணிப்பாளர் கே.சத்தியநாதன், கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்கள ஓய்வுநிலை உதவிப் பணிப்பாளர் எஸ்.எதிர்மன்னசிங்கம், உதவி பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு, மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் த.மலர்செல்வன், வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி [illegible] அங்கு கலைஞர்கள் கௌரவிப்பு மற்றும் ஆக்கப் போட்டிகளில் வெற்றிபெற்ற [illegible] வழங்கல், கலை நிகழ்வுகளில் பங்குபற்றியவர்களுக்கு பரிசில்கள் வழங்கல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன. விழாவில் வடமோடி கூத்து, தென்மோடி கூத்து, கரகம், வசந்தன், கவிதை மற்றும் கன்னங்குடா பாடசாலை மாணவிகளின் நடனம் உள்ளிட்ட பல கலை நிகழ்வுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நடிகர் விவேக்கின் மகன் சாவு

சென்னை,ஒக்.31

பிரபல நகைச்சுவை நடிகர் விவேக்கின் மகன் உடல்நலக்குறைவால் நேற்று முன்தினம் சாவடைந்தார்.

தமிழ் சினிமாவில் தனது நகைச்சுவையால் மக்களைக் கவர்ந்து இழுத்தவர் விவேக். இவரது மகன் பிரசன்னா(வயது-13) கடந்த ஒன்றரை மாதமாக மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுச் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். இவரது உடல் விவேக்கின் சொந்த ஊரான திருநெல்வேலிக்குக் கொண்டு செல்லப்படுகிறது. நோய்வாய்ப்பட்டிருந்த மகனுக்காகவே அண்மைக்காலமாக விவேக் திரைப்படங்களைத் தவிர்த்து வந்ததாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஐ)



# தெற்கு சூடானில் நடை
# துன்புறுத்தல்களில் சி

## அறிக்கையில் திடுக்கிடும் தகவல்

ஜுமா, ஒக்.31

ஆபிரிக்காவில் உள்ள தெற்குச் சூடானில் நடைபெற்று வரும் போரால் பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளதுடன், சுமார் 20 லட்சம் பேர் வீடுகளை இழந்து வாழிடம் இல்லாமல் தவித்து வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அத்துடன் போரின் போது பொதுமக்கள் பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்கொண்டதாகவும் திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து தெற்கு சூடானில் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. இந்தப் போரில் இராணுவத்தினரும், தீவிரவாதிகளும் பரஸ்பரம் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். பல பகுதிகள் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ளன. இரு தரப்புக்களுக்கும் இடையில் நடைபெற்று வரும் போரால் இதுவரை பல்லாயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். சுமார் 20 லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். இந்தப் போர் தொடர்பில் ஆபிரிக்க யூனியன் சார்பில் விசாரணை நடத்தப்பட்டது. அதன் அறிக்கை தற்போது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில், பல்வேறு

# மூளையை சேதப்படுத்திய மருத்துவரை இழப்பீடு செலுத்த உத்தரவு



ஒட்டாவோ,ஒக்.31

கனடா நாட்டில் பல் வலிக்குச் சிகிச்சை பெற வந்த பெண் நோயாளி ஒருவரின் மூளையைத் தவறுதலாகச் சேதப்படுத்தியை மருத்துவர் குறித்த பெண்ணுக்கு ஒரு லட்சம் டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் என மருத்துவர்கள் விசாரணைக்குழு உத்தரவிட்டுள்ளது. பிரிட்டன் கொலம்பியா மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவர், பல் வலியால் பெரும் அவதிக்குள்ளாகியிருந்தார். அதே மாகாணத்தில் உள்ள கம்லூப்ஸ் என்ற நகரில் மருத்துவராக உள்ள போபி ரிஷிராஜ் என்பவரிடம் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டுள்ளார். பரிசோதனை செய்த ரிஷிராஜ், வலியை ஏற்படுத்தும் பல்லை நிரந்தரமாக நீக்க வேண்டும் என்றும், சிகிச்சையின்போது வலியை உணராமல் இருப்பதற்கு மயக்க மருந்து கொடுக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். இதற்குச் சம்மதம் தெரிவித்த அந்தப் பெண், சிகிச்சைக்குத் தயாராகியுள்ளார். முன்னதாக, இதுபோன்ற சிகிச்சைகளுக்கு மிதமான அளவில் மட்டுமே மயக்க மருந்து அளிக்க வேண்டும் என மருத்துவர்கள் குழு வலியுறுத்தியிருந்தது. ஆனால், சிகிச்சைக்குத் தயாராக இருந்த அந்தப் பெண்ணுக்கு அளவுக்கு அதிகமாக மயக்க மருந்து அளித்து ஆழ்ந்த மயக்கத்துக்குச் செல்லும் வகையில் மருத்துவர் சிகிச்சை அளித்துள்ளார். இதன் விளைவாக, பெண்ணின் மூளை மோசமாகப் பாதிப்படைந்து பெரும் பக்க விளைவுகளை ஏற்படுத்தியது. 2012 ஆம் ஆண்டு நவம்பவர் மாதம் நிகழ்ந்த இந்தத் தவறான சிகிச்சையை எதிர்த்து பாதிக்கப்பட்ட பெண் வழக்குத் தொடர்ந்திருந்தார். இந்த வழக்கைச் சில தினங்களுக்கு முன்னர் பல் வைத்தியக் கல்லூரிக் குழுவினர் விசாரணை செய்தபோது, ரிஷிராஜ் தவறான சிகிச்சை அளித்தமை நிரூபணம் ஆனது.

மருத்துவரின் பொறுப்பற்ற நடவடிக்கையைக் கண்டித்த மருத்துவர்கள் அவரை 3 மாதங்கள் தற்காலிகமாக மருத்துவப் பணியைத் தொடரத் தடை விதித்ததுடன், பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு லட்சம் டொலர் இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளனர். (ஐ-ரி4)

## செவ்வாய்க் கிரகத்தில் நடமாடும் துருவக் கரடி

நியூயோர்க், ஒக். 31

செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வு நடத்திவரும் நாசாவின் கியூரியோசிட்டி ரோவர் ரோபோ அனுப்பும் புகைப்படங்களை நாசாவை விட, அதிகமாக ஆய்வு செய்யும் யு.எப்.ஓ. சைட்டிங்ஸ் டெய்லிஎன்ற இணையத்தளம், அண்மையில் புகைப்படம் ஒன்றில் ரோமத்துடன் உள்ள துருவக் கரடி தென்படுவதாக தெரிவித்துள்ளது. வேற்றுக் கிரகவாசிகள் இருப்பதாக ஆணித்தரமாக நம்பும் ஸ்காட் சிவாரிங் என்பவர் இந்த இணையத்தளத்தில் 'நாசா திட்டமிட்டு எமக்கெல்லாம் செவ்வாய் கிரகம் பற்றிய உண்மையான விவரங்கள் தெரியக் கூடாது என்பதற்காகவே, கருப்பு வெள்ளைப் புகைப்படங்களை வெளியிடுவதாக' குறிப்பிட்டுள்ளார். மேலும், தனது இந்தக் கண்டுபிடிப்பைப் பற்றிய தகவல்களை, உலகோடு பகிர்வது மட்டுமின்றி ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கி-மூனுக்கும் இதன் விவரங்களை அனுப்ப இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-ரி4)



## அலைபேசியில் பாடல் கேட்ட சிறுவன் உயிருடன் எரித்துக் கொலை

புதுடில்லி,ஒக்.31

மத்திய பிரதேசத்தில் அலைபேசியில் சத்தமாகப் பாட்டுக் கேட்டுக்கொண்டிருந்த பழங்குடியினச் சிறுவன் ஒருவனை உயிருடன் எரித்துக் கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தார் மாவட்டம் அச்சகோடா கிராமத்தைச் சேர்ந்த மாடியா (வயது-16) என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்த சிறுவன், தனது அலைபேசியில் சத்தமாகப் பாட்டுக் கேட்டதாகக் கூறப்படுகிறது. அப்போது, உயர் சாதியைச் சேர்ந்த சிலர், சிறுவனிடம் பாட்டுச் சத்தத்தைக் குறைக்குமாறு கூறியுள்ளனர். அதற்குச் சிறுவன் மறுப்புத் தெரிவித்ததால் ஆத்திரமடைந்த அவர்கள் மாடியாவை அடித்துக் கயிற்றில் கட்டி மரத்தில் தொங்க விட்டு, உயிருடன் தீ வைத்து எரித்துக் கொன்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் குறித்து மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தியபோது, மாவட்ட காவற்றுறை கண்காணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட காவற்றுறை அதிகாரி ஆகியோரைப் பதில் அளிக்க உத்தரவிட்டுள்ளது. (ஐ)


# செயற்கை முறைக் கருத்தரிப்பில் குழறுபடி

வொஷிங்டன்,ஒக்.31

அமெரிக்காவில் கருவிலேயே இறந்து போன ஒருவரின் விந்தணு மூலமாக மற்றொருவருக்குக் குழந்தை பிறந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு தம்பதியினர் செயற்கைமுறையில் குழந்தை பெற்றுக் கொள்வதற்காக மருத்துவரொருவரின் உதவியை நாடினர். இதையடுத்து செயற்கைக் கருவூட்டலுக்காக கணவனின் விந்தணுவைச் சேமித்து மனைவிக்குச் செலுத்தப்பட்டது. இந்த முயற்சியின் மூலம் அவர்களுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இந்த நிலையில் குழந்தையின் குருதிப் பிரிவைச் சோதித்த போது, 'ஏபி' வகையைச் சேர்ந்தது என்பது தெரியவந்தது. பெற்றோர் இருவருமே 'ஏ' குருதிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதால் ஏதோ குளறுபடி ஏற்பட்டு விந்தணு மாறி விட்டதாகத் தம்பதியினர் [illegible]னர்.

இதையடுத்து அந்த மருத்துவர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். எனினும், விசாரணை முடிவில், இந்தத் தம்பதிகளின் விந்தணுக்களுக்குள் எந்தவிதக் குளறுபடியும் நிகழவில்லை எனத் தெரியவந்தது. இதையடுத்து, அண்மையில் அந்தத் தந்தையிடம் மேற்கொண்டு பரிசோதனை செய்தபோது, ஒரு அதிர்ச்சித் தகவல் தெரியவந்தது. அதன்படி, குழந்தையின் தந்தை கருவாக [illegible] இரட்டையராக [illegible] அதில் ஒருவர் கருவிலேயே அழிந்துவிட்டதாகவும் தெரியவந்தது. ஆனால், அந்தச் சிதைந்து போன குழந்தையின் குருதி மாதிரி அவரது உடலுடன் சேர்ந்துள்ளது. அந்தக் குருதி மாதிரி மூலமாகவே தற்போது குழந்தை பிறந்துள்ளது என்பது தெரியவந்துள்ளது. அதாவது கருவில் இறந்துபோன தனது சகோதரனின் குழந்தைக்கு அவர் தந்தையாகியுள்ளார். கைமேரா என அறியப்படும் இந்தப் பிரச்சினை மிகவும் அரிதாகவே மருத்துவ உலகில் நிகழ்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...டைபெறும் போர்; ...சிக்கிய மக்கள்

## ...வல்கள்

திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தீவிரவாதிகளும், இராணுவப் படையினரும் மிகவும் மோசமாக நடந்து கொண்டதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இரு தரப்பினருமே பெண்களைக் கடத்திச் சென்று பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியுள்ளனர். தீவிரவாதிகள் தங்களது எதிரிகளைக் கொன்று அவர்களுடைய குருதியைப், பொதுமக்களை வற்புறுத்திக் குடிக்க வைத்துள்ளனர். மேலும் கொல்லப்பட்டவர்களைத் தீயில் வாட்டி அவர்களுடைய இறைச்சியை மக்களைக் கட்டாயப் படுத்தி உன்னச் செய்துள்ளனர். இது போன்று மிக மூர்க்கத்தனமான செயற்பாடுகள் இடம்பெற்றிருந்ததாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ஐ-ரி4)


# பின்லேடன் கொலை விவகாரம்; இரகசியத் தகவல்கள் வெளியீடு

வொஷிங்டன்,ஒக்.31

பின்லேடன் கொலையில் நான்கு சட்டத்தரணிகளே ஒபாமாவுக்கு சட்ட வழிமுறைகளை வகுத்துத் தந்தனர் என்பது உள்ளிட்ட இரகசியத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவில் வொஷிங்டன் பென்டகன் இராணுவத் தலைமையகம் மீதும், நியூயோர்க் உலக வர்த்தக மையம் மீதும் கடந்த 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் விமானங்களை மோதி அல்கொய்தா தீவிரவாதிகள் கொடூர தாக்குதல்களை நடத்தினர். 3 ஆயிரம் பேர் உயிழரிக்க நேர்ந்த இந்தத் தாக்குதலின் பின்னணியில் இருந்து இயக்கியவர், அந்த இயக் கத்தின் தலைவர் ஒசாமா பின்லேடன். அந்தத் தாக்குதல் நடந்து 10 ஆண்டுகள் கழித்து, பின்லேடன் பாகிஸ்தானில் அப்போதாபாத்தில் பதுங்கி இருந்தபோது, கடந்த 2011 ஆம் ஆண்டு மே மாதம் அமெரிக்காவின் அதிரடித் தாக்குதலில் கொல்லப்பட்டார். அமெரிக்கத் தாக்குதலும், பின்லேடன் படுகொலையும் உலக வரலாற்றில் மறக்க முடியாத நிகழ்வுகளாகப் பதிவாகி உள்ளன. பின்லேடனைக் கொல்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா முடிவு எடுத்து, அதை மிகவும் இரகசியமாகவும், அதிரடியாகவும் செயற்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் தற்போது வெளிவந்துள்ளன.



பாகிஸ்தான் மண்ணில், பாகிஸ்தான் அரசின் அனுமதியின்றிச் சென்று பின்லேடனைத் தீர்த்துக்கட்டுவதற்கான வழிமுறைகளை ஒபாமாவின் சட்டத்தரணிகள் நால்வர் வகுத்துக் கொடுத்துள்ளனர். பின்லேடன்கொலை தொடர்பாக அவர்கள் 5 சட்ட ஆலோசனைக் குறிப்பாணைகளைத் தயார் செய்திருக்கிறார்கள். அதை உச்சக் கட்டப் பாதுகாப்புமிக்க லப்-டாப் களில் பதிவேற்றம் செய்து, நம்பிக்கைக்குரிய தூதுவர்கள் மூலம் கொடுத்து அனுப்பியுள்ளனர். பின்லேடனைக் கொல்வதற்கு சில தினங்களுக்கு முன்னர் பாகிஸ்தானுடன் போர் தொடுக்காத நிலையில், அந்த மண்ணில், அந்த நாட்டு அரசின் அனுமதியின்றித் தாக் குதல் நடத்தினால், அது சர்வதேச சட்டத்தை மீறிய செயல்என்றுபென்டகன் சட்டத்தரணி ஜெஹ் ஜான்சன், குறிப்பிட்டுள்ளார். ஆனால் பின்லேடனைக் கைது செய்யுமாறு பாகிஸ் தானைக் கேட்டுக்கொண்டாலோ அல்லது அமெரிக்கத் தாக்குதலுக்கு அனுமதியை நாடினாலோ அது அமெரிக்காவின் திட்டத்தில் சமரசம் செய்துகொள்வது போலாகி விடும் என வெள்ளை மாளிகை கருதியது. பாகிஸ்தான் உளவுத்துறைக்கு பின்லேடன் அவசியம் என்று கருதி, அவர் தப்பிச் செல்வதற்கு அந்த நாட்டு அரசின் உதவியை நாடி விடக்கூடும் எனவும் வெள்ளை மாளிகை அஞ்சி இருக்கிறது. பாகிஸ்தானுக்குள் அந்த நாட்டின் அனுமதியின்றி ஏதேச்சதிகாரமாக அமெரிக்க இராணுவம் ஊடுருவுவதை விதிவிலக்காகக் கொள்ளலாம் எனச் சட்டத்தரணிகள் குறிப்பிட்டுள்ளனர். இந்தத் தகவல்கள் பின்லேடன் கொல்லப்பட்டு 4 ஆண்டுகள் முடிந்த நிலையில் 'தி நியூயோர்ச் டைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகிப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. (ஐ-ரி4)



## காற்றின் நிறையில் உலோகம்

வொஷிங்டன்,ஒக்.31

உலகில் மிக இலேசான உலோகமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அந்த உலோகம் 99.99 சதவீதம் காற்றின் நிறைக்குச் சமனான நிறையைக் கொண்டுள்ளது. ஜெட் விமான உற்பத்தியில் மிக இலேசான உலோகத்தால் உருவான ட்ரீம் லைனர் ஜெட் புதிய திருப்பு முனையாக அமைந்துள்ளது. இந்த உலோகம் மிக உறுதியானதும், செயற்பாட்டுத் திறன் அதிகமானதும் ஆகும். இந்த உலோகக் கண்டுபிடிப்பு, விமான உலகில் பெரும் செலவைக் குறைக்கும் ஒன்றாகவும், தீர்வாகவும் அமைந்துள்ளது.

(ஐ-ரி4)







கிறீஸ் நாட்டில், அமெரிக்க தொல்பொருள் ஆய்வாளரொருவரால், புராதன பொக்கிசமொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. மூவாயிரத்து 500 வருடங்கள் பழைமை வாய்ந்த போராளியின் புதை படிமம் கிடைத்துள்ளதாக கிறீஸின் கலாசார அமைச்சுத் தெரிவித்துள்ளது. கடந்த 65 ஆண்டு காலப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருளில் இது மிகச்சிறந்ததாகக் கிறீஸ் அரசு தெரிவித்துள்ளது. இது மரத்தாலான சவப்பெட்டி [illegible] மைசினனியன் அரண்மனையைச் சார்ந்த போராளி என ஆய்வுக [illegible]. அந்தப் போராளியின் படிமத்தில் தங்கத்தால் ஆன ஆபரணங்கள் அ[illegible]பட்டிருந்தன. முத்துமாலை, முத்திரை மோதிரங்கள், தங்கம் மற்றும் தந்தத்தால் ஆன கைபிடி கொண்ட வெ[illegible]வாள், தந்தத்தால் ஆன சீப்பு என்பன அந்தப் படிமத்துடன் கண்டெடுக்கப்பட்டன. (ஐ...

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எல்லா நேரமும் படி படி என்றால்...

நாடகம் நெல்லியடி மத்திய கல்லூரியின் கலையரங்கத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை மேடையேறுகின்றது. பெற்றோரும் சிறுவர்களும் தவறாமல் பார்க்கவேண்டிய நாடகம். கற்பனைப் பெரு வெளிதான் சிறுவர்களின் பலம். இந்த நாடகம் அதனைத் தவறாமல் கொடுக்கும்.



பசுபதி தேபிந்த்

“யாரங்கே! இவர்களை அழைத்துப்போய் வேண்டிய அளவு சிரிப்பைக் கொடுத்து அனுப்புங்கள்” என்று கம்பீரமாக ஆணையிடும் அரசருக்கு வயது ஆறுக்கு மேல் இருக்காது. பால் மணம் மாறாத பிஞ்சு என்றாலும் பழுத்த அரசனுக்குரிய நேர்த்தியுடன் உத்தரவிட அச்சம் ஏதும் இல்லை அந்தச் சிறுவனுக்கு.

காலடியில் கிடக்கும் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு அதை எங்கோ அலைந்து திரிந்து தேடாதீர்கள் என்று பெரியவர்களுக்கும் சேர்த்துச் சொல்லும் ‘சிரிப்பு மூடை’ நாடகத்தின் இரண்டாவது அரசன் அந்தச் சிறுவன். அஸ்வின்ராம்.

தரம் மூன்றிலிருந்தே பிழிந்தெடுக்கப்படும் புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களின் துன்பத்தை, ஏக்கத்தை வெளிப்படுத்தும் நாடகமாக இருந்தாலும், பெரியவர்களுக்கும் பாடம் சொல்லிக்கொடுக்கும் மிகச் சிறப்பான நாடகம். அங்கதச் சுவைதான் நாடகத்தின் அடிநாதம் எனினும், அது பேசும் பொருள் பாரதூரமானது.

தரம் ஐந்து போட்டிப் பரீட்சைக்காக எல்லா நேரங்களிலும் படி படி என்று சிறுவர்களை இயந்திரத்தனமாக விரட்டியடிக்கும் பெற்றோர்களிடம் எதிரில் பல கேள்விகளை அனாயாசமாகத் தூக்கி எறிகிறது நாடகம். பாடசாலைக்குப் போனால் படி படி. டியூசனுக்குப் போனால் படி படி. வீட்டுக்கு வந்தால் படி படி. என்றால் பிள்ளைகள் என்னதான் செய்வது? எப்போதுதான் விளையாடுவது?

வாத்தியார் அசந்த நேரத்தில்தான் அவர்கள் குறும்பு செய்கிறார்கள். வாத்தியார் திரும்பியதும் மீண்டும் படிப்பதாகப் பாவனை செய்கிறார்கள். படிப்பு பிள்ளைகளின் விருப்புக்குரியதாக அல்லாமல் விசனத்துக்குரியதாக மாறிவிட்டமை எவர் குற்றம்? அரிசி, மா, சீனி விலைகள் கூடியதைவிட ஐஸ்கிறீம் விலையைக் கூட்டிவிட்டார்களே என்ற அவர்களின் கவலையை எவர் உணர்வார்கள்? பிள்ளைகளின் கனவுகள் எத்தகையன? அவர்களது கற்பனையுலகு எத்தகையது? என்று பலவிடயங்களை

உதயன்
ஊடக அனுசரணை

அடுக்கிக் கொண்டு செல்கின்றது நாடகம். ஈழத்தின் மிக முக்கிய நவீன நாடக கர்த்தாக்களில் ஒருவரான தே.தேவானந்தின் எழுத்திலும், வடிவத்திலும், நெறியாள்கையிலும் உருவான சிறுவர் நாடகம் இது என்றபோதும், பெரியவர்கள் அனைவரும் தவறாமல் பார்க்கவேண்டிய நாடகம். தேவானந்த் நீண்ட காலமாகவே சிறுவர் நாடகங்களில் அக்கறை செலுத்தி வருபவர். அவரது ‘துணிவு’ என்கிற முதலாவது சிறுவர் நாடகம், போர்க்காலத்தில் பாதிப்புக்களைச் சந்தித்த சிறுவர்களுக்குத் தற்துணிவை வழங்கும் உளவியல் உத்தியோடு கூடியது.

போர்க் காலத்திலும், போருக்குப் பின்னான அமைதிக்காலத்திலும், அவரது நாடகங்கள் பல, கடந்த காலங்களில் பேசாப் பொருள்களைப் பேசியிருக்கின்றன. ஊடுருவ முடியா வெளிகளைக் கடந்திருக்கின்றன. அதே சமூக அக்கறையுடன் இப்போதும் அவரது நாடகப் பயணம் தொடர்வது சிறப்பானது; தேவையானது.

நாடகம் பார்க்க ரசிகர்கள் வருவதில்லை என்கிற குறைகளை எல்லாம் தகர்த்தெறிந்து, மீண்டும் நாடக உலகுக்கு நம்பிக்கையளித்ததில் தேவானந்திற்கும் அவரது செயற்றிறன் அரங்க இயக்கத்திற்கும் நிறையவே பங்குண்டு. நல்லூரில் உள்ள அவர்களது அரங்கத்திற்கு இரவு 8 மணிக்குப் பின்னரும், மழைக்கு மத்தியிலும் கூடிய ரசிகர்கள் அதற்குச் சான்று. வந்துவிட்ட ரசிகர்களை ஏமாற்றிவிடக் கூடாது என்று மழை தூறத் தூற நாடகம் போட்டமை செயல்திறன் அரங்க இயக்கத்தினரின் பாங்கு. இதுபோன்ற அர்ப்பணிப்புக்களால்தான், அரங்கைத் தேடி மக்களை வரவழைப்பதில் அவர்கள் வெற்றியை நிலைநாட்டினார்கள்.

அத்தகைய வெற்றியைச் சாத்தியமாக்கியதில் ‘சிரிப்பு மூடை’ நாடகத்துக்கும் கணிசமான பங்குண்டு. நலிவுற்றோர் நல நிதிக்காக, வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மீண்டும் இந்த நாடகம் நெல்லியடி மத்திய கல்லூரியின் கலையரங்கத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மேடையேறுகின்றது. பெற்றோரும் சிறுவர்களும் தவறாமல் பார்க்கவேண்டிய நாடகம். கற்பனைப் பெருவெளிதான் சிறுவர்களின் பலம். இந்த நாடகம் அதனைத் தவறாமல் கொடுக்கும். தொலைக்காட்சிகளினதும், திரைப் படங்களினதும் ஆதிக்கத்திலிருந்து பிள்ளைகளின் புலன்களைத் திருப்பி அவர்களின் கற்பனைக் குதிரைகளைத் தட்டிவிட இதைவிட ஒரு சந்தர்ப்பம் எப்போது கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லாத நிலையில், கிடைத்ததைத் தவறவிடுவது புத்திசாதுரியமானது அல்ல.

நாளைய நாடக நிகழ்வில், ஈழத்து நவீன நாடக உலகின் தாய் என வர்ணிக்கப்படும் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ‘பஞ்ச வர்ண நரியார்’ மற்றும் தேவானந்தின் ‘மரணச் சான்றிதழ்’, ‘ஏகாந்தம்’ (வேடமுக நாடகம்) ஆகியனவும் அரங்கேறவுள்ளன என்பது மேலும் மகிழ்ச்சியளிக்கக் கூடியதுதானே!

## கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வருகைக் கூடத்தில் கொமர்ஷல் வங்கி

கட்டுநாயக்கவில் உள்ள பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் வருகைக் கூடத்தில் கொமர்ஷல் வங்கி அதன் கிளை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது. இலங்கை மற்றும் வெளிநாட்டு பயணிகளின் பல்வேறு நன்மைகளைக் கருத்திற் கொண்டு இந்தக்கிளை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கிளை 24 மணிநேரமும் திறந்திருக்கும். வெளிநாட்டு நாணயமாற்றுச் சேவை, பயணிகள் காசோலைச் சேவை, வெளிநாட்டுப் பணம் பெறும் சேவை என பயணிகளோடு தொடர்புடைய முக்கிய சேவைகள் பலவும் இங்கு கிடைக்கப்பெறும். அத்துடன் வருகைக் கூடத்தில் வங்கியின் ஏ.ரி.எம் இயந்திரம் ஒன்றும் சேவைக்கு வைக்கப்பட்டுள்ளது.

தினசரி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை, வருடம் 365 நாள்களும் சேவையை வழங்கும் வங்கியின் கிளை ஒன்றும் சீதுவையில் செயற்படுகின்றது. விமானப் பயணிகள் மற்றும் பிரதேச வாசிகளின் நன்மைகருதி இங்கு பலசேவைகள் வழங்கப்படுகின்றன. (த)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்புரவு செய்யப்படுமா வடிகால்?

வண்ணை ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலயத்துக்கு முன்னுள்ள குளத்திலிருந்து வெளியேறும் வடிகால், அம்மன்வீதியின்பின்பக்கமாகஉள்ளகுடியிருப்புக்களை ஊடறுத்து பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதியூடாகக் கடலைச் சென்றடைகிறது. அம்மன் வீதிக்கு பின்புறமாக உள்ள வடிகால் கடந்த 02 ஆண்டுகளுக்கு மேலாகத் துப்புரவு செய்யப்படாத நிலையிலுள்ளதுடன் இந்த வடிகாலில் கோரை, செரி போன்ற புல்பூண்டுகள் வளர்ந்து குப்பையாகக் காணப்படுவதால் நீரோட்டம் தடை செய்யப்பட்டுள்ளது. அம்மன் வீதியிலுள்ள வீடுகளுக்கு இந்த வடிகால் பின்பக்க எல்லையாக இருப்பதால் நுளம்புப் பெருக்கத்தால் பிற்பகல் வேளையிலேயே வீட்டுக் கதவு, ஜன்னல்களை மூடி பின்பக்கத்துக்கு செல்ல முடியாதுள்ளது.

இந்தக் குடியிருப்பாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு தயவுகூர்ந்து இந்த வடிகாலைத் துப்புரவு செய்துநீரோட்டம்பிரதானவடிகாலைச்சென்றடைவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொண்டுதவுமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

– ராஜன்.

# பலம் என எண்ணும் பலவீனம்

கடந்த வாரம் எமது தெருவில் நடமாடிய இரு இளைஞர்கள் வீடு வீடாக வந்தனர். அவர்களது தோள்களில் தொங்கிய பைகள் ஒளி புகவிடும் தன்மையைக் கொண்டிருந்தமையால் பைகளுக்குள் இருந்த சி.டிக்கள் கவர்ச்சி காட்டிக் கொண்டிருந்தன. இவை உள்ளூரில் எமது இளைஞர்களின் தயாரிப்பிலான குறும்படங்கள் என்றும் சி.டி. ஒன்று 100 ரூபா என்றும் எங்கள் இளம் சமூகத்தினரின் கலைமுயற்சிக்கு ஊக்கம் தரும் வகையில் இவர்களது குறும்படத் தயாரிப்புக்களுக்கு ஆதரவு தருமாறும் கோரினர். வாயிருந்தால் வங்காளமும் போகலாம் என்ற பேச்சு வழக்கு அவர்களது சந்தைப்படுத்தல் உத்திகளில் ஒன்றாக வெளிப்பட்டது. சி.டிக்கள் வைக்கப்பட்டிருந்த உறைகள் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டு அழகாக பல வர்ணங்களில் அச்சிடப்பட்டிருந்தன.

இப்படியான எழுப்பம் காட்டும் குறும்படங்கள் பற்றியோ அல்லது அவற்றின் சி.டிக்கள் பற்றியோ விளம்பரங்களையோ, பத்திரிகைச் செய்திகளையோ பார்த்ததான ஞாபகம் எனக்கு இல்லை என்பதால் இவர்களது நடவடிக்கை மனதில் ஒரு நெருடலை ஏற்படுத்த - கலை ஆர்வலனான இருந்தபோதிலும், என்னை ஏமாற்றும் அவர்களின் முயற்சிஎடுபடவில்லை. மேலும் கதையை வளர்க்காமல் "வேண்டாம் தம்பியவை, போட்டு வாங்கோ" என அனுப் பிவைத்தேன். இரண்டு தினங்கள் கழித்து என்னுடன் பணிபுரியும் பெண் உத்தியோகத்தர் ஒருவர், தான் வீட்டில் இல்லாத வேளை "எமது பிரதேச கலைஞர்களின் பங்களிப்பிலான குறும்படங்களின் தொகுப்பான சி.டி" எனத் தெரிவித்து 100 ரூபாவுக்கு சி.டியை தமது மகனிடம் கொடுத்தனராம். ஏற்கனவே உள்ளூர் நாடக மற்றும் குறும்படங்களில் தனக்கு இருந்த ஆவலுடன் பட்டறிவு காரணமாக அவருக்குள் வளர்ந்துவிட்ட சுதேசியப் பற்றிலும் 100 ரூபாவைக் கொடுத்து சி.டியை வாங்கிய தமது மகன், ஆர்வத்துடன் அதனைப் போட்டுப் பார்த்தபோது அவர்களிடம் ஏமாந்து விட்டதைத் தெரிந்துகொண்டாராம். காரணம் அந்த சி.டியில் பதிவாகியிருந்தவை ஏற்கனவே வெளியான தென்னிந்திய திரைப்படப் பாடல் காட்சிகள் தான். வேலை முடிந்து மாலையில் வீடு வந்த தன்னிடம், தான் ஏமாற்றப்பட்டதைச் சொல்லிச் சொல்லி தமது மகன் மிக வருத்தப்பட்டாராம். அவரைத் தேற்றுவதே பெரும்பாடாகி விட்டது எனச் சொல்லி ஆதங்கப்பட்டுக் கொண்டார் அந்தத் தாய்.

கலையார்வலர்கள் அதுவும் பிரதேசப்பற்றுமிக்க இந்த மாதிரியான இளசுகளின் நியாயபூர்வமான கலையார்வம் கிள்ளி எறியப்பட வேண்டுமா? ஏமாந்த இனமாக நாமம் சூட்டப்பட்டுக்கொண்டிருக்கும் எம்மையே ஏமாற்றிப் பிழைக்கும் - காசு பண்ணும் விவஸ்தை கெட்டு நிற்கும் இந்த ஈனப்பிறவிகள் தங்கள் குணத்தை மாற்றவே மாட்டார்களா? எங்கிருந்துதான் இவர்களெல்லாம் எப்படியெல்லாம் ஐடியா போட்டுக்கொண்டு வருகிறார்களோ? ஆறாவது அறிவுக்கும் மேலானதொரு அறிவும் இனித் தேவைப்படுமா?


எப்படி எப்படியெல்லாம் மனம் போனவாறு விட்டேந்தியாக பணத்தைப் பலவழிகளிலும் செலவழிக்கும் - கலாசார வறுமையைத் தோற்றுவித்துக்கொண்டிருக்கும் திரைப்படங்களுக்காக அடிபிடிப்பட்டுக்கொண்டு பணத்தை விட்டெறியும் இளசுகள் மத்தியில், பிரதேசக் கலைப்படைப்பு என்பதற்காகக் காசைக் கொடுத்த அந்த மாணவரது செயற்பாட்டை அவரது பலவீனம் என்றோ, அதைத் தமது பலமாக்கிவிட்டதாகவோ சி.டி. விற்பனை செய்தவர்கள் கருதுவார்களாயின் நக்குகின்ற நாய்க்கு செக்கும் சிவலிங்கமும் ஒன்றுதான் எனும் வழக்கு மொழிக்கு அவர்களை உதாரணமாகக் கொள்வதில் தவறேதும் இல்லை எனலாம்.

- செல்வவேலாயுதம், யாழ். நகர்.

## வாசகர் திருமுகம்



## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# இடர்கள் குறித்து அவதானம் முன்னெச்சரிக்கை அவசியம்

ஆரம்பித்துவிட்டது மழைக்காலம். வடக்கில் மட்டுமல்லாமல் நாட்டின் பல பகுதிகளிலும் மழை தனது வேலையைக் காட்ட ஆரம்பித்துள்ளது. தொடர்ச்சியாகப் பெய்து வரும் இந்த மழையால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்படும் நிலை தோன்றியுள்ளது. பலரது இயல்பு நிலை பாதிக்கப்பட்டும் உள்ளது. கன மழை தொடர்ந்தும் நீடிப்பதால் நாட்டின் தாழ்வான பகுதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ளது. ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள நெல் வேளாண்மை நீரில் மூழ்கியுள்ள நிலையில் விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இரசிக்கக்கூடிய மழை, அழிவுகளை ஏற்படுத்த முற்படும்போது வெறுப்புத்தான் ஏற்படும். கடற்றொழிலை நம்பி வாழ்க்கை நடத்துபவர்கள் கதி அதோகதிதான். பல இடங்களில் பெய்து வரும் மழையோடு கடல் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்வதில்லை. கடல் கொந்தளிப்பு இல்லாத இடங்களிலும் அவ்வாறான இடர் ஏற்பட்டுவிடும் என்ற பயத்தால் கடற்றொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்வது பெருமளவில் குறைந்துள்ளது. இதனால் கடற்றொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. நன்னீர் மீன்பிடித் தொழிலும் வெகுவாகப் பாதிப் படைந்துள்ளதுடன், அன்றாடத் தொழிலாளர்களின் நாளாந்தத் தொழில் நடவடிக்கைகளும் பாதிப்படைந்துள்ளன. இது ஒரு புறம் இருக்க, குழந்தைகள் பாடு படு உற்சாகம். மழையாடுதல் என்ற பெயரில் நட்புக்களுடன் வெள்ள நீருக்குள் கால் அலசும் வயதினர் பாடு பெரும் கொண்டாட்டம். ஏதோ இதற்காகக் காத்திருந்தது போலவே இருக்கும் அவர்களது செய்கைகள். அவர்களுக்கு மட்டும்தான் இது மகிழ்ச்சி.

கிழக்கின் நிலைமையும் இதுதான். உன்னிச்சை மற்றும் உறுகாமம் நீர்ப்பாசனக் குளங்களின் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. அத்துடன் உன்னிச்சைச் குளத்தின் நீர்மட்டம் 21 அடி 7 அங்குலமாகவும் உறுகாமக் குளத்தின் நீர்மட்டம் 15 அடி 8 அங்குலமாகவும் உயர்வடைந்துள்ளன. அம்பாறை மாவட்டத்தில் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. மக்களின் இயல்பு வாழ்க்கையும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. சில பிரதேசங்களில் வடிகால்கள் துப்புரவு செய்யப்படாமலுள்ளதால் மழை நீர் வடிந்தோடமுடியாதநிலை காணப்படுகின்றது. சில பிரதேசங்களில் இயந்திரங்கள் மூலம் வாய்க்கால்கள் தோண்டப்பட்டுள்ளபோதிலும் முறையாக நீர் வழிந்தோடவில்லை என்பது பொதுமக்கள் குற்றச்சாட்டு. அத்துடன் பெய்துவரும் அடைமழையின் காரணமாக கல்முனை நாவிதன்வெளியை இணைக்கும் கிட்டங்கி வீதி வெள்ளத்தில் மூழ்கியுள்ளது. அங்கெல்லாம் படகுச் சேவைகள் நடைமுறைக்குத் தயாராக உள்ளன. யாழ்ப்பாணத்தில் படகுச் சேவைக்கான தேவை இல்லை. வாகரை, வாழைச்சேனை, கிரான், மட்டக்களப்பு, வவுணதீவு, காத்தான்குடி, ஆரையம்பதி, பட்டிப்பளை, களுவாஞ்சிக்குடி உட்பட பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் கடும் மழை பெய்து வருகின்றது. மக்கள் தங்களது இருப்பிடங்களில் இருந்து வேறு இடங்களுக்குச் சென்று தங்கவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. தற்போது வேளாண்மை செய்யும் காலம் என்பதனால் வேளாண்மை செய்ய ஆரம்பித்தவர்களின் வயல் நிலங்கள் நீரில் மூழ்கிக் காணப்படுகின்றது. அத்தோடு ஏற்கனவே விதைக்கப்பட்ட விதைகளும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதால் விவசாயிகளும் பாதிப்படைந்துள்ளனர். கிழக்கின் நிலைமைகளை கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் துரைராஜசிங்கம் நேரில் சென்று பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு தேவையான மாற்று நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளப் பணித்துள்ளார்.

மழை காலங்கள் சுகாதாரச் சீர்கேடுகளுக்குப் பஞ்சம் இருப்பதில்லை. தொற்றுநோய்கள், நுளம்புப் பெருக்கம், டெங்கு அபாயம் என அனைத்தும் வரிசையில் வரும். மழைநீர் தேங்கியுள்ள வடிகால்களை துப்புரவு செய்து மழை நீர் வடிந்தோட முடியாதவாறு தேங்கி நிற்கும் இடங்களிலிருந்து நீரைவடிந்தோடச் செய்ய உள்ளூராட்சி மன்றங்களினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வயல்கள் நீரில் மூழ்கியுள்ளதால் பெரும்போக நெற்செய்கையும் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் வெள்ளத்தினால் ஏற்படும் இடர்களை எதிர்கொள்வதில் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் இடரின் பின்னரான பணிகள் எனும்விடயங்கள் பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன. இந்தக் கலந்துரையாடல்களில் தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளதால் வெள்ளப்பெருக்கினால் ஏற்படும் இடர்களை எதிர்கொள்வது மற்றும் அதிலிருந்து தாழ்நிலப் பிரதேசங்களில் வாழும் மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுவது , சுகாதார சேவைகள் வழங்குதல், போக்குவரத்து, சுத்தமான குடி தண்ணீர் வசதிகள் வழங்குதல் உள்ளிட்ட இடரின் முன்னரான சேவைகள், இடரின் பின்னரான சேவைகள் பற்றி பேசப்படுகின்றது. பேசப்படும் விடயங்களைச் செயற்படுத்தினால் ஏற் படவுள்ள அழிவுகளில் இருந்து ஓரளவுக்குப் பொதுமக்கள் பாதுகாக்கப்படுவர்.

யாழ். மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் மழை காரணமாக தாழ்வான பகுதி மக்கள் இடம் பெயரத் தயாராகி வருகின்றனர். அவர்கள் பெய்துவரும் மழை காரணமாக பல இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும், மழையைத் தொடர்ந்து நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். அத்துடன் டெங்கு நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாலேயே தாங்கள் முக்கியமாக இடம்பெயரவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். கனமழையைத் தொடர்ந்து மக்களின் போக்குவரத்துப் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன. இப்படிப் பல இன்னல்கள் ஏற்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தத்தில் மழையால் ஒருபுறம் நன்மைகள் விளையும் அதேவேளை மறுபுறத்தில் சேதங்களும் இழப்புக்களும் ஏற்படுவதும் தவிர்க்கமுடியாத தொன்றே.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 492 7474, 021-492 7475,
021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021 493 1111
விநியோகம் : 021 493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மக்கள் சேவைப் போர்வைக்குள் தன்னலம் புகுத்தும் சேவகர் வேண்டாம்

★ஒரு நாட்டின் அரசு, தனது குடிமக்களை மேம்படுத்துவதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து அவற்றைச்செயற்படுத்தவேண்டும். மற்றவர்களின் விமர்சனங்களில் இருந்து விலகிக் கொள்வதும், பொதுவளங்களைச் சூறையாடாமல் இருப்பதும் பிரதானமான தேவைகள்--

★மற்றவர்களது விமர்சனங்களில் இருந்து விலகிக் கொள்ளாது பொதுவளங்களைச்சூறையாடாமல் இருப்பதோடு, நாட்டின் குடிமக்களை, மேம்படுத்துவதற்கான வழிகளையும் கண்டறிந்து செயற்படுத்த வேண்டும்--

★ அதன் மூலம் மட்டுமே, மக்கள் தாம் விரும்பும் அரசை உருவாக்குவதற்கு, அவர்கள் தமக்குள்ள சுதந்திரத்தை பயன்படுத்திக்கொள்வதற்கு இயலும்.

★இலங்கை அரசு, தனக்கு உள்ள சவால்களுக்கு விருப்பத்துடன் முகம் கொடுக்க முனையும் பட்சத்தில், பலவற்றைச் சாதிக்க முடியும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இவ்வாறாக எல்லாம் கருத்து வெளியிட்டுள்ளார், ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் அம்மையார்.

மெக்ஸிக்கோவில் இப்போது நடைபெறும், திறந்த அரசுகளின் கூட்டமைப்பின், அனைத்துலக மட்ட பூகோள மாநாட்டில் உரையாற்றுகையிலேயே அம்மையார் இவற்றைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஓரங்கட்டப்பட்ட சமூகத்தவர்களுடன் தொடர்பு கொள்வதற்கும், பேணுவதற்கும் தகவல் தொழில்நுட்ப அமைப்பு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் சமந்தா அம்மையார் தகவல் வெளியிட்டார்.

அவரது நீண்ட உரையில் காற்பங்கு, இலங்கை தொடர்பானவையே என்பது குறிப்பிடத்தக்கதாகும். இப்போது ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசு, சிவில் அமைப்புக்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது இன்றி அமையாதது--

புதிய அரசு இயங்கியல் மாற்றம் காண்பதற்கு, சிவில் அமைப்புகளின் பங்களிப்பு மிகவும் பிரதானமானது--

தனது மக்களை மேம்பாடுற வைப்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து, அவற்றை அப்பழுக்கில்லாமல் நடைமுறைப்படுத்துவதும் மிக அவசியம் என்பதையும் அவர் அழுத்தம் திருத்தமாக, அனைத்துலக மாநாட்டில் விவரித்தார்.

★அரசின் செயற்பாடுகள், அவை சார்ந்த நடவடிக்கைகள், மக்களை பல வகைகளாலும், வழி-களாலும், தரம் உயர்த்துவனவாக அமைவது அவசியம்.

★ஜனநாயக நாடுகளில் ஊடகங்கள், மக்கள் சார்பில் கருத்து வெளியிடும் உரிமை உடையனவாக விளங்குவது போன்று--

அதற்கு நிகரான பொறுப்பை சிவில் சமூகம் கொண்டுள்ளது என்பதையும் ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் அழுத்திக் கூறினார்.

மக்கள் தமக்கு விருப்பமான, மிகவும் பிடித்த அரசை ஆட்சிக் கட்டிலில் ஏற்றுவதற்கும், வடிவமைப்பதிலும் சிவில் அமைப்புக்கள் பெரும் பங்கு வகிக்கலாம் என்பதையும் ஐக்கிய நாடுகள் சபையின் அமெரிக்கத் தூதுவர் தமது உரையில் மிக விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்து இயம்பி உள்ளார்.

ஆனால், இந்த நாட்டில் அரச கட்டிலில் ஏறும் அரசியல் தலைவர்கள், மிகப் பொதுவாகவே மக்கள் நலன்களை மேம்படுத்துவதில் காட்டும் விளக்க வரையுரு (Graph) மிக மெல்லியதாகவும், தத்தமது அபிலாசைகளை அள்ளிக் கொள்வதற்கான வரையுரு தடித்ததாகவும் அமைவதே சகஜம். ஆண்டாண்டு கால வழமை!

சிவில் சமூகத்தினர் மக்களுக்கும் அரசுகளுக்கும் இடையே இணைப்புப் பாலமாக அமைவதே பொருத்தமும் ஏற்கத்தக்கதுமாகும்.

மறுவளமாகச் சொன்னால், மக்கள் சேவை என்ற போர்வைக்குள், தன்னலத்தை உட்புகுத்தாத அப்பழுக்கற்ற அரசியல் சேவகர்களே, இன்று இந்த நாட்டுக்குத் தேவைப்படுகிறார்கள்.

# துயர் துடைப்போம் வாரீர்!

கந்தா விசுவலிங்கம் கந்தவேள்
மனித உரிமை ஆர்வலர்

தமிழ் - முஸ்லிம் உறவில் மிகப் பெரும் விரிசல் விழுந்து இன்றுடன் 25 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. வரலாற்றில் மறக்கவோ மன்னிக்கவோ முடியாத வகையில் வடக்கில் இருந்து உடுத்த துணியுடன் முஸ்லிம்கள் அனைவரும் ஒரே பகலில் வெளியேற்றப்பட்டனர். ஓமந்தைக்கு அப்பால் வெளியேற வேண்டும் என்று அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். எத்தனை பாவமன்னிப்புக்களைக் கோரினாலும் தமிழ் இனம் தட்டிக்கழிக்க முடியாத கறைபடிந்த வரலாற்றுப் பக்கங்கள் அவை.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட சம்பவத்தின் எதிரொலி இன்றும் அதிர்ந்த வண்ணமே இருக்கிறது. அன்று இடம்பெயர வைக்கப்பட்ட முஸ்லிம்கள் முழுமையாக இன்னமும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பவில்லை. இது இரு இனங்களுக்கும் மத்தியில் இன்னமும் உறவுகளைப் பாதிப்படையச் செய்து கொண்டே இருக்கின்றது. பரந்த சிந்தனையின்றிய தலைமைகளின் தூரநோக்கற்ற நடவடிக்கைகள் இந்த முரண்பாட்டை இன்னமும் கூர்மைப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. இந்த நிலை மாற வேண்டும். விரைவில் மாற்றப்படவேண்டும்.

### பழைய காலம்

இன்று போல் இல்லை 30 வருடங்களுக்கு முந்திய காலம். யாழ்ப்பாணத்தில் பறங்கித் தெரு, அலுப்பாந்தி, சின்னக்கடை, சோனகதெரு, பொம்மை வெளி ஆகிய பகுதிகளில் முஸ்லீம்கள் வாழ்ந்தனர் எனினும், அவர்கள் தனிப்பட்டவர்களாக ஒருபோதும் நடத்தப்பட்டதில்லை. தமிழர்களோடு இரண்டறக் கலந்தவர்களாகவே இருந்தனர். சோனகத்தெரு, பொம்மை வெளி ஆகிய இடங்களில் அவர்களின் செறிவு அதிகமாக இருந்தபோதும் நகரப் பகுதியிலும் வேறு பல இடங்களிலும் அவர்களின் காத்திரமான குடிகள் இருந்தன.

சோனகத் தெரு, பொம்மை வெளி அகியவற்றின் முக்கு முடக்குகள் எல்லாம் நாளொன்றுக்கு ஆகக் குறைந்தது நான்கு மணிநேரமாவது என் தந்தையாரான பாரம்பரிய சித்த அறுவை மருத்துவர் கந்தா விசுவலிங்கத்துடன் சுற்றிச்சுழன்றுள்ளேன். அன்று முஸ்லிம் பெண்கள் அவசர அவசிய வேளைகளிலும், கல்வி கற்கவுமே வெளியே வருவார்கள். அதனால் எனது தந்தையாரே அவர்களது வீடுகளுக்குச் சென்று சிகிச்சை வழங்குவார். இந்தக் காரணம் ஒன்றே எனக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே ஆழமான அன்புசால் உறவு தழைத்தோங்கப் போதுமானதாக இருந்தது.

எனது கல்லூரிப் பருவத்திலே இன்று போல் அன்று சோனக தெருவில் கல்விச் சாலைகள் எதுவுமே இருந்ததாக நான் அறிந்திருக்கவில்லை. அவர்கள் இந்து அல்லது கிறிஸ்தவக் கல்லூரிகளிலேயே கற்றனர்.

மத வேறுபாடின்றி உள்வாங்கப்பட்ட இந்த மாணவர்கள் தமது மார்க்கக் கடமைகளை நிறைவேற்ற அன்றைய கல்லூரி நிர்வாகங்கள் வாய்ப்பு வழங்கின. மாணவப் பருவத்திலே விழாக்களையும் மதச் சடங்குகளையும் ஒன்றிணைய நடத்திய வேளைகளில்கூட எந்த மதத்தினரதும் கோட்பாடுகளுக்கும் குந்தகம் விளைவிக்கா வண்ணமே நடத்தினோம்.

முஸ்லிம் மாணவர்கள் பலர் வைத்தீஸ்வரா, இந்து, யாழ். மத்தி, பரியோவான், சென். பற்றிக்ஸ், வேம்படி, சுண்டுக்குளி, திருக்குடும்பக் கன்னியர் மடக் கல்லூரி ஆகியனவற்றிலேயே [illegible] பெருமை தேடித் தந்தவர்கள்.

மேலவை உறுப்பினரான ஏ.எம்.ஏ. அஸீஸ் ஆரவாரமின்றி தமிழ் தழைத்தோங்க ஆற்றிய சில பணிகளை நான் நன்கு அறிவேன்.

அன்றைய நீதித்துறையிலே பல பாராட்டைப் பெற்றவரான அப்துல் காதரும், யாழ். மாநகர சபையின் முதல்வராக விளங்கி ஏற்றிப் போற்றப்பட்டவர்களுள் ஒருவருமான சுல்தானும் (இவரது முதல் எழுத்துக்கள் நினைவில் இல்லை) துணை முதல்வரரான எம்.ஈ.பஸீரும் அரசியலில் வியத்தகு சேவை புரிந்தவர்கள்.

வாழ்விடங்களற்ற ஏழை முஸ்லிம்களின் கண்ணீர் துடைக்க அயராது உழைத்தவர் என மனங் கொள்ளத் தக்கவரான மக்புல் தனது கனவுகளுடனேயே அகாலச் சாவடைந்தார்.

போர்க்காலச் சுழலிலே யாழ். மத்திய மற்றும் வேம்படி மகளிர் கல்லூரிகளின் மாணவர்களும் உயிர் அச்சுறுத்தலுக்கு முகம் கொடுத்த காரணத்தால், நகரின் புற நிலைப் பரப்பிலே உள்ள கல்லூரியில் மாலை நேரத்தில் கல்வி கற்கின்ற முறைமை ஒன்றினை கல்வித் துறையினர் முன்னெடுத்தனர். அது குறித்த பாடசாலைகளின் எதிர்காலத்தைப் பாதிக்கும் என வாதாடிய தரப்பினருக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கியவர்களில் ஒருவர் அன்றைய கல்வி அதிகாரி மன்சூர்.

யாழ். நகரின் அன்றைய சில வியாபார நிலையங்களின் காணிகளின் உரிமையாளர்கள் தமிழர்கள். (நான் அறிந்த வரை இவற்றின் உரிமையாளர்கள் சிவன் கோவில் செட்டியார் அல்லது புத்தூர் மழவராயரின் வாரிசுகள்). ஆனால் இவற்றில் பெரும்பாலான கடைகளை நடத்தியவர்கள் முஸ்லிம்கள்தான். அந்தக் கடைகளில் அவர்கள் தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கினர்.

வியாபாரத்தின் நெளிவு சுழிவுகளை அறிந்து இலாபம் ஈட்டுவதில் முஸ்லிம்கள் வல்லவர்கள் என்பது எனது நம்பிக்கை. அவ்வாறானவர்களில் ஒருவர் எனது கல்லூரியின் பழைய மாணவர்களில் ஒருவரான எஸ்.ஏ.சி. முபீன். உணவுப் பொருள்களுக்கு அதிகத் தட்டுப்பாடு நிலவியவேளை யாழ். மருத்துவமனை வீதியிலே அமைந்திருந்த அவரது வீட்டிலே உணவுப் பொருள்களை மக்கள் முண்டியடித்து வாங்கியமையால் அயலவர்கள் தமக்கு ஏதாவது மிஞ்சுமோ என்று அஞ்சினர். அவரிடம் "என்ன எங்களை மறந்து விட்டாயோ?" என உச்சத் தொனியிலே உரக்கக் கத்தினேன். வழக்கமான சிரிப்புடனும் அதே பார்வையுடனும் தலையை அசைத்தார். நிலமையைப் புரிந்து கொண்டேன். மக்கள் கலைந்த பின் தனது கொள் விலைக்கு விற்பதாகக் கூறி விற்பனை செய்தார். வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்தவர்களுக்கு இலவசமாக ஒரு தொகையை வழங்கினார். இப்படிப் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

### செய்ய வேண்டியவைகள்

இனங்களுக்கு இடையில் போர் சந்தேகங்களை விதைத்தது. முரண்பாடுகளைப் பயிர் செய்தது. கடைசியில் பிளவுகளை அறுவடை செய்தது. 1990இல் தமிழர்களால் வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டபோதும், தமது பெறுமதிமிக்க நகைகள் சொத்துக்களைப் பாதுகாக்க அவர்கள் நம்பியவர்கள் பலரும் தமிழர்களாகவே இருந்தார்கள் என்பது இருஇனங்களுக்கும் இடையில் இருந்த ஆழமான உறவுக்குச் சாட்சி.

அன்று வெளியேறப்பட்ட முஸ்லிம்களில் பலர் புத்தளத்தில் இன்றும் ஆகக் குறைந்த வசதிகளுடனேயே வாழ்கின்றனர். யாழ்ப்பாணமே தெரியாத -புத்தளத்தையே தனது [illegible] பூமியாக எண்ணும் -தலைமுறைகள் உருவாகி விட்டன. 25 வருடகாலங்களாக இந்த மக்களின் வாழ்க்கை தமிழ் மக்கள் அனுபவித்த கொடுமைகளுக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல. வாழ்வாதாரத்துக்கும், பல்கலைக்கழக அனுமதிக்கும் அவர்கள் பட்ட துன்பம் கொஞ்சநஞ்சமல்ல. செய்வதறியாதவர்களாகவும் கையறு நிலையிலும் இன்னமும் வாழ்கின்றனர்.

அவர்கள் எல்லோரும் சொந்த இடங்களுக்கு நிச்சயம் மீளவேண்டும். அவர்களின் வாழ்வு வளம்பெறவேண்டும். அவர்களின் இயல்பு வாழ்க்கையைச் சீர்குலைத்ததில் எமக்கும் பெரும் பங்குண்டு என்பதை உணர்ந்து தமிழ் அரசியல்வாதிகள் அந்த மக்களுக்கு நல்ல தீர்வு ஒன்றைக் காட்ட வேண்டும். வெற்று அரசியல் ஆரவாரங்களை ஒதுக்கி வைத்துவிட்டு வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள், மீளத் திரும்ப விரும்புவார்கள் எனில் அவர்களுக்கான எல்லா வசதிகளையும் வழங்குவதற்கான கொள்கை முடிவை வடக்கு மாகாண சபை எடுக்கவேண்டும். எத்தனையோ நூறு தீர்மானங்களை நிறைவேற்றிய வடக்கு மாகாண சபை முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்கான கொள்கைப் பிரகடனமாகவும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்த மக்களுக்குத் தாம் எல்லா வகையிலும் ஆதரவாக இருக்கிறோம் என்பதைப் பறைசாற்றவேண்டும்.

தமது எதிர்காலம் குறித்த நிச்சயமின்மை காரணமாக இன்னமும் வடக்குக்கு வெளியேயே வாழ்ந்து வரும் முஸ்லிம் மக்களின் வாழ்க்கை அங்கு சின்னாபின்னமாகிச் சிதறுண்டு கிடக்கின்றது. அவர்களை அழைத்து வந்து மீளக்குடியேற்றி புது வாழ்வை அளிக்கவேண்டும்.

அதற்கு முன்பாகத் தாமாக விரும்பி ஏற்கனவே மீளக்குடியமர்ந்து இருப்பவர்களுக்குப் போதிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். யாழ். நகரத்துக்குள் முஸ்லிம்களின் மீள்குடியமர்வுக்கு தமிழ் அதிகாரிகள் ஆதரவாக இல்லை என்கிற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே உள்ளது. ஆயிரம் காரணங்கள் இருந்த போதும், அந்த மக்களை மனிதாபிமானத்துடன் அணுகி அவர்களை அரவணைத்துக் கொள்ளவேண்டியது எமது கடமை என்பதை உணர்ந்து அதிகாரிகள் செயற்படவேண்டும்.

எமது கல்விக்கும் பொருளாதாரத்துக்கும் சமூக ஏற்றத்துக்கும் மொழியின் வளர்ச்சிக்கும் தம்மாலான பங்களிப்பை வழங்கிய முஸ்லிம்கள் யாழ். மண்ணின் தொன்மையான குடிகள். புதியவர்கள் அல்லர். இந்தச் செய்தி இளைய தமிழ்த் தலைமுறையினருக்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்லப்படவேண்டும். அவர்கள் தாங்கள் இழந்துபோனவற்றை மீளப் பெற முயற்சிக்கிறார்களே தவிர, ஆக்கிரமிக்க முயற்சிப்பவர்கள் அல்லர் என்கிற நிலைமை எடுத்துரைக்கப்படவேண்டும்.

முஸ்லிம்களின் மீளக்குடியமர்வுக்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் எவையும் பொருத்தமானவையாக இருக்கவில்லை. எனவே முஸ்லிம்கள் மீளக்குடியமர்வதில் உள்ள சிக்கல்களை இனங்கண்டு அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான ஒரு குழுவை வடக்கு மாகாண சபை உடனடியாக நியமிக்கவேண்டும். பாதிப்புக்குள்ளான மக்களுடன் கலந்து பேசியே அந்த முடிவு எடுக்கப்படவேண்டும்.

மீளக்குடியமர்பவர்களின் நலன்களைப் பேணிப் பாதுகாக்க அதி அத்தியாவசியமான உட்கட்டமைப்பு, வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் போன்ற வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். வாக்கு வங்கியைப்பற்றிச்சிந்திக்காத அரசியல்தலைமைகளாலும் அர்ப்பணிப்புடனான அரச அலுவலர்களாலுமே இந்தக் கருமங்களை ஆற்ற முடியும். காரியங்களைச் சாதித்து எம்மை நிரூபிப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணபிதா எழில் ராஜேந்திரன்
தமிழில்: ரஜீபன்

# பலவந்தமாகக் காணாமலாக்குதல் இனப்படுகொலைக்கான கூறே!

இலங்கையின் தற்போதைய அரசு முன்னெடுத்துள்ள பொறுப்புக் கூறுவதற்கான செயற்பாடுகள், காணாமற்போகச் செய்யப்பட்டதை மனித குலத்துக்கு எதிரான குற்றமாகவும்- இனப்படுகொலை இடம்பெற்றது என கருதவதற்கான கூறுகளில் இதுவுமொன்று எனவும் கருத வேண்டும் என வணபிதா எழில் ராஜேந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் இதனைக் குறிப்பிட்டுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நான் இந்த உரையைத் தமிழ் அன்னையொருவரின் - சந்திரா கதையுடன் ஆரம்பிக்க விரும்புகின்றேன். செப்ரெம்பர் 2001 இரவு 11மணிக்கு சற்று முன்னதாக அவரது வாழ்க்கை முற்றிலும் தலைகீழாக மாறியது. அவரது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த ஆயுதமேந்திய நபர்கள், அங்கு உறங்கிக் கொண்டிருந்த 24 வயது மகன் ஜஸ்மினை வெள்ளை வானில் கடத்திக் கொண்டு சென்றனர். அவரது வீட்டுக்கு வருவதற்கு ஒரேயொரு வீதி மாத்திரமேயுள்ளது. படையினருக்கு தெரியாமல் எவரும் அவரது மகனை கொண்டு செல்வதற்கான வாய்ப்பில்லை.

கடந்த ஏழு வருடங்களாக சந்திராவின் வாழ்வின் பெரும்பகுதி மகனைத் தேடுவதிலேயே கழிந்துவிட்டது.

இத்தனை வருடங்களுக்குப் பின்னரும் அவர் மகனைத் தேடுவது அர்த்தமற்ற விடயம்போலத் தோன்றலாம். ஆனால் மகன் உயிருடன் இருக்கின்றார் என அந்தத் தாய் கருதுவதற்கு வலுவான காரணங்கள் உள்ளன. மூன்று வருடங்களுக்கு முன்னர் தனது மகன் முன் பல் உடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த வீடியோவை அவர் பார்த்தார். இந்த வருட ஆரம்பத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து வெளியான புகைப்படமொன்றில் பலருடன் தனது மகனும் உள்ளதை அவர் பார்த்தார். எனினும் இன்னமும் மகனை அவரால் கண்டுபிடிக்கமுடியவில்லை.

அவர் முடக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றார், தனது மகன் இறந்திருந்தால் இதனைவிட அதனை ஏற்றுக்கொள்வது இலகுவானதாக இருந்திருக்கும் என்கிறார்.

சந்திரா தனது மகனைத் தேடி ஒவ்வொரு இடமாக அலைந்து கொண்டிருக்கின்றார். அவர் முற்று முழுதாகப் படையினரதும், பொலிஸாரினதும் தயவிலேயே உள்ளார். மன்னாரில் உள்ள அனைத்துப் படை முகாம்களுக்கும், பொலிஸ்நிலையங்களுக்கும் சென்றுள்ளார்.

தமிழ்ப் பெண் என்ற வகையில் இந்த நாட்டின் படையினர் அவரை மிகவும் அவமதித்துள்ளனர். அவரது மகனைக் கண்டுபிடிக்க உதவுவதாகவும் அதற்காக சந்திரா தன்னுடன் உறவுவைத்துக்கொள்ளவேண்டும் எனவும் சிப்பாய் ஒருவன் கேட்டுள்ளான். இது ஒரு தனியான சம்பவமல்ல, காணாமற்போன தங்கள் கணவன்மார்களைத் தேடி இராணுவ முகாம்களுக்குச் செல்லும் இளம் பெண்கள் பாலியல் வன்முறையை எதிர்கொள்கின்றனர். இது அவர்களது துயரத்தை மேலும் அதிகரிக்கின்றது.

காணாமற்போனவர்களுக்கு அரசுகளே பொறுப்பு என்பதை ஏற்றுக்கொண்ட சில அரச அதிகாரிகளில் தற்போதைய வெளிவிவகார அமைச்சரும் ஒருவர் என நான் அறிந்திருக்கின்றேன். 2007இல் அப்போதைய ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் இலங்கையில் ஐந்து மணித்தியாலத்துக்கு ஒரு முறை நபர் ஒருவர் கடத்தப்படுகின்றார், இதனை யார் செய்தாலும், அரசு என்ற வகையில் நாங்களே அதற்கு பொறுப்பு எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

யஸ்மின் சூக்கா தலைமையிலான சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தனது அறிக்கையில், தற்போதைய அரசின் கீழும் பலவந்தமாக காணமற் போகச்செய்யப்படுதல் என்ற விடயம் தொடர்வதை பல ஆதாரங்களுடன் வெளிப்படுத்தியுள்ளது. எதிர்க்கட்சியில் காணப்பட்ட வேளை நீங்கள் குறிப்பிட்ட விடயங்களை தற்போது அரசாங்கத்தில் உள்ளவேளை நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

உங்கள் அரசாங்கத்தின் கீழ் நிலைமை வேறு மாதிரியானதாக காணப்படும் என நம்ப வைக்கப்பட்ட பலர் உள்ளனர்- சந்திரா போன்று. அனைத்து நம்பிக்கைகளும் மீண்டும் வீணாவதற்கு முன்னர் நியாயமாகச் செயற்படுமாறு நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.



### கிளர்ச்சிகளுக்கு எதிரான ஆயுதம் காணமற்போகச்செய்தல்

பலவந்தமாக காணமற்போகச் செய்யப்படுதல் என்பது எதிராளிகளை அழிப்பதற்கும், பொதுமக்களை அச்சுறுத்துவதற்குமான வழிமுறை என இனம்காணப்பட்டுள்ளது. காணாமற்போகச் செய்யப்படுதல் என்றவிடயம்பலஆயிரக்கணக்கான தனிநபர்களையும், அவர்களது குடும்பத்தவர்களையும் முழுச் சமூகத்தையும் பாதித்துள்ளது. அரசின் இந்தத் தந்திரோபாயத்தின் கொடுமையைத்தமிழர்களும், சிங்களவர்களும் அனுபவித்துள்ளனர். இது சந்திரா போன்றவர்களின் குடும்பங்களையும் அவர்களது சமூகத்தையும் முற்றாகப் பாதித்துள்ளது.

பல வந்தமாகக் காணமற் போகச் செய்யப்படுதல் தொடர்பாக ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கை இவ்வாறு தெரிவிக்கிறது- அரசை விமர்சிப்பவர்கள், எதிர்க்கட்சியினர், ஆயுதமோதலில் ஈடுபட்டவர்கள் எனக் கருதுபவர்களை இலக்கு வைப்பதற்காக இலங்கையின் தொடர்ச்சியான அரசுகள் பலவந்தமாகக் காணமற்போகச் செய்யப்படுதலைப் பயன்படுத்தியுள்ளன. குறிப்பாகத் தமிழர்களுக்கு எதிராக இது பயன்படுத்தப்பட்டுள்ளது. சுயநிர்ணய உரிமையைக் கோருபவர்களையும், போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், தமிழர்கள் மீதான இனப்படுகொலை குறித்து கேள்வி எழுப்புபவர்களையும் ஒடுக்குவதற்காக இது பயன்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர்களின் தலைமைத்துவத்தின் பல மட்டங்களைச் சேர்ந்தவர்களை அழிப்பதற்கு இலங்கையின் அரசுகள் பயன்படுத்திய ஆயுதம் இதுவாகும். இதன்மூலம் அரசியல் நேர்மை மற்றும் நீதிக்கான அவர்களது உறுதிப்பாட்டை பலவீனப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலக அறிக்கை இதுபோன்ற அனேக சம்பவங்கள் இலங்கையின் வடமாகாணத்திலேயே இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கின்றது. மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய இராணுவத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்ட பகுதிகள் அனைத்திலும் இப்படி நடந்திருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதி கிழக்கு மாகாணம். கொழும்பிலும் பலர் காணாமற்போயுள்ளனர். எனினும் இவர்கள் அனேகமாக இலங்கையின் வடக்குக் கிழக்கைச் சேர்ந்தவர்கள்.

### சம்பவங்கள் நடக்கும் விதங்கள்

காணமற்போகச்செய்யப்படுதல் என்பது கடத்தல், அதன் பின்னர் சித்திரவதைசெய்யப்படுதல், கொலை செய்யப்படுதல் என்றவாறாக இடம்பெற்றிருக்கிறது. இவற்றுடன் அரச அதிகாரிகளுக்குத் தொடர்புள்ளதற்கான ஆதாரங்கள் சிறிதளவும் வெளிவராத வகையில் திட்டமிடப்படுகின்றது. காணமற்போகச்செய்தலை முன்னெடுக்கும் இராணுவத்தின் அல்லது பொலிஸாரின் பிரிவினர், தங்களை எப்போதும் இனம்காட்டுவதில்லை. மேலும் தாங்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபடவில்லை என எப்போதும் மறுக்கின்றனர். குற்றங்களை இழைத்தது யார் என்பது தெரிந்திருந்தாலும் சாட்சிகள் அச்சம் காரணமாக உண்மையைத் தெரிவிக்க முன் வருவதில்லை.

இந்த வகை ஆள்கடத்தல்களில் தொடர்ச்சியான- ஒரே வகையிலான -வழிமுறைகள் பயன்படுத்தப்படுவதாக ஐக்கியநாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலக அறிக்கை தெரிவிக்கின்றது.

அனேக சந்தர்ப்பங்களில் கடத்தல்கள் இலக்கத் தகடற்ற வெள்ளை வான்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபடுவர்கள் அனேகமாக சிங்களமொழியில் உரையாடுகின்றனர் அல்லது அரைகுறைசிங்களம், தமிழ் போன்றவற்றில் உரையாடுகின்றனர். சீருடை அணிந்திருப்பதில்லை. முகத்தை மூடியுள்ளனர். சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் அவர்கள் தங்களைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அல்லது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் என அடையாளம் காண்பிக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலக அறிக்கை மேலும் இவ்வாறு குறிப்பிடுகின்றது- இத்தகைய குற்றச்செயலில் ஈடுபடுபவர்கள் திட்டமிட்ட முறையில் பிடியாணையை வழங்குவதில்லை. அல்லது பாதிக்கப்பட்டவரை எங்கு கொண்டுசெல்கின்றோம் என்பதையும் குறிப்பிடுவதில்லை. பின்னர் படையினரும், பொலிஸாரும் தாங்கள் கைதுசெய்ததை மறுக்கின்றனர். சந்திரா போன்றவர்களுக்கு இது தெரிந்த விடயம். இலங்கையில் காணப்படும் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் கலாசாரம் இத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவான பொறிமுறையாக மாறியுள்ளது. அவர்கள் ஒருபோதும் கைதுசெய்யப்படாததை அது உறுதிசெய்துள்ளது.

காணாமற்போனவர்கள். அதற்கு முன்னர் இனந்தெரியாதவர்கள் சென்று விசாரித்துள்ளனர். அல்லது இவர்கள் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். அனாமதேயத் தொலைபேசி அழைப்புகள் இவர்களுக்கு வந்துள்ளன. விசாரிக்கப்பட்டுள்ளனர் அல்லது துன்புறுத்தப்பட்டுள்ளனர். அல்லது தேடுதல் நடவடிக்கையின் பின்னர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். குடாநாடு 1996இல் முழுமையாகக் கைப்பற்றப்பட்ட பின்னர் ஈபிடிபியும், 2004 இற்குப் பின்னர் கருணாகுழுவும், அரசுடன் இணைந்து பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்படுதலில் ஈடுபட்டுள்ளன.

பலவந்தமாகக் காணமற்போகச் செய்யப்படுதல் என்பது அச்சநிலையை ஏற்படுத்துவதுடன், சமூகங்கள் உடல், உளவியல் ரீதியாக ஒருவித அடிபணியும் நிலையில் வாழ்வதை உறுதிசெய்கின்றது. இது இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்களுக்குச் சாதகமானதாகக் காணப்படுகின்றது. அதேவேளை மனித சகவாழ்வு என்பதன் சட்டங்களை மீறி முழுமையாகத் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்பட்ட நிலையில் இது இடம்பெறுகின்றது.

அனேக சந்தர்ப்பங்களில் காணாமற்போனவர்களின் உடல்கள் கிடைப்பதில்லை, குற்றவாளிகளால் அவை அழிக்கப்படுகின்றன. இது பாதிக்கப்பட்டவர் உயிருடன் இருக்கின்றாரா இல்லையா என்ற நிச்சயமற்ற நிலை தொடர்வதற்கு வழிவகுக்கின்றது.

இலங்கையின் ஆயுத மோதல் முடிவுக்கு வந்த பின்னர் பெருமளவு விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் தங்கள் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு 2009 மே 18ஆம் திகதி வட்டுவாகல் பாலத்துக்கு அருகில் சரணடைந்தனர். இவ்வாறு சரணடைந்தவர்களை வழிநடத்திய வணபிதா பிரான்சிசும் இவர்களில் காணப்பட்டார். ஓமந்தை மற்றும் மெனிக்பார்மில் பெருமளவு விடுதலைப் புலிகள் சரணடைந்தனர். தாய்மார்கள் பெற்றோர், மனைவிமார்கள் தங்கள் குடும்பத்தவர்களை இராணுவத்திடம் கையளித்த சம்பவங்களும் உள்ளன-ஆனால் அதன் பின்னர் அவர்கள் குறித்து எந்தவிதத் தகவல்களும் இல்லை.

பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுதல் என்பது மனித குலத்துக்கு எதிரான குற்றம் - இனப்படுகொலை இடம்பெற்றது என கருதுவதற்கான கூறுகளில் இதுவுமொன்று.

### மனித குலத்துக்கு எதிரான நடவடிக்கைகள்

சர்வதே குற்றவியல் நீதிமன்றத்தின் சட்டத் தகுதி நிலையின்படி பொதுமக்கள் குழுவினருக்கு எதிராகத் திட்டமிட்ட, பரந்துபட்ட அடிப்படையில், நன்கு தெரிந்திருக்கக் கூடிய வகையில் கீழ்வரும் ஏதாவது ஒரு நடவடிக்கையில் ஈடுபட்டால் அது மனித குலத்துக்கு எதிரான குற்றமாகவே கருதப்படும்.

1. குற்றவாளி ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களைக் கைதுசெய்து தடுத்து வைத்திருக்கும் பட்சத்தில்.
2. கைது செய்துள்ளதை ஏற்றுக் கொள்ள மறுக்கும் பட்சத்தில்.
3. தன்னுடைய செயல் கைது செய்யப்பட்டுள்ளவரின் விடுதலையைப் பாதிக்கும் எனத் தெரிந்திருந்தும் அத்தகைய செயலில் ஈடுபடும்போது.
4. அரசின் அனுமதியுடன் இவ்வாறான செயல் இடம்பெறும்போது.
5. அரசினால் அல்லது அதன் அனுமதியுடன் விடுதலை மறுப்பு இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போது.
6. நீண்ட காலத்துக்கு குறிப்பிட்ட நபரைச்சட்டத்தின் பாதுகாப்பிலிருந்து அகற்றுவது குற்றச்செயலில் ஈடுபட்டவரின் நோக்கமாக காணப்படும்போது.
7. குறிப்பிட்ட பொதுமக்கள் குழுவினருக்கு எதிராகத் திட்டமிடப்பட்ட பரந்துபட்ட வகையில் இது இடம் பெறும்போது.
8. பொதுமக்கள் பிரிவொன்றுக்கு எதிராகத் திட்டமிட்ட தாக்குதலை மேற்கொள்வதற்காக இது இடம்பெறுகின்றது எனக் குற்றச்செயலில் ஈடுபட்டவருக்குத் தெரிந்திருக்கும்போது.

பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்படுதல் என்பது மனித குலத்துக்கு எதிரான குற்றமே என அமெரிக்க இடை நீதிமன்றம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யப்படுதல் என்ற சிறிய சம்பவம் இடம்பெற்றிருந்தாலும், அது பயங்கரவாத அல்லது விசாரணைகளை நோக்கமாக கொண்டு அரச அமைப்பினால் முன்னெடுக்கப்பட்டிருந்தால் அது மனித குலத்துக்கு எதிரான குற்றமே என அந்த நீதிமன்றம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாகப் பரணகம ஆணைக்குழு தெரிவிப்பது போன்று அவற்றைத் தனித்தனிச் சம்பவங்களாகக் காண்பிக்க முனைவது மிகவும் தவறானதாகும். அவற்றை மனித குலத்துக்கு எதிரான குற்றச்செயலாகவே கருதவேண்டும்.

லண்டன் பல்கலைக்கழக கல்லூரியின் பேராசிரியர் பிலிப் சான்டர்ஸன். பொஸ்னிய இனப்படுகொலை குறித்த விசாரணைகளில் வாதிடுகையில், நீண்டகாலமாகக் காணாமற்போகச் செய்யப்பட்டதால் குடும்பத்தினருக்கு உண்டான மனஅழுத்தங்களையும் வேதனைகளையும் இனப்படுகொலைக்கான காரணியாகக் கருதலாம் என்றார்.

இலங்கையின் தற்போதைய அரசு முன்னெடுத்துள்ள பொறுப்புக் கூறுவதற்கான செயற்பாடுகள், காணாமற்போகச்செய்யப்பட்டதை மனித குலத்துக்கு எதிரான குற்றமாகவும்- இனப்படுகொலை இடம்பெற்றது எனக் கருதவதற்கான கூறுகளில் ஒன்றாகவும் கருதவேண்டும்.

பலவந்தமாகக் காணமற்போகச் செய்தல் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட இலங்கை ஆணைக் குழுக்கள் இந்தச் சம்பவங்களுக்குச் சில தனிநபர்களே காரணம் எனத் தெரிவிக்க முனைந்துள்ளன. எனினும், இலங்கை அரசால் தமிழ்ப் பொதுமக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான குற்றங்கள் திட்டமிட்ட முறையில் முன்னெடுக்கப்பட்டவை, பரந்துபட்டவை, சர்வதேச மனித உரிமை மற்றும் குற்றவியல் சட்டங்களின் கீழ் நீதி வழங்கப்படவேண்டியவை என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றோம்.

இதுவரை காணமற்போகச்செய்தல் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அனைத்தும் திறன் இல்லாததால் தோல்வியடையவில்லை. மாறாக தொடர்ச்சியாக வந்த அரசுகளிடம் அரசியல் உறுதிப்பாடு காணப்படாததாலேயே அவை தோல்விகண்டன.

சந்திரா போன்ற அன்னையர்கள் பலர் அனைத்து ஆணைக்குழுக்கள் முன்னிலையிலும் சாட்சியளித்துள்ளனர். ஆனால் அவர்களுடைய கேள்விகளுக்கு முடிவுகிட்டவில்லை.


இதன் காரணமாகவே இந்தக் குற்றங்களை சர்வதேச குற்றவியல் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டவர்கள் நம்பகத்தன்மைமிக்கது எனக் கருதும் ஒரு பொறிமுறையின் கீழ் விசாரணை செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொப்பையைக் குறைக்கும் அன்னாசிப்பழம்

*தொப்பையைக் குறைக்கும் அன்னாசிப்பழம் என்ற தலைப்பில் அன்னாசிப்பழம் குறித்து நேற்றைய உதயனில் பார்த்தோம். அது குறித்து இன்றைய பகுதியில் மேற்கொண்டும் பார்ப்போம்.*

இந்தப்பழத்தில் உள்ள இதர பிற விற்றமின்கள் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கின்றன. இது சோர்வின்றி செயற்பட ஏதுவாகிறது. உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள அன்னாசிப் பழத்தை, நிறையச் சாப்பிடலாம் என்கின்றனர் மருத்துவர்கள். அன்னாசிப் பழத்தில் விற்றமின் 'பி' உயிர்ச்சத்து அதிக அளவில் உள்ளது. அது உடலில் குருதியை விருத்தி செய்வதாகவும், உடலுக்கு பலத்தைத் தருவதாகவும் அமைகிறது. தேகத்தில் போதுமான குருதியில்லாமல் இருப்பவர்களுக்கு, அன்னாசிப்பழம் ஒரு சிறந்த மருந்தாகும். நன்றாகப் பழுத்த அன்னாசிப் பழத்தைச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வெயிலில் தூசிபடாமல் உலர்த்தி வற்றல்களாக செய்து வைத்துக் கொண்டு, தினமும் தூங்கச் செல்வதற்கு அரை மணி நேரத்துக்கு முன்னதாக ஒரு குவளை பாலில் 5 அன்னாசி வற்றல்களை ஊற வைத்து, பின்தூங்கச் செல்லும் போது, ஊறியவற்றல்களை 48 நாள்கள் சாப்பிட்டு வரவேண்டும். இதனால் பித்தம் சம்பந்தமான அனைத்துக் கோளாறுகளும் நீங்கும். அன்னாசிப் பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டுவர பெண்களுக்கு ஏற்படும் வெள்ளைபடுதல் நோய் குணமாகும். இதை, ஜூஸ் ஆகவும் குடித்து வர, ஆண்களின் முக அழகு பொலிவு பெருகும். அன்னாசி பித்தக் கோளாறுகளை விரைந்து குணமாக்குகிறது. அன்னாசியில் கொழுப்பு குறைவு, நார்ச்சத்து அதிகம், அன்னாசியில் புரதம் தாராளமாக இருப்பதால் ஜீரணக் கோளாறு, உடலில் வீக்கம் போன்றவை ஏற்படாது. இளம் பெண்கள் உட்பட அனைவரின் தொப்பையைக் கரைக்கும் சக்தி, அன்னாசிக்கு உண்டு.



அன்னாசிப்பழத்தைச் சிறு துண்டுகளாக நறுக்கி, நான்கு தேக்கரண்டி ஓமத்தைப் பொடி செய்து அதில் போட்டு நன்றாகக் கிளறி ஒரு குவளை தண்ணீர் ஊற்றிக் கொதிக்க விடவும். இரவில் அதை அப்படியே வைத்திருந்து, மறுநாள் காலையில் அதைப் பிழிந்து சாறு எடுத்து வெறும் வயிற்றில் சாப்பிடவும். இந்த முறைப்படி 10 நாள்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உங்கள் தொப்பை கரைய ஆரம்பிக்கும்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 60 | 50 | 60 | 60 | 40 | 60 | 30 |
| கத்தரி | 100 | 80 | 80 | 100 | 80 | 80 | 80 | 60 |
| கரட் | 70 | 80 | 60–120 | 80 | 100–180 | 100 | 100 | 180 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 40 | 50 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 90 | 120 | 100 | 100 | 160 | 120 | 100 | 140 |
| பாகல் | 160 | 160 | 250 | 180 | 160–180 | 200 | 110 | 170 |
| கருணைக்கிழங்கு | 70 | 70 | 80 | 80 | 60 | 60 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 140 | 180 | 120 | 130 |
| சி.வெங்காயம் | 100 | 150 | 120 | 140 | 130 | 200 | 100 | 130 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 50 | 80 | 50 | 40 |
| தக்காளி | 100 | 120 | 160 | 120 | 100–120 | 120 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 50 | 70 | 80 | 60 | 40 |
| கீரை | 30 | 50 | 40 | 10 | 30 | 40 | 30 | 35 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 30 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 400 | 280 | 340 | 350 | 250–270 | 300 | 250 | 350 |
| புடோல் | 60 | 80 | 100 | 60 | 80 | 120 | 60 | 70 |
| கோவா | 100 | 100 | 80 | 80 | 90–100 | 140 | 100 | 60 |
| வெண்டி | 120 | 80 | 100 | 100 | 80–100 | 80 | 50 | 40 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 140 | 160 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 40 | 120 | 100 | 80 | 80–100 | 120 | 80 | 70 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 60 | 50–60 | 60 | 35–40 | 35 |
| உருளைக்கிழங்கு | 120 | 100 | 110 | 120 | 140 | 120 | 100 | 120 |
| தேசிக்காய் | 400 | 320 | 400 | 350 | 160 | 600 | 250 | 350 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 8 |
| கறிமிளகாய் | 140 | 160 | 120 | 160 | 160 | 200 | 120 | 170 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | – |
| முருங்கைக்காய் | 150 | 120 | 120 | 80 | 140 | 200 | 120 | 70 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 600 | 600 | 800 | 700 | 400 |
| நண்டு | 300 | 600 | 200 | 300 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 600 | – |
| பாரை | 400 | 450 | 350 | 500 | 400 | 250 |
| சுறா | 450 | 500 | 350 | 650 | 500 | 300 |
| சீலா | 250 | 400 | 300 | 400 | 300 | – |
| விளை | 450 | 400 | 260 | 350 | 300 | 250 |
| முரல் | 200 | 300 | 250 | 300 | 250 | – |
| கும்பிளா | 200 | 300 | 200 | 350 | 300 | 150 |
| கிழாக்கன் | 350 | 800 | – | 500 | – | – |
| ஒரா | 300 | 300 | 220 | 500 | – | – |
| திரளி | 150 | 300 | 150 | 300 | 200 | – |
| நகரை | 150 | 300 | 100 | 300 | – | 150 |
| சூடை | 150 | 100 | 50 | 120 | 100 | – |
| ஒட்டி | 200 | 150 | 180 | 300 | 250 | – |
| திருக்கை | 150 | 300 | 150 | 300 | – | – |
| பாலை | 300 | 200 | – | 400 | – | – |
| வாழை | 100 | 100 | 150 | 300 | 200 | – |
| கொய் | 100 | 100 | 40 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 130 | 250 | 200 | 100 |

## நாளை

ஐப்பசி-15
ஞாயிற்றுக்கிழமை
01.11.2015
திதி:
பஞ்சமி மு.ப. 10.35வரை
நட்சத்திரம் :
திருவாதிரை மு.இ. 9.21வரை
சுபநேரம்:
9.03 – 10.33 வரை
இராகு காலம்:
4.33 – 6.03 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### பிறருக்குச் சேவை செய்யுங்கள்

ஒரு குறிக்கோளை எடுத்துக் கொள்ளுங்கள். அதைப் பற்றியே கனவு காணுங்கள். அதனை நோக்கியே வாழ்க்கை நடத்துங்கள். அந்தக் கருத்தை உயிர் மூச்சாகக் கொண்டு செயற்படுங்கள். வெற்றி பெறுவீர்கள். வீர இளைஞர்களே! முன்னேறிச் செல்லுங்கள். கட்டுண்டு கிடக்கச் செய்யும் தடைகளை வெட்டி வீழ்த்தவும், எளியவர்களின் துயரச் சுமையைக் குறைக்கவும், இருண்ட உள்ளங்களில் ஒளியேற்றவும் முன்னேறிச் செல்லுங்கள்.
நம்புங்கள். இறைவனின் கட்டளை வந்துவிட்டது. பாமரமக்களும், எளியவர்களும் நலம் பெற வேண்டும் என உழைத்திடுங்கள். இறைவனின் கையில் நீங்கள் ஒருகருவி என்ற உணர்வுடன் பிறருக்கு சேவை செய்யுங்கள்.

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | | 5 | | | 6 | |
| 5 | | 1 | | 8 | | 4 | | |
| | | 3 | 1 | | | | | |
| 1 | 5 | | | 6 | | | | |
| 8 | | 7 | | | | | 4 | |
| 4 | | | | | 5 | 7 | | |
| | 1 | | | | | | 2 | |
| | 2 | | | | | | 8 | |
| 7 | 4 | | | | 3 | 5 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 3 | 6 | 7 | 8 | 1 | 9 | 4 |
| 6 | 4 | 7 | 1 | 2 | 9 | 5 | 8 | 3 |
| 9 | 8 | 1 | 3 | 4 | 5 | 2 | 6 | 7 |
| 2 | 3 | 5 | 9 | 1 | 6 | 7 | 4 | 8 |
| 8 | 9 | 6 | 7 | 5 | 4 | 3 | 2 | 1 |
| 1 | 7 | 4 | 2 | 8 | 3 | 6 | 5 | 9 |
| 3 | 5 | 2 | 4 | 9 | 1 | 8 | 7 | 6 |
| 4 | 1 | 8 | 5 | 6 | 7 | 9 | 3 | 2 |
| 7 | 6 | 9 | 8 | 3 | 2 | 4 | 1 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடி சோதிடம்



*(பரிவர்த்தனை காரணமாக சூரியன் தனது வீட்டுக்குச் செல்லும்வேளை சாதகருக்கு ஏற்படத்தக்க பலன் குறித்து நேற்றைய உதயனில் பார்த்தோம். மீதி இன்றும் தொடர்கிறது.)*


அதனால் எந்தப் பாதிப்பும் அடையவில்லை. ஆனால் கன்னியில் உள்ள ராகு சிங்கத்தை நோக்கி நகர்கிறார். அதன் காரணமாக சகோதரனுக்கும் தந்தைக்கும் சாவு அவஸ்தை ஏற்படுத்தும். காரணம், ராகு இருவருக்கும் பகைவன் என்பதே. ராசிக்கட்டத்தில், கிழக்குத் திசையான சிம்மத்தில், செவ்வாய் மற்றொரு கிழக்கு திசையான மேடத்தில் சூரியன், ராகு, சுக்கிரன் அமர்ந்துள்ளன. இதில் ராகுவால் சூரியனும், செவ்வாயும் பலம் இழக்கிறார்கள் என்று கூறிவிட முடியாது. உதாரணமாக, ராகு தகப்பனாரின் தகப்பனாரைக் (பாட்டன்) குறிக்கும். அதேசமயம், சூரியன் அரச மற்றும் அந்தஸ்தான நிலையைக் குறிக்கும். ஆகவே பாட்டனார் அந்தஸ்தான, கௌரவமிக்க குடும்பத்தில், செல்வம் நிறைந்த குடும்பத்தில் பிறந்தவராக இருப்பார். மேலும் செவ்வாயின் தாக்கத்தால் ஒரு சிறந்த நிர்வாகியாகவும் இருந்திருப்பார். சமுதாயத்தில் நல்ல அந்தஸ்த்தில் வாழ்ந்தவர் என்றும் கூறலாம். செவ்வாய் சகோதரன் ஆகையால் தனது சகோதரர்களுடன் சுமுகமான உறவுடன் வாழ்ந்திருப்பார். சில சமயங்களில் அவர்களால் தொல்லைகள் ஏற்பட்டிருக்கும். காரணம் ராகு - செவ்வாய் பகை. சாதகரின் தகப்பனார், சாதகரின் தாத்தா சேகரித்து வைத்த கௌரவம், சொத்து, சுகங்களை இழக்கிறார். காரணம், சூரியன் - ராகு மற்றும் சுக்கிரன் பகை. இந்தக் குழந்தை பிறக்கும் நேரத்தில் சாதகரின் தகப்பனார் கஷ்ட நிலைக்கு ஆளாக நேரும் எனக் கூறலாம்.

சாதகத்தில் உச்சம் பெற்ற சூரியனுடன் குரு மற்றும் கேது இருந்தால் - சாதகரின் செல்வத்துக்கோ, செல்வாக்குக்கோ குறை இருக்காது. சாதக ராசியான குரு, உச்சம்பெற்ற சூரியனுடன் சேர்ந்ததால் சூரியன், அந்தஸ்தான நிலையைக் குறிக்கும் ஞான காரகன் கேதுவுடன் சேர்வதால் புகழ், செல்வத்துக்குப் பாதிப்பு இல்லை. ஆனால் கால புருடத் தத்து வப்படி புத்திரஸ்தானாதிபதி சூரியன், காரகன் குரு இவர்களுடன் கேது சேர்வதால் இந்த ஜாதகருக்கு ஆண் குழந்தை பிறக்கும் வாய்ப்புக் குறைவு என்று கூற முடியும். சாதகத்தில் சூரியன் உச்சம் பெற்று, குருவுடன் சேர்க்கை, குரு - செவ்வாய் பரிவர்த்தனை இருந்தால் - சூரியன் சாதகரின் தகப்பனாரைக் குறிக்கும். புகழ் மதிப்புக்கு காரகத்துவம் வகிக்கும் குருவுடன் சேர்க்கை ஆகிறது. அதேசமயம் குரு தர்மம், ஈகைக்கு காரகத்துவம் வகிக்கும். ஆக, இவரது தகப்பனால் ஈகை, தர்மம் ஆகிய நற்பண்புகள் காரணமாக புகழ், கீர்த்தி பெறுகிறார். அதே சமயம் குரு-செவ்வாய் பரிவர்த்தனை காரணமாக, செவ்வாய், மேடத்துக்கு வருவதால் ஈகைக்குணம் மாறி, கர்வம் தலைதூக்குகிறது. அதன் காரணமாகப் புகழை இழக்கிறாரா என்பதை மற்ற கிரகங்களை வைத்து முடிவு செய்ய வேண்டும். சாதகத்தில் உச்சம் பெற்ற சூரியனுடன் சனி சேர்க்கை மற்றும் செவ்வாய்-சனிப் பரிவர்த்தனை இருந்தால் சூரியன், சாதகரின் தகப்பனாரைக் குறிக்கும். அவர் உச்சம் என்பதால் தகப்பனார் நல்ல கௌரவமான குடும் பத்தில் பிறந்தவர் என்றும், சனியின் சேர்க்கையால் பல தொல்லைகளுக்கு ஆளாகிறார் என்றும் காணலாம்.

அதேசமயம், சூரியன் அரசைக்குறிக்கும். அவருக்கு அரச ஆதரவும் இருந்திருக்கும். சனி, செவ்வாய் பரிவர்த்தனை காரணமாக அதிகாரம், அந்தஸ்துள்ள அதிகாரியாக இருந்து மதிப்பு மரியாதையுடன் இருந்திருப்பார். சாதகருக்கு முற்பகுதி தொழிலில் பல கஷ்டங்களைக் கொடுக்கும் பரிவர்த்தனை காரணமாக சனி, தனது ஆட்சி வீட்டுக்கு வருவதால் பிற்பகுதியில் சாதகமான நிலை ஏற்பட்டு சிறப்பாக வாழ்வார் என்று உறுதிபடக் கூறலாம். சந்திரனை குறிக்கும் சில காரகத்துவங்கள் மனம், தாயார் திருமணத் துக்குப் பிறகு மாமியார் ஏமாற்றுதல், ஏமாறுதல், அபவாதம். சந்திரனைப் பற்றிச் சில சோதிட கருத்துக்கள் உண்மையில் சந்திரன் ஒரு கிரகம் அல்ல, பூமியைச் சுற்றும் ஒரு உபகிரகம். பல கோடிக் கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள பல கிரகங்களில் இருந்தும், நட்சத்திரங்களில் இருந்தும் வருகின்ற மின் அலைகளை கிரகித்து பூமியின் மேல் பாய்ச்சும் வேலையை சந்திரன் செய்கின்றான். எனவே சந்திரன் சுயமாக பின் அலைகளைப் பாய்ச்சுவது இல்லை. எனவே தான் சந்திரனைக் கொண்டு சோதிடமுறையில் கோச்சார முறையில் பலன் காணப்படுகிறது. நீருக்கு நிறமில்லை, நீருக்கு ருசி இல்லை, அதேசமயம் நீரை எந்த நிறப் பாத்திரத்தில் ஊற்றுகிறோமோ அந்த நிறமாகத் தெரியும். எந்த (சீனி அல்லது உப்பு) கலக்கிறோமோ அந்த ருசியைத் தரும். அதுபோல சந்திரன் எந்த கிரகத்தின் நட்சத்திர சாரத்தில் நிற்கிறாரோ அந்தக் கிரகத்தின் தன்மையை அடைகிறார்.

**குறிப்பு:** ஒரு காரக கிரகத்துக்கு 2,3,5,7,9,11ல் ஏதாவது ஒரு கிரகம் இருந்து அது நட்பு கிரகமானால் நன்மையான பலனும், பகைக் கிரகமானால், கெட்ட பலனும் நடக்கும் என்பது நாடி விதி. குருவும் சனியும் 3 இல் இருக்க, சந்திரனுக்கு பார்வை, எதிர்பார்வை கொடுக்கின்றனர். கால புருஷ தத்துவப்படி குரு 9 ஆம் வீட்டுக்கு உரியவர். சனி 10ஆம் வீட் டுக்கு உரியவர். எனவே தர்ம, கர்மாதிபதிகள் சந் திரனை பார்க்கின்றனர். எனவே தர்ம கர்மாதி யோகத்தை பெறும் தாயார் காரகன் சந்திரன். ஆகவே இவரது தாயார் பேரும், புகழும் பெறுவார். நேர்மையான வழியில் நடப்பார் எனக் கூறலாம். சாதகனைக் குறிக்கும் குரு, உச்சம் பெற்று இருப்பதால் நல்ல நிலையில் தான் இருப்பார். அதே சமயம் சனி அதே வீட்டில் உள்ளார் (தொழி லுக்கு காரகன்) சந்திரனின் பார்வை, சனிக்கும் கிடைக்கிறது. சந்திரன் கவனத்துக்குக் காரகன் அதனால் தொழிலை அடிக்கடி மாற்ற வேண்டிய நிலை சாதகருக்கு ஏற்படும்.

**குறிப்பு:** சனி இவரின் 26 முதல் 28 இடபத்துக்கு வரும் சமயம், இந்த நிலை ஏற்படும். எப்படி ஏற்படுகிறது குருவானவர், இவரது 26 ஆவது வயதில் கன்னியில் சஞ்சரிப்பார். கன்னிக்கு திரிகோண ராசியான இடபத்தில் சந்திரன் அதே சமயம் 26ஆவது வயதில் சனி, சந்திரனுடன் சேர்ந்து, இடபத்தில் இருப்பார். பிறந்த சாதகத்தில் உள்ள குரு, சனி, சந்திரன் சேர்க்கை இவரது 26 ஆவது வயதில் ஏற்படுகிறது. அதனால் அந்த சமயத்தில் நிகழும் என கால நிர்ணயம் செய்யப்படுகிறது. (முற்றும்)



# பெண்களின் இயல்பு பாதுகாக்கப்படல் வேண்டும்

*(பெண்கள் தங்களது வீட்டிலே தங்களுடைய பணிகளைச் செவ்வனே செய்வதில் தான் ஒரு ஆரோக்கியமான சமூகம் உருவாவது தங்கியுள்ளது என்ற கருத்தை நேற்றைய உதயனில் பார்த்தோம். அதன் தொடர்ச்சி கீழே தரப்படுகிறது.)*

திருமணத்துக்குப் பின்னர் பெண்ணைக் கணவன் கவனிக்க வேண்டும். அது அவருடைய கடமை. இது பற்றி அவர் பெருமையடிக்க முடியாது. 'எனக்கு உன்னைக் கவனிக்க முடியாது' என்று கூற முடியாது. ஏனெனில் பெண்ணின் முழு வேலையுமே வீட்டை நிர்வகிப்பது தான். அவளைக் கவனிப்பது கணவனின் கடமை.

அடுத்தது தாய் என்ற ரீதியில் அவளது பிள்ளைகள் கவனிக்க வேண்டும். பிறகு சகோதரர்கள், உறவினர்கள் அவளைக் கவனிக்க வேண்டும். ஒரு பெண்ணை நிர்க்கதியாக சமூகத்தில் விட முடியாது. அவள் எப்போதும் கடைசி வரைக்கும் அதிதி ஆகத்தான் இருப்பாள். இது பெண்ணுக்குள்ள அடிப்படை உரிமைகளுள் ஒன்று. எனவே, தொழில் புரிவது பெண்களின் ஆயுதம் என்ற வாதம் மேற்குலகுக்குப் பொருத்தமானது. அவர்கள் பேசும் சமத்துவம், சம அந்தஸ்து மற்றும் பால் பற்றிய கண்ணோட்டத்தின் விளைவாக இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அங்கு கணவன் மனைவி என்ற குடும்ப அமைப்புக் கிடையாது. வாழ்க்கைத் துணை என்ற பெயரில் தாம் விரும்பியவர்களுடன் விரும்பிய நேரத்தில் ஒன்றாக இருந்துவிட்டு செல்லும் பழக்கமே பரவியிருக்கிறது. அங்கு ஆண்கள் பெண்களின் பொறுப்பாளர்கள் அல்ல. தந்தை மகளைப் பராமரிக்க வேண்டும். கணவன் மனைவியைக் கவனிக்க வேண்டும், சகோதரர்கள் சகோதரிகளைப் பார்க்க வேண்டும், என்ற கடமை இல்லை. எனவே மேற்குலக நாடுகளில் பெண் வாழ வேண்டும் என்றிருந்தால் கட்டாயம் தொழில் என்ற ஆயுதத்தைக் கையில் எடுத்தாக வேண்டும். (முற்றும்)






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வானில் பறந்த ஆமை

பிரம்மதத்தர் என்ற மன்னர், பிறரை ஒரு சொல்லும் பேச விடாமல், ஓயாமல் பேசும் பழக்கமுடையவராக இருந்தார். அவரது அவையில் ஆலோசகராக இருந்த "போதி சத்வர்" சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது அவரது அந்தப் பழக்கத்தைத் திருத்த வேண்டும் எனும் முனைப்போடு காத்திருந்தார். அந்தக் காலத்தில் இமயமலையின் ஒரு குளத்தில் ஆமை ஒன்று வசித்து வந்தது. இரண்டு அன்னப்பறவைகளும், இரண்டு காட்டுவாத்துக்களும் அந்தக் குளத்துக்கு இரை தேடி வந்த பொழுது, அந்த ஆமையுடன் நட்பாகின. ஒருநாள் அவை அந்த ஆமையிடம், "அருமை நண்பா! இமயமலையைச் சேர்ந்த அழகிய மலைக் குன்றில் தங்கக் குகை என்னும் இடத்தில் நாங்கள் வாழ்கிறோம். அந்த அழகிய இடத்தை உனக்குக் காட்ட விரும்புகிறோம். எங்களுடன் வருவாயா?" என்று கேட்டன. அதற்கு ஆமை, "நான் எவ்வாறு அங்கு வர இயலும்?" என்று வினவியது. சற்றுச் சிந்தித்த அன்னங்களும் வாத்துக்களும் கடைசியில், "ஒன்று செய்யலாம்! நீ ஒரு கோலை வாயில் இறுகப் பிடித்துக் கொள்! நாங்கள் அதன் இரு முனைகளையும் எங்களது அலகுகளால் பற்றித் தூக்கிக் கொண்டு பறந்து செல்கிறோம். சரியா?" என்று கேட்டன. ஆமையும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டது. அன்னப் பறவைகளும், காட்டு வாத்துக்களும் சேர்ந்து ஆமையைத் தூக்கிச் செல்வதைக் கண்ட மக்கள் "ஆஹா! இந்த அதிசயத்தைப் பாருங்கள்" என்று வியந்து கூவினர். அதைக் கேட்ட ஆமை, "எனது நண்பர்கள் என்னை அழைத்துச் சென்றால் உங்களுக்கு என்ன வந்தது?" என்று கேட்கவாயைத்திறந்தது. அவ்வளவுதான், வாரணாசிநகரின்அரண்மனைமுற்றத்தில் விழுந்து பரிதாபமாக உயிரை விட்டது. அரண்மனை முற்றத்தில் திடீ ரென ஓர் ஆமை வானிலிருந்து வீழ்ந்து இறந்த அதிசயத்தைக் கேள்விப் பட்ட மன்னர், போதி சத்வரும் தனது சபையோர், ஏனையோரும் புடைசூழச் சென்று பார்த்து, "குருவே! இந்த நிகழ்வுக்கு என்ன காரணம்?" என்று வினவினார்.



இப்படியொரு வாய்ப்புக்காகவே காத்திருந்த போதி சத்வர், நடந்ததை ஊகித்தறிந்து மன்னனிடம் விளக்கினார். கூடவே, "ஓயாமல் அரட்டையடித்துக் கொண்டும், முடிவில்லாமல் வாயாடிக் கொண்டும் இருப்பவர்கள் இது போன்ற துயரமான முடிவைச் சந்திக்காமல் தப்ப முடியாது" என்றும் எடுத்துரைத்தார். "என்னை மறைமுகமாகக் குறிப்பிடுகிறீர்களா? "என்று மன்னன் வினவ, போதி சத்வர் "ஓ மன்னவா! நீங்கள் ஆனாலும், பிறர் ஆனாலும் எல்லோருக்கும் ஒன்றே சொல் வேன். அளவுக்கு அதிகமாகப் பேசுபவர்கள் துயரைச் சந்திக்க நேரிடும்" என்றார். அன்றிலிருந்து மன்னன் அளவாக, பொருள் பொதிந்த சொற்களை மாத்திரமே பேசுபவனாகத் தன்னை மாற்றிக் கொண்டான்.



# வர்ணம் தீட்டலாம் வாங்க





# ஈபிள் கோபுரம்

பிரான்ஸ் நாட்டின் தலைநகரம் பரிஸ் ஆகும். அங்கே 1879 ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியின் நினைவாக அலெக்சாண்டர் குஸ்தாப் ஈபிள் என்பவர் ஈபிள் கோபுரத்தைக் கட்டினார். இது சுமார் 984 அடி உயரம் கொண்டதாகும். அதுமட்டுமன்றி, இதனது அடித்தளத்தின் சுற்றளவு 330 அடி எனக் கூறப்படுகின்றது. இந்த ஈபிள் கோபுரத்தை அமைப்பதற்கு 10 ஆயிரம் இரும்புத் துண்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த இரும்புத் துண்டுகளைக் கொண்டு 250 தொடரூந்துகளைத் தயாரிக்கலாம் என்பது வியப்பூட்டும் செய்தியாகும். பிரான்ஸ் நாட்டின் முக்கிய சுற்றுலா மையமாக ஈபிள் கோபுரம் திகழ்கின்றது. வருடம் தோறும் இதனைப் பார்வையிட கோடிக்கணக்கான மக்கள் வருகை தருகின்றனர். இரவு நேரத்தில் ஈபிள் கோபுரம் பார்ப்பதற்கு கண்ணைக் கவரும்



வெளிச்சவீடு போன்று காட்சியளிக்கும்.

பி.சேயோன்,
தரம் 5,
அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை.

# நம்பிக்கை தரும் சிந்தனைகள்

1.அசைக்க முடியாத ஓர் அமைதியில்தான் உண்மையான சக்தியைக் காண முடியும்.
2.அமைதியுடன் கூடிய பொறுமை வெற்றிக்கு நிச்சயமான வழி.
3.சாந்தமான அமைதியில், வலிமை புதுப்பிக்கப்படுகின்றது.
4.இன்று செய்ய முடியாததை பின்னொரு நாள் நிச்சயமாகச் செய்ய முடியும். முன்னேற்றத்துக்காக செய்யப்படும் எந்த முயற்சியும் ஒரு போதும் வீணாவதில்லை.
5.முயற்சிதான் பாராட்டுக்குரியது!. 'நாம் அடையும் பொருள் புகழ் தருவதில்லை. அதற்கான முயற்சிதான் புகழைத்தருகின்றது. நாம் பந்தயத்தின் முடிவில் அடையும் கோப்பையை எவரும் வெற்றி என்று பாராட்டுவதில்லை. ஓடி அடைந்த வேகத்தை,வெற்றிபெற முயற்சி செய்த நமது மனத்துணிவைத்தான் பாராட்டுகிறார்கள்'
6.வாழ்க்கை என்பது வெற்றி கொள்ளவே! தோல்விகளுக்காக துவளுதல் கூடாது. பொழுதுகளை வீணே கழிப்பதைவிட வெற்றி பெறுவதற்கான முயற்சிகளைச் செய்வதே நன்மை பயக்கும்.
7.தனக்குக் கிடைக்கும் ஊதியத்தின் மதிப்பை விட தன்னுடைய உழைப்பின் மதிப்பை உயர்த்திக் காட்டும் மனிதம் தான், சமூகத்தில் முன்னேற முடியும்!
8.சரியானது எது என்று உணர்ந்த பிறகும் அதைச் செய்யாமல் இருப்பதுதான் மகா கோழைத்தனம்!



9.தன்னம்பிக்கை இருந்தால் தைரியம் தன்னால் வரும்!
10.வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் இரண்டு கருவிகள் சிக்கனம், சேமிப்பு.
11.வரலாற்றைப் படைக்கும் மனிதர்கள் அதை எழுத அவகாசம் எடுத்துக் கொள்வதில்லை.
12.பிரச்சினைகளையும், நோய்களைய்யும் சமாளித்து வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையே அனைத்தையும் வெற்றிகரமாக மாற்றித்தரும்.
13.முன்னேற்றத்தை நோக்கி அது எத்தனை சிறியதாக இருந்தாலும் பரவாயில்லை, ஓர் அடி எடுத்து வையுங்கள்.
14.எல்லாமே போய் விட்டதே என்று சோர்ந்து போய் விடாதீர்கள். எந்த மனிதனாலும் வெல்ல முடியாத மன வலிமை இருக்கிறது. அதை மூலதனமாக வைத்துக் கொண்டு உழையுங்கள். வளம் பெறலாம்.
15.பேனாவைக் கையில் பிடித்தவர்களெல்லாம் புத்திசாலிகளில்லை. பிடிக்காதவர்களெல்லாம் முட்டாள்களுமில்லை.
16.திறமையால் ஜொலிக்க முடியவில்லையா, கவலைப்படாதீர்கள். முயற்சி... முயற்சி... முயற்சியால், வெற்றிக் கனியைத் தட்டிப் பறிக்கலாமே.
17.நேரத்தை மதிப்பவர்களே மதிப்பானவர்கள். நேர்மைக்கு நிச்சயம் பலன் கிடைக்கும். ஆனால் கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டும்.
18.மனிதன் தனது பலத்தைக் கொண்டு தானாகவே நிமிர்ந்து நிற்க வேண்டும்.
19.விழுந்தால் விதையாக விழு! எழுந்தால் மரமாக எழு! நம்பிக்கையற்றவன் மனிதனாகவே இருக்கமுடியாது.
20.செய்யும் ஒவ்வொரு காரியமுமே ஒரு லட்சியமாக இருத்தல் வேண்டும்.
21.உலகில் தனது கடமையைச் செய்பவன் எவனும் அதனிடம் ஒரு பொழுதும் அதிருப்தி கொள்வதில்லை.
22.மனிதன் தனது பலத்தைக் கொண்டு தானாகவே நிமிர்ந்து நிற்க வேண்டும்.
23.நல்ல செயலைச் செய்ய நினைத்தால் உடனே செய்க.
24.நல்ல சிந்தனைகள் உள்ளவரின் மனதில் குழப்பம் இராது.
25.நாம் எதைச் செய்தாலும் எமது நோக்கத்தை மறவாதிருக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைச் சேவை வாகனங்களை பொலிஸார் கண்காணிக்கவேண்டும்

## பெற்றோர் தரப்பில் கோரிக்கை

மன்னார்,ஒக்.31

மன்னாரில்பாடசாலைசேவையில் ஈடுபட்டு வரும் வாகனங்கள் தொடர்பில் வீதி போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் அதிக கவனம் செலுத்த வேண்டிய நிலை உள்ளதாகப் பெற்றோர் மற்றும் சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர்.

மன்னார்நகரில்உள்ளபாடசாலைகளுக்கு மாணவர்களை ஓட்டோ மற்றும் ஹை–ஏஸ் வாகனங்கள் மூலம் மாதாந்தத் தவணைக் கட்டண அடிப்படையில் ஏற்றி இறக்கும் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனினும் சில ஓட்டோச் சாரதிகள் அளவுக்கு அதிகமாக மாணவர்களை ஏற்றிச்சேவையில் ஈடுபடுவதாகவும், அதிவேகத்தில் பயணிப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, சிறுவர்களையும், மாணவர்களையும் ஆபத்துக்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் பொலிஸார் துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாகப் பாடசாலைச் சேவையில் ஈடுபட்டு வரும் ஓட்டோ, ஹை–ஏஸ்வாகனஉரிமையாளர்களுக்கு இந்தச் சேவை தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த மன்னார் வீதிப் போக்குவரத்துப்பிரிவு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பெற்றோர் கோரியுள்ளனர். (ஐ–56)

# பிரகீத்தின் விசாரணைக்கு ஒத்துழைக்காத ராணுவம்

## அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.31

லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு போதியளவு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை என அரச தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

அரச தரப்பு சட்டத்தரணியான திலீப பீரிஸ் இவ்வாறு குற்றஞ் சுமத்தியுள்ளார்.

இலங்கை இராணுவமும் டயலொக் தொலைபேசி நிறுவனமும் உரிய ஒத்துழைப்பை வழங்கத் தவறியுள்ளதாக அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். விசாரணைகளை முன்னெடுத்து வரும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும், நீதிமன்றத்துக்கும் உரிய ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை என அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட ஹோமாகம நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணைகளின்போது குறித்த விடயங்கள் நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் விளக்கமளிக்க டயலொக் நிறுவனத்தின் சட்டப் பிரிவு முகாமையாளர் பிரேமசிறி ரட்நாயக்க, நீதிமன்றில் முன்னிலையாகவேண்டுமென ஹோமாகம நீதவான் ஆர்.பி. நெலுந்தெனியவுக்கு உத்தரவிட்டுள்ளார். (த–வ)

# பாடசாலையின் தேவைகளை நிறைவேற்றுமாறு கோரி மனு

காரைநகர்,ஒக்.31

காரைநகர்–வலந்தலை தெற்கு அ.மி.த.க.பாடசாலையின் அடிப்படைத்தேவைகளைநிறைவேற்றக் கோரி மீள்குடியேற்ற இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் குறித்த பாடசாலை மாணவர்கள் 21 பேர் ஒவ்வாமை நோயினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சம்பவத்தையடுத்து கடந்த 25 ஆம் திகதி பாடசாலைக்கு நேரடியாகபயணம்செய்தமீள்குடியேற்ற அமைச்சர் டீ.எம்.சுவாமிநாதன் மற்றும்வடமாகாணசுகாதாரஅமைச்சர் எஸ்.சத்தியலிங்கம் ஆகியோர் பாடசாலையைப் பார்வையிட்டு பாடசாலையின்தேவைகள்தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டனர். அமைச்சர்களுடன் முன்னாள் வடமாகாணக்கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் பாடசாலைக்கு நேரடியாக பயணம் செய்தனர். காரைநகர் மக்கள் மீளக்குடியமர்ந்தும் 15 வருடங்கள் கழிந்த நிலையில், கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னரே இந்தப் பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்ட போதிலும், பாடசாலைக்கான அடிப்படை வசதிகள் போதியளவில் ஏற்படுத்தப்படாததுடன், ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகின்றது. இது தொடர்பாக பாடசாலைச் சமுகத்தால் சுட்டிக்காட்டப்பட்டதுடன் அவற்றை உடனடியாக நிறைவேற்றித் தருமாறும் கோரிக்கை விடப்பட்டது. இது தொடர்பான மனு ஒன்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ–250)

## மாங்குளம்

யசாலைக்கு நிரந்தரமான ஒரு வைத்தியர் இல்லை எனவும், இதனால் தாங்கள் பெரிதும் பாதிக்கப்டுவதாகவும் தெரிவித்து அப்பகுதி மக்கள் நீண்ட நாள்களாகப் பல தரப்பினர்களிடமும் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர்.

இதற்குத் தீர்வு எட்டப்படாத நிலையில் அண்மை யில் மக்கள் ஒன்று திரண்டு கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர். ஆனால் அதற்கும் எந்த விதமான ஆக்கபூர்வமான பதிலும் கிடைக்கவில்லை. இதனையடுத்து மக்கள் நேற்று இது குறித்து மாங்குளம் பொலிஸ்நிலையத்தில்முறையிட்டனர். இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த மாங்குளம் பொலிஸார், வைத்தியரை நியமிக்கவில்லை எனக் கோரி முறைப்பாடு ஒன்று செய்யப்படுவது பொலிஸ் வரலாற்றிலேயே இதுவே முதல் தடவை எனத் தெரிவித்தனர்.

வடக்கு மாகாணத்தில் யாழ். போதனா வைத்தியசாலை தவிர 102 வைத்தியசாலைகள் இயங்குகின்றன. அவற்றில் நட்டாங்கண்டல் வைத்திய சாலை உட்பட 32 வைத்தியசாலைகளில் வைத்தியர்கள் இன்றி இயங்குகின்றன. வைத்தியர்கள் இல்லை என்பதற்காக வைத்தியசாலைகளை மூடவில்லை. 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலேயே வைத்தியசாலைகளுக்கான வைத்தியர்கள் நியமிக்கப்படுவார்கள். இதற்கு மத்திய சுகாதார அமைச்சரும் உறுதியளித்துள்ளார் என்று நேற்று மலையாளபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையத்தைத்திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

(கு–21,ரி3)

# கொள்ளையர்களுடன் விடாது போராடி 3 லட்சம் ரூபாவைக் காப்பாற்றிய பெண்

## கிளிநொச்சியில் நேற்றுமாலை சம்பவம்

கிளிநொச்சி, ஒக்.31

கிளிநொச்சி நகரிலுள்ள வங்கி ஒன்றில், கடனாகப் பெற்றுக் கொண்ட மூன்று லட்சம் ரூபா பணத்தை, நடு வீதியில் இரு கொள்ளையர்கள் அபகரிக்க மேற்கொண்ட முயற்சியை முறியடித்த பெண் ஒருவர், பணத்தைக் காப்பாற்றியுள்ளார்.

எனினும் கொள்ளையர்களின் தாக்குதலில் காயமடைந்த குறித்த பெண், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் வசிக்கும் 31வயதுடைய பெண் ஒருவர் நகரின் மத்தியில் உள்ள ஓர் அபிவிருத்தி வங்கியில் நேற்று மாலை மூன்று லட்சம் ரூபா பணம் கடனாகப் பெற்றுள்ளார்.

இவ்வாறு பணத்தைப் பெற்றவர், உருத்திரபுரம் பகுதிக்கு தனித்துச் செல்வதை அவதானித்த இருவர் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து யாரும் அற்ற ஓர் பகுதியில் குறித்த பெண்ணிடமிருந்த பணப்பையை அபகரிக்க முயன்றுள்ளனர்.

இவ்வாறு இரு இளைஞர்களும் குறித்த பெண்மணியிடம் இருந்து பணப்பையை அபகரிக்க முயன்றுள்ளனர். முதலில் ஓர் இளைஞன் மோட்டார் சைக்கிளில் பின்னிருக்கையில் அமர்ந்து சென்றவரே பணப்பையை அபகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோதும், அம் முயற்சி பயனளிக்கவில்லை.

இதனால் இரு இளைஞர்களும் இனணந்து மேற்படி பெண்ணைத் தள்ளி விழுத்தி தாக்குதல் நடத்தி பணப்பையை பறிக்க கடும் முயற்சி எடுத்துள்ளனர். இருப்பினும் குறித்த பெண், அவலக்குரல் எழுப்பியவாறு பணப்பையை காப்பாற்றியவாறு இரு இளைஞர்கள் மீதும் தன் இயலுமைக்கு ஏற்றவாறு தற்காப்பு தாக்குதல் நடத்தியுள்ளார்.

இவ்வாறு, நீண்ட நேரம் போராடியும் தமது முயற்சி பயனளிக்காத கொள்ளையர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் தப்பித்துள்ளனர்.

இதனால் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை பெறும் நோக்கில் தற்போது குறித்த பெண் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொள்வர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ–101)

# உள்ளூராட்சித் தேர்தலில் சு.க. பக்கமே நிற்பேன்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 31

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்காகக் கட்சிக்குத் தலைமை தாங்கவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். கட்சி தோல்வியுறுவதைக் காணவிரும்பவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடுவெல சிறிலங்கா சுதந்திரக்கட்சி அலுவலகத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஒரு நிலையான கட்சி. கடந்த இரண்டு தேர்தல்களின்போது இந்தக் கட்சி தோல்வியடைந்ததை நாம் ஏற்றுக்கொண்டு அதற்கான காரணங்களைக் கண்டறிந்து கட்சியை வெற்றிப்பாதையில் இட்டுச் செல்வதற்கான வேலைத்திட்டமொன்று முன்னெடுக்கப்படல்வேண்டும்.

ஆரம்பிக்கப்பட்டுள்ள நல்லாட்சி வெற்றி பெற வேண்டுமாயின் கட்டாயம் இரு கட்சி முறைமை காணப்பட வேண்டும். எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போது தனிநபர்களது நற்பெயருக்கு களங்கம் விளைவித்தல், தனிநபர் கள் மீது குற்றம் சுமத்தல் என்பவற்றுக்குப் பதிலாக அபிவிருத்தி அடைந்த ஜனநாய நாடுகளில் காணப்படுவதைப்போன்ற கொள்கைகள் தொடர்பான கலந்துரையாடல்கள் ஏற்பட வேண்டும். ஊழல், வீண்விரயம், மோசடிகள் எதுவும் அற்ற பலம்மிக்க மக்கள் உறவைப் பேணி வரும் நபர்கள் மக்களினால் தெரிவு செய்யப்படுவர்.

எதிர்வரும் இரண்டு மாத காலத்துக் குள் உள்ளூராட்சித்தேர்தலுக்கானசிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். நேர்முகப் பரீட்சையின் மூலம் வேட்பாளர்கள் தெரிவு செய்வதற்குப் பதிலாக அந்தந்தப் பிரிவுகளில் வெற்றியீட்ட முடியுமான வேட்பாளர்கள் தொகுதி ஏற்பாட்டாளர்களின் அங்கீகாரத்துக்கு அமைய தெரிவு செய்யப்படுவர்.

கடந்த காலங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் தொடர்பாகத் தெரிவிக்கப்பட்ட பாரதூரமான குற்றச்சாட்டுக்களை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தோல்வியின் ஆரம்பமாகும். குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள் வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்படுவதுடன் [illegible] பிரச்சினைகளும் [illegible] என்றார்.

(த–4)

## மட்டு. சிறையில் கைதிகள் போராட்டம்

மட்டக்களப்பு சிறைச்சாலையின் கூரைமேல்ஏறிகைதிகள்சிலர்ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தி வருகின்றனர். பல் வேறுக் குற்றச்சாட்டுக்களின் கீழ் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 பேர் இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் தாங்கள் நடத்தப்படுகின்ற முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டம் நடத்தப்படுவதாக அவர்கள் அறிவித்துள்ளனர். (வ)

## மரண அறிவித்தல்கள்

### காங்கேசு விநாயகராசா



கோப்பாயை பிறப்பிடமாகவும், திருகோணமலை 294, மத்திய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட காங்கேசு விநாயகராசா அவர்கள் 27.10.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காங்கேசு, கண்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் சறோஜினிதேவியின் (ரஞ்சி) அன்புக் கணவரும் ஜெய்சாந்தி (சுவிஸ்) ஜெயபவானி (கனடா) அருட்குமரன் (லண்டன்) அருட்செல்வம் (கனடா) ஜெயஜனனி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விநாயகரட்ணம் (Engineer) விநாயகசோதி விநாயகமலர், விநாயகதேவன், விநாயகதேவி, விநாயகலிங்கம் ஆகியோரின் அன்புமிக்க சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் White House Parlour *180, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில்* நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

*மகள் – திருமதி. வசந்தன் ஜெய்சாந்தி(சுவிஸ்)*
*தொ.பேசி : 076 922 7051*
*சுவிஸ் : 0041527204275*
*சகோதரன் – விநாயகரட்ணம்*
*தொ.பேசி : 077 123 5704*

### திருமதி பரமேஸ்வரி நடராசா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி நடராசா 30.10.2015 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான புஸ்பராணி, புஸ்பமலர், உருத்திரசிங்கம், மற்றும் குணபாலசிங்கம், தனபாலசிங்கம் (சுவிஸ்), சறோஜினிதேவி (பணிப்பாளர் திவிநெகும, வவுனியா) அம்பிகை (ஜேர்மன்) அம்பாலிகை, பவானி (ஜேர்மன்)ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் செகராசா, சிவபாலசுப்பிரமணியம் (ஜேர்மன்) பத்மரஞ்சன் (வவுனியா கிராமசேவையாளர்) மேனன், புனிதராசன் (ஜேர்மன்) பிறேமா, தர்மா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், சரஸ்வதி, யோகம்மா மற்றும் பற்பனா, கமலாதேவி, இலங்காதேவி, பரஞ்சோதி, மகாலிங்கம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம்,செல்லையா தர்மலிங்கம், பரமேஸ்வரி, இரத்தினேஸ்வரி மற்றும் ரஞ்சிதமலர் ஆகியோரின் மைத்துனியும் பாமினி .(ஜேர்மன்), தர்சினி (பிரான்ஸ்), பிறேமளா, நிசாந்தன், டினோஜா, நிசாந்தினி, ஜெனனி, கஸ்தூரி, தாமிரா, திமேத், சொலமன், ரிசான், நிரோஸ், திவ்யா, பிரசாந், ரம்யா, பிரஜித், அனோஜித் ஆகி யோரின் பேர்த்தியும் சுபானு, மாதவன், சியாம், அபர்னிகா, அபர்னன், அர்ச்சயன், சஜித், சஞ்சயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கிலுள்ள கட்டை ஆலடி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

மகன் ந. குணபாலசிங்கம் (கடவுள்)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளைமோரில் சிப்பாய் கொலை; ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 31

பருத்தித்துறை நாவலடியில் சுற்றுக் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவம் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தி ஒரு சிப்பாயைக் கொலை செய்த குற்றச்சாட்டு வழக்கில், எதிரியினால் அளிக்கப்பட்டதாகக் கூறி, சமர்ப்பிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் யாழ்.மேல்நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டது.

வழக்கில் ஒரேயொரு ஆதாரமாகிய ஒப்புதல் வாக்குமூலம் நிராகரிக்கப்பட்டமையால் மேற்கொண்டு இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்பதுபற்றி அறிவிக்குமாறு கூறி வழக்கு எதிர்வரும் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. குறித்த கிளைமோர்த் தாக்குதலில், இராணுவச் சிப்பாய் திசநாயக்க கொல்லப்பட்டார். அந்தக் கொலைக் குற்றச்சாட்டு இரத்தினம் பூபாலபிள்ளை அல்லது பூபால் மாமா என்பவருக்கு எதிராகச் சுமத்தப்பட்டது. அவர் பயங்கரவாதச்சட்டத்தின்கீழ்கைதுசெய்யப்பட்டுமறியலில்வைக்கப்பட்டுள்ளார். அவருக்கு எதிராகச் சட்டமா அதிபரால் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்ததாகக் கூறி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் பொன்சேகா நீதிமன்றத்தில் சாட்சியமளித்தார். அதில், எதிரியான இரத்தினம் பூபாலபிள்ளையை அழைத்து அவருடைய தேவையைப் பூர்த்தி செய்யுமாறு பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவின் பணிப்பாளர் உத்தரவிட்டார். எதிரி குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிக்க விரும்புவதாகத் தெரிவித்தார். குற்ற ஒப்புதல் வாக்குமூலம் தொடர்பான சட்டதிட்டங்களை விளங்கப்படுத்திய பின்னர், அவருடைய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவு செய்தேன். எனக்குத் தமிழ்மொழி தெரியாது. அதேநேரம், எதிரிக்குச் சிங்கள மொழி தெரிந்திருக்கவில்லை. எனவே எங்கள் இருவருக்குமிடையில் மொழிபெயர்ப்பாளராக பொலிஸ் சார்ஜன்ட் கடமையாற்றினார். வாக்கு மூலத்தை அதே இடத்தில் நேரடியாகவே, பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் தட்டச்சு செய்தார் எனத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து நீதிமன்றத் தில் சாட்சியமளித்த எதிரியான இரத்தினம் பூபாலபிள்ளை, அந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தைத் தான் வழங்கவில்லை என உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் பொன்சேகாவின் சாட்சியக் கூற்றை மறுத்துரைத்தார்.

எதிரி தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது:–

குறித்த உதவி பொலிஸ் அத்தியட்சகரை நான் காணவே இல்லை. அவருக்கு நான் எந்தவிதமான குற்ற ஒப்புதல் வாக்குமூலமும் வழங்கவில்லை. சமர்ப்பிக்கப் பட்டதாகக் கூறப்படுகின்ற ஒப்புதல் வாக்குமூலத்துக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

2009 மே 16 ஆம் திகதி ஓமந்தையில் வைத்துப் படையினர் என்னைக்கைது செய்தனர். கொலை நடந்ததாகக் கூறப்படுகின்ற 2007 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வன்னியில் இருந்தேன். அந்தக் காலப்பகுதியில் வன்னியில் இருந்து எவரும் பருத்தித்துறைக்குச் சுதந்திரமாகச் செல்ல முடியாது.

சம்பவம் நடந்து இரண்டு வருடங்களின் பின்பே என்னைக் கைது செய்து என்மீது இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இரு தரப்பு சாட்சியங்களையும் செவிமடுத்த நீதிபதி தெரிவித்ததாவது:–

நீதிமன்றத்தில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அளித்த சாட்சியத் தில், அவருக்குப் பணிப்புரை வழங் கியதாகக் குறிப்பிட்ட பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளர் யார்? அவருடைய பெயர் என்ன? எதிரி அந்தப் பணிப்பாளரிடம் தெரி விக்க விரும்பியிருந்த தகவல் என்ன? எதிரியின் விருப்பத்தை அல் லது தேவையை அந்தப் பணிப் பாளரிடம் கொண்டு சென்றவர் யார்? என்பது போன்ற எந்த விடய மும் தெளிவுபடுத்தப் படவில்லை. எதிரியிடமிருந்து பெற்றதாகக் கூறப்படுகின்ற ஒப்புதல் வாக்கு மூலம் சம்பந்தமாக மேற் குறிப்பிட்ட விடயங்கள் உதவிப்பொலிஸ்அத்தியட்சகரினால்நிரூபிக்கப்படவில்லை.

சாட்சியங்களிலிருந்து எதிரி யாருடைய தடுப்புக்காவலில் வைக்கப்பட் டிருந்தார், சட்டரீதியான தடுப்புக் காவலிலா அல்லது முரணான தடுப் புக்காவலிலா என்பது தொடர்பிலான எதிரியின் தடுப்புக்காவல் உத்தரவுப் பத்திரம் எதுவும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. எதிரி சுதந்திரமாக, சுயவிருப்பத்தின் பேரில் தான் தனது குற்ற ஒப்பு தல் வாக்குமூலத்தை வழங்கினார் என்பதை நிரூபிப்பதற்கு அரச தரப்பு தவறிவிட்டது. இந்த வழக் கின் ஒரே யொரு ஆவண சாட்சியமாகிய எதிரி வழங்கிய தாகத் தெரிவிக் கப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை நிராகரித்து இந்த நீதிமன் றம் தீர்ப்பளிக்கின்றது என நீதிபதி தெரிவித்தார்.

இந்த வழக்கில் அரச தரப்பில் செல்வி சுகந்தி கந்தசாமியும் எதிரி தரப்பில் சட்டத் தரணி ந.சிறிகாந் தாவும் முன்னிலையாகியிருந்தனர். (த–4)


**LAPTOP மடிக்கணினி விற்பனைக்கு**

HP i3 Laptop (மடிக்கணினி) விற்பனைக்கு உண்டு.

**071 4620806**

**வாடகைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கடை வாடகைக்குண்டு.

**T.P: 077 2689 442**





**யாழ்ப்பாண மனவளக்கலை மன்ற அறக்கட்டளை வழங்கும்**

**முழுமை நல வாழ்வுக்கு மனவளக்கலை**

## சிறப்பு யோகா பயிற்சிகள்

**மீண்டும் யாழ்மண்ணில் ஆரம்பமாகின்றது**

* எளிய முறை உடற்பயிற்சிகள் * எளியமுறைதியானப் பயிற்சிகள்
* காயகல்ப பயிற்சி * அகத்தாய்வுப்பயிற்சிகள்

பயிற்சிகள் நடைபெறும் இடங்கள்

- 31.10.2015 தொடக்கம் 05.11.2015 வரை தினமும் பி.ப 5.00 மணி இணுவில் அறிவாலய மண்டபம்.
- 06.11.2015 தொடக்கம் 10.11.2015 வரை தினமும் பி.ப 5.00 மணி பொற்பதி அறிவாலய சரஸ்வதி முன்பள்ளி கொக்குவில்.
- அகத்தாய்வு III பயிற்சி 31.10.2015, 01.11.2015 சனி, ஞாயிறு பகல் 9.00 to 1.30 மணிவரை இணுவில் அறிவாலய மண்டபம்

பயிற்சிகளை வழங்குபவர்
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி எஸ்.இந்திரா அவர்கள்
தமிழ்நாடு இந்தியா

தொடக்கவுரை:
மனவளக்கலை பேராசிரியர் அருள்நிதி V.பாஸ்கரன்
(யாழ்ப்பாண மனவளக்கலை மன்ற அறக்கட்டளை)

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்களால் உலகமக்கள் அனைவரும் அமைதியாக வாழ வழிசெய்திட வேண்டும் என்ற பெருநோக்குடன் அறிமுகப்படுத்தப்பட்ட மனவளக்கலை யோகாப்பயிற்சிகள் மனிதன் உடலையும், உளத்தையும், உயிரையும் சீராக்கி வாழ வழிவகுத்து மன அமைதி, நோய் எதிர்ப்புசக்தி, குடும்ப அமைதி மற்றும் வாழ்வியல் சிறக்க வல்ல இப்பயிற்சிகளைப் பெற்று பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

யாழ்ப்பாண மனவளக்கலை மன்ற அறக்கட்டளை
கோவில் சின்னையார் வீதி,
முதலாம் ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (65671) (10.17)

தொடர்புகளுக்கு:
077 937 1846, 077 772 6732
071 440 3268, 077 736 8745
077 123 5646



10% → 50 % விலை கழிவு

**மங்களா காட்சியறை தீபாவளியை முன்னிட்டு**
**அனைத்து தளபாடங்களுக்கும்**
**என்றும் எங்கும் கிடைக்காத அமோக விலை குறைப்பு**
மங்களாவின் விலை குறைப்பும், கம்பனிகள் தரும் விலைகுறைப்பும் சேர்த்து இரட்டிப்பு விலைகுறைப்பு

**Mega Sale**

**தீபாவளி அமோக பரிசு**
தெரிவுக்கு இன்றே முந்துங்கள்
Open 8 A.M. —— 8 P.M

**மங்களா காட்சியறை**
இல.536, கே.கே.எஸ். வீதி, மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
T.P: .021 222 8367 0777 286 069
(ஞாயிறும் காட்சியறை திறக்கப்படும்.)








**நியத்த ஜய**

406
2015-10-30
நீலம்

02 07 45 53 C

**15,234,260/=**

**இம்முறை தனயோகம் உங்களுடையதா?**

2015-10-30 | 1896 | சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

**12 16 32 47**

**4,460,400/=**

**பெறுமதியான "டீ-செட்" வென்ற டிக்கட் தொடரிலக்கங்கள்**

| | | | |
|---|---|---|---|
| குருநாகல | 500000519 -3-23 | நுவரெலிய | 500001466 - 4-34 |
| குருநாகல | 500000882 -4-34 | பதுளை | 500001955 - 4.44 |
| கண்டி | 500001489 -3-13 | மாத்தறை | 500002987 - 1.41 |
| களுத்துறை | 500005358 -4-34 | அம்பாந்தோட்டை | 500003932 - 6.16 |
| கம்பஹா | 500006976 -5-25 | பொலனறுவை | 500007668 - 4-44 |
| கொழும்பு | 500013986 -5-15 | திருகோணமலை | 500010461 - 3.43 |
| கம்பஹா | 500017702 -2-42 | மொனராகல | 500012801 - 02-12 |
| கொழும்பு | 500018675 -1-21 | | |

Web: www.dlb.lk



## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகத்தை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பதிவாளர் பணிமனையில் 16.11.2015 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப் படும்.

**பிரதான உணவகம் - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி.**

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித் தனியாகப் பல்கலைக்கழக நிதிக்கிளையில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக நலச்சேவை கள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (வி.19671) (13.15.17)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## நாகமுத்து சின்னத்துரை

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - விமானநிலையம்)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சின்னத்துரை 28.10.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பு - அரியற்பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற அந்தோனியாப்பிள்ளையின்(அன்னம்) அன்புக்கணவரும் பிரான்சில் வசிப்பவர்களான பிறேமன், ஸ்ரீபன், ஸ்ரலின் காலஞ்சென்ற சுகுணா மற்றும் கொண்சன், வேளின், றொபின் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரா, தர்மினி, கௌரி, விக்ரர், சுகந்தி, ஜமுனா, சர்மிளா ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் மணிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சபீனம் மற்றும் துரைராஜா காலஞ்சென்ற செபஸ்ரியாம்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும் கனிஸ்ரன், ஒலிவியா, கேவின், ஸ்ரீபானி - அஜர்தன், சாம், சறோன், கமில்ரன், செரிபன், நிக்ஷன், மர்யோரி, மிசல் - கிறிஸ்ரல், சிறோமி - சுரேஸ், நிகோன், டெனிசன், வினுசா, டானியல், வேர்ஜின், டெனிஸ் உறுபன், யூலியா, லேஸ்சன், மக்கிலன், சூமைலி ஆகியோரின் அன்புப் பேரனும் செரினா, றொபியானோ, ஸ்ரில்லா, ஆதாம், ஐக்சன், ஐஷா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 1.30 மணியளவில் நல்லடக்கத்துக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

16/1, பழையபூங்கா வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P: 0033 6945 6101(ஸ்ரீபன்)
யாழ் - 021 321 6316

தகவல்:
பிறேமன், ஸ்ரீபன்,
கொன்சன்

(65664) (14.15.17)

பிறப்பு 15 . 11 . 1956



இறப்பு 29 . 10 . 2015

## தங்கமயில் சிவராசா

(சிவம் இரும்புத் தொழிலகம்-யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தங்கமயில் சிவராசா 29.10.2015 வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கமயில்-கோலமதி தம்பதிகளின் அன்புப் புதல்வ னும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், சகுந்தலாவின் அன்புக் கணவரும், ஜெகநாத் (ஜெகன்), ஜெசிதா, ஜெயந்தலா(கனடா), ஜெயக்குமார்(JK- சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மோகன் மற்றும் நாதன், பாபு, ராசன், விமலா, காலஞ்சென்ற அமுதா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தவமணிதேவி, சந்திராதேவி, தர்மலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேந்திரகுமார், சுதன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிலக்சிகா, கீர்த்திகா, சுபீட்சா(கனடா), சுஜின்(கனடா) ஆகியோரின் அன்புத் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (01-11-2015) ஞாயிற்றுக்கிழமை ந.ப 12:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
ஜெயக்குமார்(JK) - சுவிட்சர்லாந்து
செல்லிடப்பேசி: +41762483972
ஜெசிதா - இலங்கை
தொலைபேசி: +94212221019
செல்லிடப்பேசி: +94213207080

தகவல்:
குடும்பத்தினர்.

(65678) (10.17)

# மரண அறிவித்தல்கள்

## சிறிசேகரன் யசிந்தன்

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட சிறிசேகரன் யசிந்தன் 29.10.2015 வியாழக் கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சிறிசேகரன் - வசந்தகுமாரி தம்பதிகளின் அன்பு மகனும் தர்ஜினி, ருசாந்தன் (மலேசியா), ஜனகரன், ஜினோசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ் சென்ற கந்தசாமி - இரத்தினபூபதி தம்பதிகளின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தம்பி ராசா- தேவி தம்பதிகளின் பேரனும், விஜிதனின் மைத்துனரும் ஆவார்.



தோற்றம் 1996.02.14 — மறைவு 29.10.2015

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (01.11.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் மு.ப. 10 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புங்குடுதீவு மணற்காடு இந்து மயா னத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற வினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

புங்குடுதீவு. (65663)(11,15,17) 077 962 0113, 077 908 5820

## திருமதி அன்னப்பிள்ளை இராமலிங்கம்



அல்வாய் வடமேற்கு திக்கத்தினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னப்பிள்ளை இராமலிங்கம் 28.10.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் அமரர் இளையதம்பி இராமலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் அமரர்களான நாகம்மா, கணபதிப்பிள்ளை, தங்கராசா மற்றும் பொன்னம்மா, ஜயாத்துரை, பறுவதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சறோஜினி தேவி, பூலோக சவுந்தரி (பிரான்ஸ்), சகுந்தலா (கொலண்ட்), தர்மதாஸ் (நோர்வே), சிவதாஸ், இந்திராணி (பிரான்ஸ்), மயூரவதனி (அமரர்), ஜெயதாஸ் (லண்டன்), மோகனதாஸ் (பிரான்ஸ்), குகதாஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மயில்வாகனம், தர்மராசா (பிரான்ஸ்), கணேந்திரராசா (கொலண்ட்), விஜயலட்சுமி (நோர்வே), சிவனேஸ்வரி (அமரர்), குனேந்திரம் (பிரான்ஸ்), கோமதி, சுமித்திரா (பிரான்ஸ்), பாலசெல்வதி (வாழ்வின் எழுச்சி முகாமையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஜெனனி, டஸ்சினி, நிரஞ்சன், நிரஞ்சினி, நிர்மலன், நிறோஜினி, சோமினி, சுபாசினி, றமணன், தாரணி, ராகவன், சுதர்சன், றமணன், நளாயினி, சுகந்தினி, கிரி, சாந்தி, நிலானி, லக்சனி, சுகந்தன், பிரியணி, சாமினி, பாமினி, சாளினி, தர்சன், விதுஷன், அக்ஷயா, சௌமினி, இஷானி, சம்யுக்தா, மகிந்தன், சுனுஜன், தூரிகா, ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பிரகவி, வைஷ்ணவி, அஸ்வந்தி, சாருகேஸ், ஆருஸ், தனுஸ், அவனி, ரிஷி, ரிஷிசா, கயன், ரித்திகா, சூரியா, சயன், ஜெஸ்மிதா, சம்யூ, டனுஸ்கா, ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

## சிறில்டா கிறிஸ்தோப்பர்

சென்.பற்றிக்ஸ் வீதியைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிறில்டா கிறிஸ்தோப்பர் 29.10.2015 வியாழக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான கயித்தான் இரத்தினம் - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கஸ்பார் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கிறிஸ்தோப்பரின் அன்பு மனைவியும்,காலஞ்சென்ற தேவதாஸ் மற்றும் பங்ரொஸ் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற அன்ரன் மற்றும் கெனடி, அன்னறோஸ், ஜோண்சன், சில்வெஸ்ரர், டக்ளஸ், மேரிறொபிசலா, றெக்சன், ஸ்ரெலா, மேரிறஜனி, சரண்யா ஆகியோரின் பாசமிகு தாயாரும், றீற்றம்மா, தாசன், ஜெயந்தி, செல்லம், விஜிமலர், சகுந்தலா, ஜெயசீலன், வவா, அல்போன்ஸ், காலஞ்சென்ற பாபுஜி, ஜெனி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாளை (01.11.2015) ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

19/4, பூங்காவீதி,
குருநகர், யாழ்ப்பாணம். (65666)(11,15,17)

தகவல்:
பிள்ளைகள்.

## 3ஆம் ஆண்டு நிறைவும் கௌரவிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம்,ஒக்.31

கோண்டாவில்மக்கள்நலன் பேணும் அமைப்பின் மூன்றாம்; ஆண்டுநிறைவுவிழாவும் கௌரவிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை பிற்பகல்2 மணிக்குஅமைப்பின் தலைவர் செ.ஜெகபாலன் தலைமையில்ஆசிமடவிநாயகர் ஆலயமணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாணசபைஉறுப்பினர்பா.கஜதீபன், யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா மற்றும் நல்லூர் பிரதேச்சபை செயலாளர் திருமதி தி. அன்னலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். அத்துடன்சமூக சேவையைப் பாராட்டி செல்வி ஞானலோஜினி சிவஞானத்துக்கு கௌரவ பட்டம் வழங்கப்படவுள்ளதுடன், பத்திரிகைகளுக் களுக்கானசிறப்புவிருதுகளும்வழங்கப்படவுள்ளன. (ஐ–ரி5)

## சிறுவர் மாத விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.31

செலான் வங்கியின் சாவகச்சேரி கிளையின் ஏற்பாட்டில் சிறுவர்மாதத்தை முன்னிட்டு சிறு வர்களுக்கான வேடிக்கை வினோத விளையாட்டு நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அரங்கத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சிறுவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகளும்,அவர்களின் திறமை வெளிப்படுத்தும் நிகழ்வுகள், நாடகம், பரிசில் வழங்கும் நிகழ்வுகள் எனப்பல்வேறுநிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (ஐ–ரி5)

## திறப்பு விழாவும் கௌரவிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஒக்.31

அல்வாய், அல்வாய் வடமேற்கு கமக்காரர் அமைப்பின் கட்டடத்திறப்பு விழாவும் கௌரவிப்பு விழாவும் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அமைப்பின் தலைவர் சு.மகேஸ்வரன்தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக, நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு

கூறப்பட்டது.
இவ்வாறு கைது செய்யப்பட்டவர் இன்று யாழ். நீதிவான் முன்பாக நிறுத்தப்பட்டு மேலதிக விசாரணைக்கான அனுமதியுடன் கொழும்புக்குக் கொண்டு செல்லப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவரது கைது தொடர்பாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கும் தகவல் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (த-4-101)

## போரினால்

புலிகள் வெளியேற்றியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளைச் சில தமிழர்கள் விமர்சனம் செய்துள்ளபோதும் பெரும்பான்மையானவர்கள் நியாயப்படுத்தி வருகின்றனர்.
எனினும், பெரும்பான்மையான முஸ்லிம்கள் இன்னமும் தங்களது சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாது நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர்.
உள்ளக விசாரணை மற்றும் தீர்வுப் பொறிமுறைமையில் முஸ்லிம் மக்களின் கரிசனைகளும் உள்ளடக்கப்படும். அமைச்சுக்கள் அரசு நிறுவனங்கள் ஆகியனவற்றை இணைத்துத் தீர்வுத்திட்டம் வழங்கப்படும்.
குறிப்பாக நாளாந்தம் கஷ்டங்களை அனுபவித்து வரும் இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கப்படும். முஸ்லிம் மக்களினது பிரச்சினைகளுக்கு மட்டுமன்றி தமிழ் மற்றும் சிங்கள சமூகத்தவரின் பிரச்சினைகளுக்கும் தீர்வு வழங்கப்படும்- என்றார். (த-வ)

## சவால்களை

மாலை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.
இந்தச் சந்திப்பில், அண்மையில் இடம்பெற்ற சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக ஜனாதிபதி மதத் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தினார்.
தற்போதுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்குச் சகல மதங்களையும் பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் குழு வொன்றை நியமிப்பதற்கான யோசனையையும் ஜனாதிபதி இதன்போது முன்வைத்துள்ளார். இதற்காக 25 பேர்களைக் கொண்ட சர்வமதச் சபையொன்றை நியமிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் இதன்போது இணக்கம் காணப்பட்டது.
அரசு என்ற ரீதியில் சகலரும் ஒன்றிணைந்து சவால்களை எதிர்கொள்ள வேண்டும். அதில் உள்ள சிக்கல் தன்மைகளைக் கருத்திற்கொண்டு நாட்டின் எதிர்கால அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி இதன்போது மேலும் தெரிவித்துள்ளார்.
தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு அவசர தீர்வுகாணும் அதேநேரம், நீண்டகால தேசிய நல்லிணக்கத்தை உறுதி செய்யும் ஒரு வேலைத்திட்டத்தின் தேவை பற்றி தாம் அவதானம் செலுத்துவதாகவும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## கண்டி

முன்னணியின் தலைவரும், மத்திய மாகாண சபை உறுப்பி னருமான அசாத் சாலியைத் தொடர்புகொண்டு கேட்ட போது,
கண்டி தெல்வத்தைப் பகுதியி லுள்ள சிறுபான்மையினத்த வர்களுக்குச் சொந்தமான காணிகளைப் பெரும்பான்மையினத்தவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பத்தில் இந்தப் பகுதியில் 25 குடும் பங்கள் குடியேற்றப்படு வதாக இருந்தது. ஆனால் தற்போது 45 குடும்பங்கள் குடியேற்றப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. இதில் இரு முஸ்லிம் குடும்பங்களையும், மூன்று தமிழ்க் குடும்பங்களையும் தவிர ஏனைய 40 குடும்பங்களும் சிங்களக் குடும்பங்களாவர்.
இத்தகைய நடவடிக்கைகளில் அந்தப் பகுதிக்கான பிரதேச செயலர் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. வீடு, காணிகள் இல்லாதவர்களைக் குடியேற்றினாலும் பரவாயில்லை. ஆனால் அத்தகைய குடியேற்றம் நடைபெறவில்லை. காணி, வீடு உடையவர்களே குடியேற்றப்படுகின்றனர். இத்தகைய நிலையில் தெல்வத்தையில் வாழும் தமிழ்பேசும் மக்கள் தொடர்ந்தும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.
இந்த விடயங்கள் தொடர்பில் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்குத் தெரியப்படுத்தினேன். நிலைமை தொடருமாக இருந்தால் நல்லிணக்கம் சீர்குலையும் என்பதையும் தெரியப்படுத்தினேன். அவர் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாகத் தெரிவித்தார்-என்றார்.
இந்த நிலையில் நேற்று குறித்த பகுதிக்குச் சென்ற அரச அதிபர், அந்தப் பகுதியிலுள்ள அரசியல்வாதி ஆகியோர் புதிய குடியேற்றம் ஒன்றை அமைக்கும் வகையில் அடிக்கல் நாட்டியுள்ளனர். இதனால் பதற்றமடைந்த பொதுமக்கள் இதற்குஎதிர்ப்புதெரிவித்துமாவட்டசெயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-10)

## இலங்கைத் தமிழ்

சார்பில் தெரிவானவர்.
இந்த நகர முதல்வர் பதவிக்கு நடந்த வாக்கெடுப்பில், 6-5 என்ற வாக்குகளின் அடிப்படையில் தொழிலாளர் கட்சியின் வேட்பாளரை தோற்கடித்து சமந்தா இரத்தினம் வெற்றி பெற்றார்.
ஆஸ்திரேலியத் தொழிலாளர் கட்சியின் கோட்டையான இந்த நகர மன்றத்தில் கிறீன் கட்சி முதல் முறையாக நகர முதல்வர் பதவியைப் பெற்றுள்ளது. இதற்கு முன்னர் இரண்டு ஆண்டுகள் நகர முதல்வர் பதவிக்கு நடந்த தேர்தலின்போது, சமந்தா இரத்தினம் தோல்வியடைந்திருந்தார்.
இலங்கையில் பிறந்த இவர், நாட்டில் ஏற்பட்ட வன்முறைகளால், 1987 இல் இங்கிருந்து வெளியேறி, ஐரோப்பா, கனடாவில் வசித்த பின்னர், 1989ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் குடியேறினார்.
தனக்கு ஆறு வயதாக இருந்தபோது, 1983ஆம் ஆண்டு கொழும்பில் இனக்கலவரம் ஏற்பட்டதாகவும், அப்போது சிங்களவர்களால் தமிழர்களின் வீடுகள் எரிக்கப்பட்டுத் தமது குடும்பத்தினர் உள்ளிட்டோர் அகதிகளாகியதாகவும் சமந்தா இரத்தினம் நினைவுகூர்ந்துள்ளார். வீதிகள் எரிந்தன. பெரியவர்கள் அழுததை முதல்முறையாக பார்த்தேன் - என்று அவர் ஆஸ்திரேலிய ஊடகம் ஒன்றிடம் கூறியுள்ளார். (த-வ)

## குடாநாட்டில்

485 பேரும், ஓகஸ்ட்டில் 443 பேரும், செப்ரம்பரில் 635 பேருமாக 3 ஆயிரத்து 629 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுள்ளனர். அதன்படி முன்னைய மாதங்களுடன் ஒப்பிடுகையில் கடந்த சில மாதங்களாக இதன் தாக்கம் அதிகரித்து கடந்த மாதம் மிக அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
அவ்வாறே வயிற்றுளைவினால் 512 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜனவரியில் 33 பேரும், பெப்ரவரியில் 13 பேரும், மார்ச்சில் 17 பேரும், ஏப்ரலில் 37 பேரும், மேயில் 51 பேரும், ஜூனில் 53 பேரும், ஜூலையில் 95 பேரும், ஓகஸ்ட்டில் 65 பேரும், செப்ரெம்பரில் 83 பேரும் இந்தமாதம் 24 ஆம் திகதி வரை 65 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். வயிற்றுளைவின் தாக்கம் கடந்த 4 மாதங்களாக அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. வயிற்றுளைவினால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் 786 பேர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டபோதும் 512 பேருக்கு அதன் தாக்கம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இந்த நோய்களுக்கு நோய்த்தொற்றுப் பிரதான காரணமாக இருந்தபோதும் பழங்களை நன்றாகக் கழுவி உண்ணாமையாலும், கைகழுவாமல் உணவுகளைச் சமைப்பது, உணவுகளைக் கையாள்வது, கைகழுவாமல் உணவுகளை உட்கொள்வது, சுட்டாறிய தண்ணீர் குடிக்காமை, மலசலகூடங்களிலிருக்கும் இலையான்கள் - மலங்களில் இருக்கும் இலையான்கள் குடிதண்ணீரில், உணவுப் பொருள்களில் தங்கியிருப்பது, காலணி இல்லாது வெளியிடங்களுக்குச் சென்றுவருவது உள்ளிட்ட கவனக்குறைவான செயற்பாடுகளால் இவற்றின் தொற்றுக்கு உள்ளாகின்றனர். இதனால் அதிகளவில் சிறார்களே தொற்றுக்கு உள்ளாகின்றனர்.
எனவே மழைகாலமும் ஆரம்பித்துள்ள நிலையில் இத்தகைய தொற்றுக்களிலிருந்து பாதுகாப்பாக இருக்க சுட்டாறிய தண்ணீரை அருந்துங்கள். காய்கறிகள், பழங்களை நன்றாகக் கழுவி உண்ணுங்கள். சாதாரண நிலைமையில் கூட இவற்றின் தாக்கம் அதிகளவில் பதிவாகியுள்ளதனால் மழைகாலம் ஆரம்பித்துள்ளதனால் வழமையான அதிகரிப்பு ஒன்று ஏற்படவாய்ப்புள்ளது. எனவே வயிற்றோட்டம், வயிற்றுளைவு உள்ளிட்ட நோய்களிலிருந்து பாதுகாப்பாக இருங்கள்-என்றார். (த-4)

## கைதிகள்

பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் இவற்றை நாம் கணக்கில் எடுக்கவேண்டும்.
காரணம் இந்த அரசுக்குள் கூட ஒரு தரப்பினர் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு மட்டுமல்ல பிணைகூட வழங்கக்கூடாது என்று சொல்கின்றனர். அது மாத்திரமல்லாமல் எந்தவித சலுகையும் வழங்கக்கூடாது என்றும் சொல்கின்றனர்.
எனினும், தமிழர் தரப்பில் அனைவருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும், அதாவது தண்டனை வழங்கப்பட்ட கைதிகளுக்கும் சரி, வழக்கு தாக்கல் செய்யப்பட்ட கைதிகளுக்கும் சரி, பொலிஸ் விசாரணை மட்டத்தில் இருக்கும் கைதிகளுக்கும் சரி அனைவருக்கும் ஒட்டுமொத்தமாகப் பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்று சொல்கின்றார்கள்.
இந்த நிலையில் நாம் முதற்கட்டமாக பிணையைப் பெற்றுக்கொள்வோம் -என்றார். (த-வ)

## 10 ஆண்டுகளாக

ஏற்பட்ட காலநிலை மாற்றமும், யாழ்ப் பாணத்தில் சீரான மழை வீழ்ச்சி கிடைக்கப் பெறாமைக்கு காரண மாக அமைவதாக வளி மண்டலவியல் திணைக்கள அதிகாரி எஸ். கே.லோகேஸ்வரன் குறிப்பிடுகின்றார்.
யாழ்.மாவட்டத்தில் 1971ஆம் ஆண்டுதொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் ஆயிரத்து 231.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி சரா சரியாகக் கிடைக்கப் பெற்றுள் ளது. அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு ஆயிரத்து 869.5 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இதுவே கடந்த பத்து ஆண்டுகளில் பதிவான அதிகளவிலான மழை வீழ்ச் சியாகும். 2008 ஆம் ஆண்டு ஆயிரத்து 776.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த இரண்டு ஆண்டுகளைத் தவிர ஏனைய ஆண்டுகளில் மழை வீழ்ச்சி ஆயிரத்து 500 மில்லி மீற்றரைத் தாண்டவில்லை.
சீரான மழை வீழ்ச்சி கடந்த பத் தாண்டுகளில் கிடைக்கப் பெறாமைக்கான காரணம் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக் கள அதிகாரி எஸ்.கே.லோகேஸ் வரனிடன் தொடர்புகொண்டு கேட்டபோது, சூறாவளி மற்றும் தாழமுக்கம் காரணமாகவே வடக்கில் அதிக மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. சீரான மழை வீழ்ச்சியைத் தற்காலத்தில் எதிர்வு கூற முடிவதில்லை. 30 ஆண்டுகளுக்கு முன்னிருந்த காலநிலையுடன் ஒப்பிடுகையில் அதிக மாற்றங்கள் காணப்படுகின்றன. பனிப்பாறை உருகல் போன்ற நிகழ்வுகளால் சூழல் வெப்பநிலை மாற்றம் அதிகரித்து காணப்படுகின்றது. அத்துடன் மனித செயற்பாடுகளால் ஏற்படுத்தப்படும் சூழல் மாசடைவுகளால் வளிமண்டலம் மாசடைகின்றது. இந்த வளிமண்டல மாசு காலநிலை மாற்றங்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணியாக உள்ளது.
நகரமயமாதலினால் காடழிப்பு ஏற்படுகின்றது. இது ஒட்சிசன் - காபனீரொட்சைட் வாயுக்களின் சமநிலையை பாதிக்கும் காரணியாக உள்ளது. அதிகரித்துள்ள காபனீர் ஒட்சைட் வாயுவின் செறிவு, சூழல் வெப்ப உயர்வுக்குப் பிரதான காரணமாகும். இதன் விளைவாகப் பருவ மழை வீழ்ச்சி பெரிதும் பாதிப்படைகின்றது. அத்துடன் மழையின் வீழ்ச்சியை துல்லியமாக எதிர்வுகூற முடியாத நிலையும், திடீர் மழையும் ஏற்படுகின்றது.
கடந்த வருடத்தில் இடைப் பருவப்பெயர்ச்சிக் காலத்தில் மழை வீழ்ச்சி மிகக் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் இந்த வருடம் மிதமான மழை வீழ்ச்சி பெறப்பட்டது. இந்த வருடத்தின் மே மாதத்தில் எற்பட்ட திடீர் மழையினால் விவசாயிகள் பாதிப்படைந்தனர். வட கீழ் பருவப் பெயர்ச்சி காற்றின் மூலம் வட பகுதிக்கு மழை வீழ்ச்சியை எதிர் பார்க்க முடியும். நீர் வட்டத்தினை பாதுகாக்க வேண்டியதும் பொது மக்களின் கடமை. மழைநீரை சேகரிக்கும் நோக்கில் கட்டப்பட்ட குளங்கள், தற்போது மாசடைவுக் குள்ளாகியுள்ளது. எதிர்கால தேவையை கருதி செயற்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (த-5-ரி4)

## மயிலிட்டித்துறை

இடங்களிலும் அகதிகளாக வாழ்கின்றன. தம்மைச் சொந்த இடத்திற்குத் திரும்பிச் செல்ல அனுமதிக்குமாறு அந்த மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால், அந் தப் பகுதியை விடுவிப்பதற்கு இராணுவமும் கடற்படையும் மறுத்து வருகின்றன.
இந்த நிலையில், மயிலிட்டி மீன்பிடித் துறையை வளலாய் போன்ற வேறு இடத்தில் அமைத்துத் தருவதாக கடற்படையினர் ஒரு யோசனையை முன்வைத்தனர். மீனவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர். இது தொடர்பான செய்திகள் ஊடகங்களிலும் வெளியாகி இருந்தன. இதையடுத்து அண்மையில் நடந்த உயர்மட்ட அதிகாரிகள் கூட்டத்தில், மயிலிட்டி துறையை இடம்மாற்றுவதற்கு மீனவர்கள் சம்மதம் தெரிவிக்கின்றனர் என்றும் அதிகாரிகளே இந்த விடயத்தைக் குழப்பி வருகின்றனர் என்றும் கடற்படை அதிகாரிகள் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டியிருந்தனர்.
எனினும் மயிலிட்டித் துறையை இடம்மாற்றுவதற்கு மீனவர் சங்கங்கள் எவையும் இணக்கம் தெரிவிக்கவில்லை என்று அதன் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.
பருத்தித்துறையில் மீன்பிடித் துறை ஒன்றை அமைப்பதற்கான சம்மதக் கடிதத்தினையே கடற்படையினர் பெற்றுக்கொண்டனர் என்றும் அதனையே அவர்கள் தற்போது திரிபுபடுத்தி மயிலிட்டித் துறையை மாற்றுவதற்கு மீனவர்கள் இணக்கம் என்பதாகக் கூற முயற்சிக்கிறார்கள் போலுள்ளது என்றும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.
வடமராட்சி பகுதி மீனவ அமைப்புக்களை அண்மையில் கடற்படையினர் தமது முகாமுக்கு அழைத்திருந்தனர். ஆனால், கொழும்பிலிருந்து வந்த சில அதிகாரிகளால் ஏற்பட்ட தாமதத்தை அடுத்து சந்திப்பு பருத்தித்துறை பகுதியில் நடந்தது. பருத்தித்துறையில் புதிய மீன்பிடித் துறை ஒன்றை அமைப்பதற்கான சம்மதம் தொடர்பில் அங்கு வினவப்பட்டது. அதற்கு அந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட மீனவ சங்கங்கள் சம்மதம் வழங்கின. அது தவிர வேறு எதற்காகவும் நாம் சம்மதம் தெரிவிக்கவில்லை என்று உதயன் பத்திரிகையிடம் தெரிவித்தார் வடமராட்சி மீனவர் சமாசத் தலைவர் இ.அருள்தாஸ்.
சந்திப்பு முடிந்து கொழும்பு அதிகாரிகள் புறப்பட்டதும், கடற்படையினர் மீனவ அமைப்புக்களை மறித்து, சம்மதம் தெரிவித்த கடிதத்தை வழங்குமாறு கட்டாயப்படுத்தினர் என்றும் 'உதயன்' அறிந்தது.
அதன்போது, இடம்பெயர்ந்து வசித்து வரும் நிலையில் வடமராட்சியில் தற்போது தொழில் செய்யும் மயிலிட்டிச் சங்கமும் பருத்தித்துறையில் துறைமுகம் அமைவதில் தமக்கு ஆட்சேபனையில்லை என்ற கடிதத்தை கடற்படையினருக்கு வழங்கியுள்ளன. ஆனால், அது மயிலிட்டி துறைமுகத்தை மாற்றுவதற்கான சம்மதக் கடிதம் அல்ல என்று மயிலிட்டி மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.
மயிலிட்டித் துறைமுகத்தை வளலாயில் அமைப்பதற்கான யோசனையை இரண்டு மாதங்களுக்கு முன்னரே கடற்படையினர் முன்வைத்திருந்தனர். அது தொடர்பில் யாழ். மாவட்டச் செயலகம் மீனவர்களின் கருத்துக்களைக் கோரியது. மீனவ சங்கங்கள் ஒன்றிணைந்து அந்த யோசனையை நிராகரித்திருந்தன.
இதன் பின்னர் கடந்த 23ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் திருமதி வசந்த பெரேரா தலைமையில் பலாலியில் உயர்மட்டக் கலந்துரையாடல் இடம்பெற்றது. மயிலிட்டித் துறைமுகத்தை வேறு இடத்தில் அமைப்பது தொடர்பில் அங்கு பேசப்பட்டது. மீனவர்களுக்கு அதில் விருப்பமில்லை என்பதை அதிகாரிகள் அங்கு எடுத்துக்கூறினர்.
சிவில் அதிகாரிகளின் கருத்தை மறுத்த கடற்படை அதிகாரிகள் மீனவர் அமைப்புகள் சம்மதம் தெரிவித்து விட்டதாகவும் அதிகாரிகளே அதற்கு எதிர்ப்பை வெளியிட்டுக் குழப்பி வருகின்றனர் எனவும் குற்றம் சுமத்தினர்.
ஆனால், மயிலிட்டி துறையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்குத் தாம் ஒருபோதும் சம்மதம் தெரிவிக்கவில்லை என்று மீனவர் சங்கங்கள் 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தன.
கடற்படையினர் ஏமாற்றுகின்றனர். எமது மீனவ சங்கத்தினர் பருத்தித்துறையில் துறைமுகம் அமைப்பதற்கே சம்மதம் தெரிவித்தனர். பருத்தித்துறையிலும், குருநகரிலும் துறைமுகம் அமைக்கும் திட்டம் கடந்த அரசின் காலத்திலேயே இருந்தது. அதனடிப்படையில் பருத்தித்துறையில் துறைமுகம் அமைப்பது அந்தப் பகுதி மக்களுக்கு உகந்தது. அதற்குத்தான் சம்மதித்தார்கள். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், மயிலிட்டித் துறைமுகத்தை வேறு இடத்தில் அமைப்பதற்கு சம்மதிக்கவில்லை.
இப்படித் தெரிவித்தார் வலி. வடக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் அ.குணபாலசிங்கம். (உ-5)

## பயங்கரவாதச்

வவுனியா வைரவப்புளி யங்குளத்தில் 2009 ஆம் ஆண்டு செபமாலை இம்மானுவேல் என்ற இளைஞர் கைதுசெய்யப்பட்டார்.
அவரது வீட்டில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அதனை தாம் மீட்டதாகவும் பொலிஸார் அவருக்கு எதிராகக் குற்றஞ்சாட்டினர்.
அவருக்கு எதிராக சட்டமா அதிபரினால் வவுனியா மேல்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதுவரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவர் மீதான குற்றச்சாட்டு வழக்கு விசாரணைகளின்போது அவர் குற்றமற்றவர் என மேல்நீதிமன்றினால் அடையாளம் காணப்பட்டார். அதனையடுத்து அவர் விடுதலை செய்யப்பட்டார். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதால் மட்டுமே மீள்குடியமர்வுக்குத் தீர்வு

### சுட்டிக்காட்டுகிறார் அனுரகுமார திஸாநாயக்க



கொழும்பு, ஒக். 31
வடக்கு - கிழக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதன் மூலமே மக்களின் மீள் குடியேற்றப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயர் பாதுகாப்பு வலயங்கள் தற்போது தேவையற்றனவாக காணப்படுகின்றன. அவை இல்லாதொழிக்கப்படவேண்டும். வடக்கு - கிழக்கில் தற்போது முரண்பாடு இல்லாத காரணத்தினாலேயே அவற்றின் தேவை இல்லாது போயுள்ளன.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்காக, போர்க் காலத்தின்போது உயர் பாதுகாப்பு வலயங்கள் தேவைப்பட்டிருந்தன. பலாலி விமான நிலையத்திலிருந்து 28 கிலோ மீற்றர் வரை தூரமுள்ள பகுதிகள், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆட்லறிக் குண்டுத் தாக்குதல்களிலிருந்து விமான நிலையத்தைப் பாதுகாப்பதற்காக உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டியிருந்தது.

ஆனால் இப்போது முரண்பாடு இல்லை. எனவே உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றமுடியும்.

அத்தோடு, தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளோர் குடியமர்த்தப்பட்டிருப்பது அவர்களது சொந்த நிலங்களில் அல்ல. இது புதிய பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது-என்று தெரிவித்துள்ளார். (த-5)

# சிகரெட்டின் விலையை அதிகரிக்கக் கோரிக்கை

### விடுக்கின்றது சுகாதாரத்துறை

நுவரெலியா, ஒக்.31
புகைப் பொருள்கள் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்கு எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தில் சிகரெட்டின் வரியை அதிகரிக்குமாறு சுகாதாரத் துறையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புகைப்பொருள்கள் மற்றும் மதுபானங்களின் மீது ஒவ்வொரு ஆண்டு வரவு-செலவுத்திட்டத்திலும் வரிகள் அதிகரிக்கப்படுவது வழமை. அது போன்று இம்முறை வரவு-செலவுத் திட்டத்திலும் புகைப் பொருள்களின் மீதான வரியை அதிகரித்துச் சிகரெட் ஒன்றின் விலையைக் குறைந்தது 40 ரூபா வரை அதிகரிக்குமாறு சுகாதாரத்துறையினர் கேட்டுள்ளனர்.

புகைத்தலால் ஏற்படும் நோயினால் இலங்கையில் தினமும் சுமார் 60 பேர் சாவடைகின்றனர். அத்துடன் புற்று நோயாளர்களில் 60 வீதமானவர்கள் புகைப் பாவனையினாலேயே பாதிப்படைந்தனர் என்பது புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அத்துடன் புகைப்பாவனையினால் ஏற்படும் நோய்களுக்குச் சிகிச்சை வழங்குதற்காக வருடம் தோறும் 4ஆயிரத்து 500 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றபோதும் 21 ஆயிரம் பேர் சாவடைகின்றனர் எனவும் சுகாதாரத்துறையினர் குறிப்பிடுகின்றனர்.

இதேவேளை, புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் மருத்துவர் பாலித அபயக்கோன் கருத்துத் தெரிவிக்கையில்,

சிகரெட்டினால் ஏற்படும் செலவுகள் அதிகரித்துள்ளபோதும் சிகரெட் ஒன்றின் விலை குறைவடைந்துள்ளது. உண்மையாக வாங்கும் திறனின் அடிப்படையில் ஒரு சிகரெட் செலவு கீழே போய்விட்டது. நாங்கள் தனிநபர் வருமானம் அடிப்படையில் கணக்கிடும்போது உண்மையான வகையில் ஒரு சிகரெட் செலவு முன்பை விடக் குறைவாக உள்ளது. எண்ணியல் ரீதியில் விலை அதிகரித்துள்ளது என்று தோன்றுகின்றது. ஆனால் உண்மையான வகையில் விலை குறைந்துள்ளது. விளைவு, அந்த சிகரெட்டின் விலை, வருமான சதவீதத்தில் குறைந்துள்ளது என்று அர்த்தம்.

எனவே, தலா வருமானம் மற்றும் ஏனையவற்றுடன் ஒப்பிடும்போது தற்போது சிகரெட் ஒன்றின் விலை 40 ரூபாவாக இருக்கவேண்டும்.

மிக முக்கியமாக, சமூகத்தின் வறிய பிரிவைச் சேர்ந்தோரே சிகரெட்டுகளின் விலை அதிகரிப்பினால் பாதிக்கப்படுகின்றனர். அது காரணமாக ஒரு விலை அதிகரிப்பு அவர்களது புகைப் பாவனை அளவைக் குறைக்கும் வாய்ப்பு உள்ளது. எனவே ஜனாதிபதி சிகரெட் மீதான வரியை அதிகரிக்க நிதி அமைச்சுக்கு ஆலோசனை வழங்குவதாகத் தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார். (த-வ)

# மாணவர்கள் மீதான தாக்குதல்; அறிக்கை கோருகிறார் பிரதமர்

கொழும்பு, ஒக். 31
கல்வித்துறையில் நிகழும் சீர்கேடுகளுக்கு நீதிகோரி மாணவர்களினால் நடத்தப்பட்ட போராட்டத்தில், பொலிஸார் தடியடி தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

கொழும்பில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு முன்பாக உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி மாணவர்கள் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தின்போது பொலிஸார் மாணவர்கள் மீது நீர்த்தாரைப் பிரயோகத்தை மேற்கொண்டனர். அத்துடன் கண்ணீர் புகைக் குண்டுப் பிரயோகமும் இடம்பெற்றது. இதன் பின்னர், பொலிஸார் மாணவர்கள் மீது கண்மூடித்தனமாக - வெறித்தனமான - தாக்குதல்களைச் சரமாரியாக முன்னெடுத்தனர்.

இதனால் மாணவ - மாணவியர் பலர் காயமடைந்தனர். பொலிஸார் மாணவ - மாணவியரை இலக்கு வைத்து கலைத்துக் கலைத்துத் தாக்கியதில், பத்துக்கு மேற்பட்டோர் கடும் காயங்களுக்கு உள்ளாகினர். அத்துடன் பலருக்கு சாதாரண காயங்கள் ஏற்பட்டிருந்தது. மேலும் 39 மாணவ - மாணவியரையும் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

பொலிஸாரின் இந்தக் காண்டுமிராண்டித்தனமான நடவடிக்கை குறித்து மாணவர் அமைப்புக்களும், அரசியல்வாதிகளும் கடும் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர். அரசின் அமைச்சர்களும் குறித்த தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்திருந்தனர். இவ்வாறானதொரு நிலையில், குறித்த சம்பவம் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு சட்டம் ஒழுங்கு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (த-5)

# விண்ணிலிருந்து கடலில் விழும் மர்மப்பொருளால் ஆபத்தில்லை

### கலாநிதி சந்தன ஜெயரத்ன தகவல்

கொழும்பு, ஒக்.31
விண்ணில் இருந்து விழும், டபிள்யூ.ரி.எப். 1190 எப் எனப் பெயரிடப்பட்டுள்ள மர்மப் பொருளினால் இலங்கைக்கு எந்தவித ஆபத்தோ, சேதமோ ஏற்படாது என்று கலாநிதி சந்தன ஜெயரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்புப் பல்கலைக்கழகப்பௌதீகவியல் மூத்த விரிவுரையாளரும், ஆர்தர் சி கிளார்க் மையத்தின் வானியல் மற்றும் விண்வெளி விஞ்ஞானத் துறை ஆலோசகருமான கலாநிதி சந்தன ஜெயரத்ன இது குறித்துத் தகவல் வெளியிடுகையில்,

வானில் இருந்துவிழும்பொருள்பெரும்பாலும் வெடித்து, புவி மேற் பரப்பை அடைய முன்னர் எரிந்து விடும். எனவே இது குறித்து அச்சமடைய வேண்டிய தேவை இல்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட இடத்தில் இந்த மர்மப் பொருள் விழும் என்று எதிர்பார்க்க முடியாது. அது கடைசி நேரத்தில் மாறக் கூடும் -என்றார்.

விண்ணில் இருந்து விழும் இந்த மர்மப் பொருள், எதிர்வரும் 13ஆம் திகதி இலங்கைக்கு தெற்கே 100 கி.மீ தொலைவிலுள்ள கடற்பகுதியில் விழும் என்று நாசா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

# கொலை செய்த பின்னர் காட்டில் விருந்து வைத்த கொலையாளிகள்

கொழும்பு, ஒக். 31
அநுராதபுரம் பகுதியில் இரவு நேரக் களியாட்ட விடுதி உரிமையாளரைக் கோரமாகத் தாக்கிப் படுகொலை செய்த பின்னர் கொலையாளிகள், அருகிலிருந்த காட்டுப் பிரதேசத்தில் பெரும் விருந்து வைத்து தமது மகிழ்ச்சியைக் கொண்டாடி மகிழ்ந்துள்ளதாக, பொலிஸ் விசா ரணைகளில் தெரியவந்துள்ளது.

அநுராதபுரம் - கடபனஹா பகுதியில் இரவு நேரக் களியாட்ட விடுதி நடத்தி வந்தவரும் - பிரபல கராத்தே வீரருமான வசந்த சொய்சா (வயது-57) கடந்த சனிக்கிழமை இரவு 25 பேர் கொண்ட கும்பலினால் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்தார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் 14 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் இந்தக் கொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கடற்படைச் சிப்பாய் ஒருவரும் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை முகாமில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், கைது செய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் நடத்திய விசாரணையில், கொலை நடந்து முடிந்த பின்னர், சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சிராவஸ்திபுர தேக்குமரக் காட்டுப் பகுதிக்குச் சந்தேக நபர்கள் சென்றுள்ளனர். அங்கு வைத்தே மாபெரும் விருந்துபசாரம் இடம்பெற்றுள்ளது.

இதன் பின்னர், கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கோடரி, தடிகள் மற்றும் இரத்தம் தோய்ந்த ஆடைகள் என்பவற்றைத் தீயிட்டு எரித்துள்ளனர். பின்னர் கோடரியின் இரும்புப் பாகத்தை மண்ணுக்குள் புதைத்துள்ளனர். தற்போது பொலிஸார் இந்தக் கோடரியைக் கண்டுபிடித்துக் கைப்பற்றியுள்ளனர். மேலும் இந்தச் சம்பவம் தொடர்பில் தொடர் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகப் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (த-5)

# கருணாவின் தலைவிதி தமிழர்களின் கைகளில்

### அமைச்சர் ஹரிசன் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.31
கருணா அம்மான் என்று அழைக்கப்படும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன், தேர்தலில் போட்டியிட்டால் அவரை வெற்றியீட்ட வைப்பதா? இல்லையா? என்பதைத் தமிழ் மக்களே தீர்மானிக்கவேண்டும் எனக் கால்நடை அபிவிருத்தி அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா பிரதேசத்தில் உள்ள கால்நடை வளர்ப்புப் பண்ணைகளுக்கு நேற்று அமைச்சர் பயணம் செய்தார். இதன்போது ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

கருணா அம்மான், வடக்கில் தேர்தலில் போட்டியிடுவாரா? இல்லையா? என்பது எமக்குப் பிரச்சினையில்லை. எனினும் ஜனநாயக உரிமையின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுவதற்கான சகல உரிமையும் அவருக்கு உள்ளது.

எவ்வாறாயினும் அவர் வடக்கில் தேர்தலில் போட்டியிட்டால் அவரை வெற்றியீட்ட வைப்பதா? அல்லது தோல்வியடையச் செய்வதா என்பது குறித்து அங்குள்ள தமிழ் மக்களே தீர்மானிக்கவேண்டும்-என்றார். (த-வ)





[illegible] முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்[illegible] கொழும்பில் [illegible] நினைவுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஏற்பா[illegible] இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சு[illegible]நாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.ஏ.சுமந்திரன், ஹசன் அலி உட்படப் பலர் கலந்துகொண்டனர். [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் திருக்குடும்பக் கன்னியரிடம்

## மத்தியின் தொடரில் கொக்குவில் இந்துவை வீழ்த்தி





யாழ்ப்பாணம், ஒக். 31
விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ். மத்திய கல்லூரியால் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வீழ்த்தி கிண்ணத்தைக் கொண்டு சென்றது யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்.

யாழ். மத்திய கல்லூரியின் கூடைப் பந்தாட்டத்திடலில் இடம்பெற்ற நான்கு சுற்றுக்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் சுற்றின் முடி வில் 9:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது திருக்குடும்ப கன்னியர் மட அணி. இரண்டாவது செற்றை கொக்கு வில் இந்துக்கல்லூரி அணி 18:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்ற முதல் பாதியின் முடிவில் 24:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது கொக்குவில் இந்து.

இரண்டாம் பாதியின் முதலாவதும் ஆட்டத்தின் மூன்றாவதுமான சுற்றில் நிலைமை அவ்வாறே மாற்றம் பெற்றது. திருக்குடும்பக் கன்னியர் அந்த செற்றை 18:7 என்ற பெருமளவான புள்ளிகளின் வித்தியாசத்தில் கைப்பற்ற மீண்டும் திருக்குடும்பத்தின் ஆதிக்கம் மிகுந்திருந்தது. இறுதிச் சுற்றில்எதுவேண்டுமென்றாலும் நடக்கலாம் என்ற நிலைமை. இருப்பினும்தொடர்ந்தும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிய திருக்குடும்பக் கன்னியர் அணி 16:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்தச் செற்றையும் கைப்பற்றி ஒட்டுமொத்தமாக 53:44 என்ற புள்ளிகளின் வித்தியாசத்தில் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இறுதி ஆட்டத்தின் சிறந்த வீராங்கனையாக திருக்குடும்பக் கன் னியர் மட அணியின் சபானா வும், தொடரின் சிறந்த வீராங்கனையாக கொக்குவில் இந்துக்கல்லூரியின் கஜீலா வும் தெரிவாகினர். (ம-23)

## இந்து மகளிர் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 31
வேம்படி மகளிர் அணியைப் போராடி வீழ்த்தி விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்தில் மூன்றாமிடத்தை தனதாக்கியது யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி.

யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் பொ. விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்படும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவின் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதிக்கொண்டது. மிகவும் இறுக்கமான போராட்டத்துக்கு முடிவில் 28:26 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி. (ம-23)

## ஏஞ்சலுக்கு மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஒக். 31
விபுலாணந்தன் ஞாபகார்த்த கிண்ணத் தொடரில் ஆண்கள் பிரிவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மூன்றாமிடத்துக்கான ஆட்டத்தில் மல்லாவி மத்திய கல்லூரி அணியை 58:33 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இலகுவாக வீழ்த்தி மூன்றாமிடத்தை தனதாக்கியது மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி. (ம-23)

## இறுதியாட்டத்துக்கு தகுதிபெற்றது விண்மீன்

### நியூட்டனின் தொடரில் கலைமதியை வீழ்த்தி



கரணவாய், ஒக். 31
யாழ். மாவட்ட ரீதியாக நடை பெற்று வரும் உதைபந்தாட்டத் தொடர் ஒன்றில் கலைமதி விளையாட்டுக் கழகத்தை இலகுவாக வீழ்த்தி முதல் அணியாக இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது பலாலி விண்மீன் விளயாட்டுக் கழகம்.

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்திலேயே நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் விண் மீன் விளையாட்டுக் கழக மும் நவிண்டில் கலைமதி விளை யாட்டுக்கழகமும் மோதின. ஆட்டத்து டன் இணைந்த முறையில் விண்மீ னின் ஆதிக் கமும் ஆரம்பமாகியது. ஆட்டத்தின் 9ஆவது, 18ஆவது நிமிடங்களில் உதயதாஸ் இரண்டு கோல்களைப் பதிவுசெய்ய 2:0 என்ற கோல் கணக்கில் விண்மீனின் ஆதிக்கத்துடன் முடிவுக்கு வந்தது முதல் பாதி.

பழிதீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கியது கலைமதி. பயன் கிடைத்தது 6ஆவது நிமிடத்தில். பானுஜனின் மூலம் கோல் பதிவாக தற்பொழுது நிலைமை 2:1. அடுத்த சில நிமிடங்களிலேயே விண்மீன் தனது மூன்றாவது கோலைப் பதிவு செய்து 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ம-108)

# பல்கலையின் தடகளத் தொடர் சம்பியனானது கலைப்பீடம்

யாழ்ப்பாணம், ஒக். 31
யாழ். பல்கலைக்கழக பீடங்களுக்கு இடையிலான நடப்பு வருடத்தின் தடகளத் தொடரில் ஒட்டுமொத்த புள்ளிகளின் அடிப்படையில் கலைப்பீடம் சம்பியனாகியுள்ளது.

கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்தத் தொடரில் கலைப்பீடம் முதலாம் இடத்தையும், முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம் இரண்டாம் இடத்தையும், விஞ்ஞான பீடம் முன்றாம் இடத்தையும் தமதாக்கின.

கடந்த காலங்களில் உயிர்ப்புடன் இருந்த சாதனைகளில் 7 சாதனைகள் நடப்பு வருடத்தில் தகர்க்கப்பட்டுள்ளன. அதன்படி முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவி எஸ். தாரணி குண்டு எறிதல், ஈட்டி எறிதல், தட்டு எறிதல் ஆகியவற்றிலும் கலைப்பீட மாணவி எஸ்.லோஜிகா 1,500 மீற்றர், 3,000மீற்றர் ஓட்டங்களிலும், கலைப்பீட மாணவி ஆர். துஸ்யந்தி 800 மீற்றர் ஓட்டத்திலும், விஞ்ஞான பீட மாணவன் ஆர்.எம்.ஓ.டி.ரணசிங்க ஆண்களுக்கான குண்டுஎறிதலிலும் நிலைநாட்டிய சாதனைகளே அவ்வாறு படைக்கப்பட்ட புதிய சாதனைகளாகும்.



ஆண்கள் பிரிவில் சிறந்த தட வீரனாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவன் எஸ். பிரதாப்பும், சிறந்த கள வீரனாக கலைப்பீட மாணவன் ஏ.சிறியும் தெரிவு செய்யப்பட்டனர். பெண்கள் பிரிவில் சிறந்த தட வீராங்கனையாக கலைப்பீட மாணவி எஸ். பார்த்தீபாவும், சிறந்த கள வீராங்கனையாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவி எஸ். தாரணியும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் என். ஞானகுமரனும், சிறப்பு விருந்தினராக முன்னாள் யாழ்.பல்கலைக்கழக தடகள ஆண்கள் அணியின் தலைவரும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் கதிரியக்கவியல் நிபுணருமாகிய வைத்திய கலாநிதி ஏ. அன்ரன் ஜெனிலும் கலந்து கொண்டனர். (ம-23)

## சதுரங்கத் தொடர் நாளை

மாங்குளம், ஒக். 31
முதலமைச்சர் கிண்ணத்துக்கான யாழ். கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சதுரங்கத் தொடர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.கோட்ட, கோப்பாய்க் கோட்ட, நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான தொடர்களில் முதல் 10 இடங்களைப் பெற்ற மாணவர்கள் இந்தத் தொடரில் கலந்து கொள்ள முடியுமென யாழ். கல்வி வலயத்தின் உடற்கல்வி உ[illegible] விப் பணிப் பாளர் என்.தய[illegible] வித்துள்ளார். (ம-422)

# யைற்ஸின் பரிசளிப்பு நிகழ்வு

கரணவாய், ஒக். 31
பருத்தித்துறை ஹாட்லி யைற்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வர்ண இரவுகள் நிகழ்ச்சி இன்று சனிக் [illegible] [illegible]த்தில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 3 மணிக்கு சிநேகபூர்வ உதைபந்தாட்டம் இடம்பெற்று கழக வீரர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் பரிசளிப்பும் இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் நிதியத்தின் செயலாளருமான அ.திருநீலகண்டனும் சிறப்பு விருந்தினராக கல்லூரியின் முதல்வர் த.முகுந்தன் மற்றும் பழைய மாணவனும் வட மாகாண சபை உறுப் பினருமான சு.சுகிர்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுமினி சந்தேகம் முதல் டெஸ்ட்டில்



இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான 4 ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்காவின் சகலதுறை வீரர் டுமினி விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
இந்தியா - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தின் பொழுது டோனி அடித்த பந்து, பந்துவீசிக் கொண்டிருந்த டுமினியின் பெருவிரலைத் தாக்கியது. குறித்த பந்துப்பரிமாற்றத்தின் இறுதிப்பந்தையும் டோனி 158 கிலோ மீற்றர் வேகத்தில் நேராக விளாச அது மீண்டும் அவரது கையைப் பதம் பார்த்துக் காயத்தை ஏற்படுத்தியது. இதனால் இறுதி இரண்டு ஆட்டங்களில் இருந்தும் அவர் விலகினார். காயம் குணமடையாத நிலையில் டெஸ்ட் தொடருக்கான பயிற்சி ஆட்டத்திலும் அவர் பங்கேற்கவில்லை. இதனால் 5ஆம் திகதி நடைபெற இருக்கும் முதல் டெஸ்ட்டில் டுமினி விளையாடுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.
குறித்த விடயம் தொடர்பாக தென்னாபிரிக்க அணியின் முகாமையாளர் தெரிவிக்கையில் - 'டுமினியின் காயம் இன்னமும் குணமடையவில்லை. அவரது விலகல், 4ஆவது ஒருநாள் ஆட்டத்தில் எமக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அந்த நிலைமை டெஸ்ட் தொடரிலும் தொடரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக நவம்பர் மாதம் 5ஆம் திகதி நடைபெறவிருக்கும் முதல் டெஸ்ட்டில் டுமினி விளையாட வாய்ப்புக்கள் குறைவாக உள்ளன. அவர் விலகினால் நிச்சயம் அது அணிக்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்தும். ஏனெனில் அவர் ஒரு அற்புதமான சகலதுறை வீரர் - என்றார்.
(ம)



## எந்த இடத்திலும் களமிறங்கத் தயாராம்

இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் எந்த இடத்திலும் களமிறங்கத் தயாராக இருப்பதாக புஜாரா தெரிவித்துள்ளார்.
டெஸ்ட் தொடர் தொடர்பாக புஜாரா தெரிவித்ததாவது 'இந்திய அணியில் நான் எந்த இடத்தில் களம் இறக்கப்படுவேன் என்று தெரியாது. ஒரு சமயம் இந்திய அணியில் இடம்பெற்றால், தலைவர் மற்றும் பயிற்சியாளருடன் கலந்து பேசி அவர்கள் எந்த இடத்தில் என்னைக் களமிறக்க இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வேன். அணியின் தேவையைச் சார்ந்து நான் விளையாடத் தயாராக இருக்கிறேன். எல்லாவகையிலும் விளை யாடுவதற்காக நல்லமுறையில் தயாராக இருக்கிறேன். தென்னாபிரிக்கா ஒரு பலமான அணி. டெஸ்ட் ஆட்டங்களில் அந்த அணியின் பந்துவீச்சு அற்புதமாக இருக்கும்.' என்றார்.
இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில், முதல் இரண்டு ஆட்டங்களிலும் சேர்க்கப்படாத புஜாரா, கடைசி டெஸ்ட்டில் களமிறங்கி 145 ஓட்டங்களை விளாசினார். ஆனால், தற்போது நடைபெற்று வரும் ராஞ்சி கிண்ணத் தொடரில் ஐந்து இன்னிங்ஸில் 64 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். இதனால் புஜாரா இந்திய அணியின் 11 வீரர்களில் இடம் பெறுவது சந்தேகமாகியுள்ளது.
(ம)

## இலங்கை - மே.தீவுகள் ஆட்டம் நாளை ஆரம்பம்



இலங்கை- மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் நாளை கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் ஆரம்பமாகின்றது.
இரண்டாவது ஆட்டம் அதே மைதானத்தில் எதிர்வரும் 4ஆம் திகதியும் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் பல்லேகலே சர்வதேச மைதானத்தில் எதிர்வரும் 7ஆம் திகதியும் நடைபெறும். மத்தியூஸின் தலைமையில் மூன்று அறிமுக வீரர்களுடன் களமிறங்குகிறது இலங்கை அணி. மலிங்க மீண்டும் அணியில் இணைந்தமை கூடுதல் பலமாகக் கணிக்கப்படுகிறது.
(ம)

## சச்சின் இல்லையென்றால் 2007இல் ஓய்வுபெற்றிருப்பேன் -சேவாக்

2007ஆம் ஆண்டு அணியிலிருந்து தாம் நீக்கப்பட்ட பின்னர் உடனடியாக ஓய்வை அறிவிக்க முடிவெடுத்ததாகவும், ஆனால் சச்சின் தன்னைத் தடுத்ததால் அந்த முடிவைக் கைவிட்டதாகவும் விரேந்திர சேவாக் தெரிவித்துள்ளார்.
குறித்த விடயம் தொடர்பாக சேவாக் தெரிவித்ததாவது 'எந்த ஒரு வீரரும் அவரது கிரிக்கெட் வாழ்வின் உச்சத்தில் ஓய்வு பெறவே விரும்புவார்கள். சர்வதேச கிரிக்கெட்டில் ஆடிய பொழுதே ஓய்வு பெற்றிருந்தால் நானும் பிரியாவிடை உரை ஆற்றியிருப்பேன். ஆனால் விதி எனக்காக வேறு ஒன்றை வைத்திருந்தது. 2007ஆம் ஆண்டு அணியிலிருந்து நீக்கப்பட்டவுடன் ஓய்வை அறிவிக்க முடிவெடுத்தேன். ஆனால் சச்சின் தான் அவ்வாறு செய்ய வேண்டாம் என்று தடுத்து நிறுத்தினார். அந்த வகையில் உலகக்கிண்ணம் வென்ற இந்திய அணியில் எனது பெயரும் மிக முக்கியமாக அமைய சச்சினே காரணம். 2007ஆம் ஆண்டில் சச்சின் என்னைத் தடுத்திருக்காதுவிட்டால் 2011 ஆம் ஆண்டு பவிலியனில் உட்கார்ந்து ஆட்டத்தைப் பார்த்திருப்பேனே தவிர மைதானத்துக்குள் இறங்கியிருக்கமாட்டேன்' என்றார்.
(ம)



## பாகிஸ்தான் - இங்கிலாந்து இறுதி டெஸ்ட் நாளை

பாகிஸ்தான் - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 3ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை டுபாயில் ஆரம்பமாகிறது.
ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதல் இரண்டு ஆட்டங்களில் முதலாவது ஆட்டம் சமநிலையிலும் இரண்டாவது ஆட்டம் பாகிஸ்தானுக்குச் சார்பாகவும் முடிவடைந்திருந்தமையால் பாகிஸ்தான் தற்பொழுது 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை வகிக்கிறது. இதனால் நாளைய ஆட்டத்தில் வென்றேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்குகிறது இங்கிலாந்து அணி. மாறாக ஆட்டம் சமநிலையில் முடிந்தால் கூட தொடர் பாகிஸ்தானிடம் சென்றுவிடும்.
(ம)

## பாகிஸ்தானிடம் மன்னிப்புக் கேட்டது இந்தியா

இந்திய -பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான தொடர்கள் தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சுவார்த்தை குழப்பத்தில் முடிந்தமைக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை மன்னிப்பு கேட்டுக்கொண்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.
குறித்த இரண்டு நாடுகளுக்கும் இடையிலான தொடர் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த இந்தியா சென்றிருந்தார் பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் சகாரியார் கான். அவர் மும்பையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் தலைவர் மனோகருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் சமயத்தில் சிவசேனா என்ற அமைப்பு நடத்திய கலவரத்தினால் பேச்சுவார்த்தை கைவிடப்பட்டது. இதற்கு வருத்தம் தெரிவித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்குக் கடிதம் எழுதியுள்ளது. இதனை பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.
(ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேலையாள்கள் தேவை**

கிளிநொச்சியில் இயங்கும் புடைவையகத்துக்கு வேலையாள்கள் தேவை.

தொடர்பு:
077 491 2837, 077 359 6052

**வேலைவாய்ப்பு**

யாழ். நகரில் உள்ள அலுவலகம் ஒன்றுக்கு போட்டோ பிரதி செய்யக்கூடியவர், பழக விரும்புபவர் மற்றும் எழுதுநர் தேவை (இரு பாலாரும்)

077 217 4741

**அமெரிக்க லொத்தர் விசா**

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இன்றும் 1 நாளில் பதிவுகள் நிறைவடைகின்றன

V2 TRAVELS

யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240
நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- ★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக (Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- ★ எமது கற்கை நெறிகள் Reading, Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- ★ Excellent Teacher's Panel & Individual Attention
- ★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழுவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும்.

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
07.11.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

Batches Start On

02.11.2015@10.00am | 03.11.2015@ 9.00am | 04.11.2015@10.00am | 05.11.2015@ 9.00am | 06.11.2015@ 9.00am

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road), Above Sathosa SM, Jaffna. Tel: 021-2224550

HotLine(S) 0777585913, 0777222422, 0776555677


# அரையிறுதிக்கு தகுதிபெற்றார் ரஷ்யாவின் மரிய செரபோவா


**CCTV**

100% தொழில் சார் செயன்முறை பயிற்சிநெறி



CCTV துறையில் வல்லுனர் ஆவதற்கு இதோ ஓர் அரிய வாய்ப்பு

அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்

Next Batch : 07-November-2015

ICS EDUCATION 77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம் 021-4926222, 077-3013060




சர்வதேச ரென்னிஸ் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்கு மட்டுமாக வருட இறுதியில் ரென்னிஸ் தொடர் நடத்தப்படுவதுண்டு. இதன்படி நடப்பு வருடத்துக்கான தொடர் சிங்கப்பூரில் நடைபெற்று வருகின்றது. குறித்த தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டமொன்றில் செரபோவா நேர்செற்களில் பென்னட்டாவை வீழ்த்தினார்.

முதல் செற்றில் பென்னட்டா அதிக நெருக்கடி கொடுத்தார். இதனால் அந்த செற்றை நீண்ட இழுபறிப்பட்டு 7:5 எனக் கைப்பற்றிய செரபோவா இரண்டாவது செற்றை 6:1 என மிக இலகுவாகக் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற்களில் வெற்றிபெற்றார். இந்த வெற்றியின் மூலம் லீக் சுற்றில் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்றவர் என்ற பெருமையுடன் அரையிறுதிக்குள் நுழைந்தார் செரபோவா. இந்த தோல்வியின் மூலம் தொடரில் இருந்து வெளியேறிய பென்னட்டா ஏற்கனவே அறிவித்தபடி ரென்னிஸில் இருந்து ஓய்வு பெற்றார்.

(ம)


**CHEMISTRY**

A/L 2016 DAY CLASS

DIAS B.Sc (Hons)
Spl in Chem

- ✓ துரித மீட்டல்
- ✓ கடந்தகால வினா - விடை
- ✓ அச்சடிக்கப்பட்ட பாடக்குறிப்புக்கள்
- ✓ வாராந்தப் பரீட்சை
- ✓ மாதிரி வினாத்தாள்கள்

11.30 am- 1.00pm

NEW SCIENCE WORLD
Navalar Road -Brown Road Junction. Jaffna.


## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் குணலிங்கம்

(உரிமையாளர்:- குணலிங்கம் பல்பொருள் வாணிபம் ஆனைப்பந்தி சந்தி)

பூங்குடுதீவு, 06ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குணலிங்கம் 29.10.2015 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிஜயா-தெய்வானை தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், சண்முகநாதன், கோமளராணி, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நவரத்தினம் மற்றும் ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அனுஜா (பிரான்ஸ்), சுகந்தினி (கனடா), கலைமதி (பிரான்ஸ்), குமுதா, சபேசன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நவராசா (நகுலன்-பிரான்ஸ்), திலீபன் (கனடா), கலைச்செல்வன் (பிரான்ஸ்), கிருஷ்ணரூபன், பவிதா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், செல்லத்துரை, நல்லத்தம்பி, கந்தசாமி, இரத்தினராஜா மற்றும் பாலசுந்தரம் (இந்தியா), இரத்தினகோபால் (லண்டன்), யோகாம்பிகை (ஜேர்மன்), கமலாநிதி (பிரான்ஸ்), ஞானசவுந்தரி, வரதலெட்சுமி, மகாதேவன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோமளம், கமலேஸ்வரி, மகேஸ்வரி, கிறிஷ்ரபெல், சிவபாக்கியம், வசந்தா, திருமலர், சிவனேசன், காலஞ்சென்ற சோதிலிங்கம் ஆகியோரின் சகலனும், ராகவி, காவ்யா, செருந்தி, எழிலி, பொழிலன், இனியன், பிரமி, வைணவி, கஜய், சாய்னிதா, சைமிரா, தீப்பிகா, தன்சிகா, அஸ்விகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.11.2015) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு மு.ப. 10.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.298, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம். (65668) (10.17)

தகவல்: குடும்பத்தினர்.
சபேசன் (மகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி சந்திரலீலா குணசிங்கம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரலீலா குணசிங்கம் நேற்று முன்தினம் (29.10.2015) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் மற்றும் நேசரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ் சென்ற குணசிங்கத்தின் பாசமிகு மனைவியும் சந்திரவதனா (பிரான்ஸ்), குணதாஸ்(பிரான்ஸ்), சந்திரதாஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகேஸ்வரன்(பிரான்ஸ்), யசோதாதேவி(பிரான்ஸ்), யசிந்தா ஆகியோரின்அன்பு மாமியாரும் இந்திராதேவி, சுகிர்தராணி, சங்கரலிங்கம், சத்தியபாமா (சுவிஸ்)ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் சங்கரப்பிள்ளை, மங்கயற்கரசி, தவராசா(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் நவீன், சிந்துஜா, சாருஜன், சுபாதி, தீபிகா, திலக்ஷி, துஷாரா ஆகியோரின் அன்புப் போத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம்(02.11.2015) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஈவினை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு,
புன்னாலைக்கட்டுவன். (65646) (14.15)

தகவல்:
குடும்பத்தினர்.

### சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெறுகிறார் நாதன் மக்கலம்



நியூஸிலாந்துஅணியின் சகலதுறை வீரரான நாதன் மக்கலம் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடை பெறுவதாக அறிவித்துள்ளார். 35வயதான அவர் 2007ஆம்ஆண்டு தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும்- 2009 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் அறிமுகமானார். 84 ஒருநாள் ஆட்டங்களில் 4 அரைச் சதங்களுடன் 63 இலக்குகளையும்- 61 டெஸ்ட் ஆட்டங்களில் 55 இலக்குகளையும் வீழ்த்தியுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.